2014, January 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



பொதுநலவாய மகாநாட்டிலிருந்து 2014 ஜெனீவா நோக்கி...

ஸ்ரீதரனின் பாராளுமன்ற உரையும் கிளம்பிய எதிர்ப்புக்களும்

அகாசியின் அறிவுரைகளுக்கு அப்பால்...

பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவுடன் ஒரு நேர்காணல்

ஜெயமோகனின் வலசைப்பறவை

மண்டேலாவின் மறைவும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் எதிர்காலமும்

தமிழகத்தில் அரங்கேறப்போகும் கூட்டணிக்காட்சிகள்

நேபாளத் தேர்தலில் மாவோயிஸ்ட்டுகளின் வீழ்ச்சி

# ஜப்பானின் நிலைப்பாடு மாறுகிறதா ?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# Matrimonial Service for Sri Lankan Brides & Grooms

உலகம் முழுவதுமுள்ள இலங்கையர்களுக்கான

பிரத்தியேக திருமணசேவை

**THIRUMANAM.LK™**

இருமனம் சேர்ந்தால் திருமணம்



இன்றே உங்கள் அங்கத்துவத்தைப் பதிவு செய்து

உங்கள் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுங்கள்

www.thirumanam.lk


மௌனம் என்பது வேறு வழிகளினூடாக முன்னெடுக்கப்படுகின்ற வாக்குவாதம்.
- சே குவேரா

சமகாலம்
2014, ஜனவரி 01 - 15
பக்கங்கள் - 68




21
ஸ்ரீதரனின் பாராளுமன்ற உரையும் கிளம்பிய எதிர்ப்புகளும்
- சுரேந்திர அஜித் ரூபசிங்க



34
வலசைப்பறவை
- பி.ஜெயமோகன்

46 மண்டேலாவின் மறைவும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் எதிர்காலமும்



38
நேபாளத் தேர்தலில் மாவோயிஸ்டுக்களின் வீழ்ச்சி
- அ.மார்க்ஸ்




53
அரங்கேறப்போகும் கூட்டணிக்காட்சிகள்
- முத்தையா காசிநாதன்

11 இலங்கையின் முன்னால் உள்ள சவால்கள்
- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து



28
அகாசியின் அறிவுரைக்கு அப்பால்...
- என்.சத்தியமூர்த்தி

50 ஊழலுக்கு எதிரான அரைவாசி வெற்றி
- எம்.பி.வித்தியாதரன்




59
கண் மூடிய ஊதாப்பூ
- ச.இராகவன்



14
சகல முனைகளிலும் கெடுதி நேருவதைத்தவிர்ப்பது எப்படி?
- பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

27 மேற்குலகுடன் சேர்ந்து பொதுவான நிலைப்பாட்டிற்கு நகர்கிறதா ஜப்பான்?
- கலாநிதி ஜெஹான் பெரேரா

63 தொக்கிய விளைவுகள் அற்ற மதுபானம்
- டாக்டர் எம்.கே.முருகானந்தன்



66
கடைசிப் பக்கம்
க.க.உதயகுமார்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# ஜெனீவா கூட்டத் தொடரும் ஜனாதிபதியின் அழைப்பும்

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கான நேரம் நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில், நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக பல்வேறு திசைகளிலும் இலங்கை அரசாங்கம் காய்களை நகர்த்துகின்றது. ஜெனீவாவில் தமக்கு ஆபத்து எதுவும் காத்திருக்கவில்லை என்பதுபோல அரசாங்கம் காட்டிக்கொண்டாலும், அரசாங்கத்தின் நகர்வுகளில் பதற்றம் ஒன்றைக் காணமுடிகின்றது. இந்த நகர்வுகள் ஜெனீவாவில் இலங்கை எதிர்கெண்டுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு எந்தளவுக்குக் கைகொடுப்பதாக அமையும் என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் இன்று எழுப்பப்படும் கேள்வி. அதேவேளையில், பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற மனப்பூர்வமான நோக்கத்துடன் அல்லாமல் நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஏற்கனவே ஜெனீவாவில் இரண்டு பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. இந்த இரண்டையும்விட தற்போது கொண்டுரப்படவுள்ள தீர்மானம் கடுமையானதாக இருக்கும் எனக் கருதுவதற்குக் காரணங்கள் உள்ளன. முன்னைய இரண்டு தீர்மானங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருந்தது. பிரேரணைகளைக் கொண்டுவந்த அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இதனால் இலங்கை மீது சீற்றமடைந்திருக்கின்றன. இரண்டாவதாக பொதுநலவாய உச்சி மகாநாட்டில் பங்குகொள்வதற்காக கொழும்பு வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், இலங்கைக்கு எதிராக கடுமையான பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதை கொழும்பில் வைத்தே வலியுறுத்தியிருந்தார். இதனைவிட கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமும் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களிலும் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளின் கடுமையைக் குறைப்பதில் இந்தியா முக்கிய பங்களிப்பை வழங்கியது. ஆனால், இந்த முறை அவ்வாறான பங்களிப்பு ஒன்றை வழங்கும் நிலையில் இந்தியா இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இந்தியப் பொதுத் தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் எனக் கூறப்படும் நிலையில், இலங்கையைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் இந்தியா முன்னைய வருடங்களைப் போல தீவிரமாக இறங்கும் என நம்பமுடியாது.

இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது மார்ச் மாதம் நடைபெறப்போகும் ஜெனீவா கூட்டத் தொடர் இலங்கைக்கு ஒரு நெருப்பாறையைக் கடப்பது போன்றதாகவே இருக்கப்போகின்றது. இதனைத் தெரிந்துகொண்டுள்ள நிலையில்தான் இலங்கை அரசாங்கமும் இப்போது சில காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றது.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் என்பவற்றை அடிப்படையாக வைத்தே இலங்கைக்கு எதிரான வியூகத்தை சர்வதேச சமூகம் அமைக்கின்றது. போர் முடிவுக்கு வந்த பின்னர் இவ்விரு விடயங்களிலும் இலங்கை அரசாங்கம் ஒரு அங்குலம் கூட நகரவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் கூறிக்கொண்டாலும் தமக்கு இசைவான வகையிலேயே இது குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. போர் இழப்பு பற்றிய தேசிய மதிப்பீடு இதற்கு ஒரு உதாரணமாக உள்ளது. போரின் இறுதிப் பகுதியில் பாரிய அளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருப்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருக்கின்ற போதிலும், அதற்காக பொறுப்புக்கூற அரசாங்கம் தயாராகவில்லை. போரின் வெற்றியை தமது அரசியல் வெற்றியாக மாற்றிக்கொண்டுள்ள அரசாங்கம், படையினரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதற்கு இணங்கும் என எதிர்பார்க்கமுடியாது. இது அரசாங்கத்துக்கே ஆபத்தானதாக அமையலாம்.

நல்லிணக்கத்தைப் பொறுத்தவரையிலும் இதேபோன்ற ஒரு நிலைதான் காணப்படுகின்றது. போரில்தான் வென்றுவிட்டோமே இனி எதற்காக தமிழர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு வெற்றி மமதைப் போக்கு ஆளும் தரப்பினரிடம் காணப்படுகின்றது. போர் இடம்பெற்ற போது 13+ எனக்கூறிய ஆளும் தரப்பினர், 13 இல் உள்ளதைக்கூட வெட்டிக்குறைப்பதற்கு முனைந்திருப்பது இதனைத்தான் காட்டுகின்றது.

ஆனால், தற்போது உருவாகியிருக்கும் சர்வதேச அழுத்தங்கள் எதனையாவது செய்தாகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை அரசுக்குக் கொடுத்துள்ளன. இந்த அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக இரு விதமான நகர்வுகள் அரசாங்கத்தினால் இப்போது முன்னெடுக்கப்படுகின்றது. அதில் ஒன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்

*(29ஆம் பக்கம் பார்க்க...)*

கடிதங்கள்













### வடக்கு முதன்மை அரசியல்

தமிழர் அரசியல் வடக்கின் அரசியலாக சுருங்கிச் சென்றிருக்கிறதா? என்ற தலைப்பில் யதீந்திரா என்பவர் எழுதிய கட்டுரையில் அவரின் ஆதங்கம் புரிந்தது. அதற்கான பதில்களும் இலகுவானவை. அதனை அவர் தெரிந்துகொள்ளாததுதான் ஆச்சரியம்.

கிழக்கு மூவினத்தவரும் வாழும் மாகாணம். முஸ்லிம்கள் இரண்டாவது பெரும்பான்மையாக இருந்தாலும் அவர்களின் செல்வாக்கு நிறைந்த மாகாணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்ட மாகாணம். அரசின் ஆட்சியில் உள்ள மாகாணம். பல கட்சிகள் உள்ள மாகாணம். இத்தகைய ஒரு மாகாணத்தை எப்படி முதன்மைப்படுத்தி தமிழர் அரசியலை முன்னெடுக்க முடியுமென கட்டுரையாளர் எதிர்பார்க்கின்றார்?

60 வருடகால தமிழர் அரசியலில் யாழ்ப்பாணத்து தலைவர்களே தீர்மானிக்கும் சக்தியாக இருந்த நிலையில் தற்போது கிழக்கு மாகாணத்தின் இரா. சம்பந்தன் தமிழர் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக வந்துள்ளதாக கட்டுரையாளர் பெருமைப்பட்டுள்ளார். அப்படியாயின் அவருமா கிழக்கைப் புறக்கணித்து வடக்கை முதன்மைப்படுத்துகிறார்? வடக்கை முதன்மைப்படுத்த வேண்டிய தேவையும் காரணமும் இருப்பதால்தானே தமிழரின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியான கிழக்கைச் சேர்ந்த தலைவர் சம்பந்தனும் வடக்கை முதன்மைப்படுத்துகின்றார் என்பதை கட்டுரையாளர் புரிந்து கொள்ளாதது ஏனோ?

பி. பரராஜசேகரம், கல்லடி.

### மலையகத்திலிருந்து ஒரு வேண்டுகோள்

நான் ஒரு மலையகத்தைச் சேர்ந்த வாசகன். நாங்கள் எதிர்பார்ப்பது சமகாலம் சஞ்சிகையில் மாதத்திற்கு ஒரு கட்டுரையாவது, அல்லது கடைசிப் பக்கத்தில் மலையகத்தைச் சேர்ந்த எவரையாவது அல்லது இலக்கிய பகுதியில் மலையக இலக்கியங்களையும் வெளியிட வேண்டும் என்பதேயாகும். சமகாலத்திற்கு மலையகத்தில் கணிசமான வாசகர்கள் இருக்கிறார்கள். மாதத்திற்கு ஒரு முறையாவது மலையகம் தொடர்பான ஆக்கங்கள் வெளிவரும் போது மலையக வாசகர்கள் அதிகரிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேவேளை இதுவரை மலையகம் தொடர்பாக வெளியான ஆக்கங்களுக்காக நாங்கள் எங்களது மனமார்ந்த நன்றியினை சமகாலம் ஆசிரியர் குழுவிக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### மண்டேலா பற்றிய மதிப்பீடு

கடந்த சமகாலம் இதழின் நெல்சன் மண்டேலா பற்றிய அட்டைப்படக் கட்டுரையில் மண்டேலாவை மதிப்பீடு செய்ய பல வழிகள் இருப்பதாக கட்டுரையாளர் ராகுல்ஜி குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரே... என்னைப் பொறுத்தவரையில் மண்டேலாவை மதிப்பீடு செய்ய நீங்கள் போட்ட அந்த ஒரு புகைப்படமே போதும்.

கறுப்பினத்தவரும் கண்ணீர் வடிக்கிறார்கள். வெள்ளையினத்தவரும் கண்ணீர் வடிக்கிறார்கள். இதனைவிட ஒருவர் மாமனிதராக வேறு என்ன மதிப்பீடு வேண்டும். இதுதான் கதைசொல்லும் படம் என்பதோ...?

பா. வசீகரன், கல்கிஸை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

இன்று பல போராட்டத்திற்கு மத்தியில் மலையக சமூகம் ஒரு தேசிய இனமாக பரிணமித்துள்ளது. மலையக மக்கள் செறிவாக வாழும் பெருந்தோட்டங்களே அவர்களது பூர்வீகம், இது விடயம் தொடர்பாகவும், மலையக அரசியல்வாதிகளின் இன்றைய போக்கு, பெருந்தோட்டங்களின் இன்றைய நிலைமை ஒரு ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களின் இடப்பெயர்வு தொடர்பாகவும், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தம் மூலம் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களின் இன்றைய நிலைமை தொடர்பாகவும், பொதுசேவை வழங்கலில் மலையக மக்கள் தொடர்ந்து புறக்கணிப்புக்கு உள்ளாவது தொடர்பாகவும், மேலும் நகர சுத்திகரிப்பாளர்களாக மலையக மக்கள் நாடு பூராகவும் பரந்து காணப்படுகின்றனர். இவர்களின் நிலைமை போன்ற இன்னும் பல விடயங்கள் தொடர்பாகவும் ஆய்வு ரீதியாக உலகத்துக்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.

மலையகம் தொடர்பான ஆக்கங்களுக்கு சூரியகாந்தி ஆசிரியர்கள், பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விமான்கள் என்போரிடம் கட்டுரைகளைப் பெற்று பிரசுரிக்க முடியும். இவர்கள் அனைவரும் மலையகம் தொடர்பான ஆழ்ந்த சிந்தனையினையும் பற்றினையும் கொண்டவர்களாவர்.

அ.ஜெயபிரசாத், நோர்வூட்.

## எதிரணியின் அவல நிலை

டிசம்பர் மாதத்தைய முதல் சமகாலம் இதழில் குசல் பெரேரா எழுதிய ‘பலம் பொருந்திய அரசாங்கமும் வலுவில்லாத எதிரணியும்’ என்ற கட்டுரை எதிரணியின் இன்றைய அவலநிலையை பிரகாசமாக அம்பலப்படுத்தியிருக்கிறது. வேறு மார்க்கமில்லாத நிலையில் இன்று ஐக்கியதேசியக்கட்சி சிங்கள - பௌத்த பேரினவாதத்தை வெளிப்படையாகப் பேசத் தலைப்பட்டிருக்கிறது. ராஜபக்ஷாக்களின் கோட்பாட்டுக் கொத்தளமாக விளங்கும் பேரினவாத அரசியலை ஐ.தே.க.வினர் எவ்வளவுதான் பேசினாலும் அவர்களை இதுவிடயத்தில் தோற்கடிக்க முடியாது. அதில் ராஜபக்ஷாக்களு க்கு நிகராக இன்று வேறுயாருமில்லை.

சிங்கள தேசியவாதக் கடும்போக்கு அரசியலைச் செய்த ஜனதாவிமுக்தி பெரமுனையினர் இன்று வலுவிழந்து போனதற்கு காரணம் அவர்களின் அந்த கடும்போக்கை ராஜபக்ஷாக்கள் தமதாக்கிக் கொண்டதேயாகும். அதனால் ஐ.தே.க.வினரும் கூட ஜனதா விமுக்தி பெரமுனையினரைப் போன்று எஞ்சியிருக்கிற ஆதரவையும் இழந்துவிடக்கூடிய ஆபத்தே தோன்றும்.

சுபத்திரா கோகுலன், கரவெட்டி.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 13

2014, ஜனவரி 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்

எனது கண்டு பிடிப்பு குறித்து நான் பெருமைப்படுகிறேன். ஆனால், அதை பயங்கரவாதிகளும் பயன்படுத்துகிறார்கள் என்பது பெரும் கவலையை தருகிறது.

\- மிக்கெய்ல் கலாஷ்னிகோ



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

எங்கள் மத்தியில் மூன்று வகையான ஆட்கள் இருக்கிறார்கள். தங்களது தனிப்பட்ட நலன் களைப் பாதுகாக்க விரும்புகிறவர்கள் முதலாவது வகை. ஆயுதமேந்தியவர்களின் இலட்சியங்களையும் அபிலாசைகளையும் திரும்பவும் நினைத்துப் பார்க்கிறவர்கள் இரண்டாவது வகை. அபிலாசைகளும் யதார்த்த நிலைமைகளும் ஒருங்கிசைந்து போக முடியாது என்பதைப் புரிந்து கொண்டு இலக்குகளை அடைவதற்கு சாத்தியமானளவுக்கு முயற்சிப்பவர்கள் மூன்றாம் வகை. வடமாகாண சபையில் இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்த மூன்றாம் வகையைச் சேர்ந்தவர்களே.



வடமாகாண முதலமைச்சர்
சி.வி.விக்னேஸ்வரன்

ஐக்கியதேசியக் கட்சிக்குள் தீர்மானங்களை எடுப்பதற்கு போதுமான அதிகாரங்கள் எனக்கு இருக்கின்றன. கட்சியை விட்டு வெளியேறியவர்களும் அதிருப்தியாளர்களும் மீண்டும் கட்சிக்குள் வாருங்கள்.



ஐ.தே.க.தலைமைத்துவப்
பேரவைத் தலைவர் கரு ஜெயசூரிய

தர்ம ராச்சியத்தை நோக்கிய பயணத்திலேயே ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் அரசியலுக்கு வந்தார்கள். ஆனால், இன்று அவர்கள் நாட்டுக்குள் போதைப் பொருட்களைக் கடத்துகின்ற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வகித்துக்கொண்டே பிரதமர் தி.மு.ஜெயரத்னவிற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமயவினர் சத்தம் போடுகிறார்கள்.



ஜே.வி.பி.எம்.பி. விஜித ஹேரத்

எந்த நேரத்திலும் எந்தக் காரணத்துக்காகவும் நான் எனது மனைவியை அச்சுறுத்தவில்லை. அவரை எப்போதும் நன்றாகவே கவனித்து காப்பாற்றி வந்திருக்கிறேன். ஏனென்றால், எனது இருபிள்ளைகளினதும் தாய் அவர். எனவே, எந்தக் காரணத்துக்காகவும் நான் அவரை துன்புறுத்தமாட்டேன். நான் இப்போது தனிக்கட்டையாகி விட்டேன். மீண்டும் திருமணம் செய்துகொள்ளும் எண்ணம் எதுவும் போதைக்கு இல்லை.



விளையாட்டுத்துறை அமைச்சர்
மகிந்தானந்த அளுத்கமகே

நான் இனவாதச் சிந்தனையுடைய ஆள் இல்லை. எனது மகன் ஈரானிய யுவதியொருவரை விரைவில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார். கடந்த காலத்தில் எனக்கும் ஒரு முஸ்லிம் பெண்ணுடன் காதல் தொடர்பு இருந்தது.



பொதுமக்கள் தொடர்பு
அமைச்சர் மேர்வின் சில்வா

மேல்மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தின் தலைமைத்துவத்தை ஏற்று நான் போட்டியிடத் தயாராயிருக்கிறேன். அதே போன்றே சஜித் பிரேமதாசாவும் தென்மாகாண சபைத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத் தலைமையை ஏற்று போட்டியிட முன்வர வேண்டும். எங்களுக்குள் சண்டையிட்டு நேரத்தை விரயமாக்குவதை விடுத்து ஊழல் மிகுந்த அரசாங்கத்துக்கு ஒரு சவாலைத் தோற்றுவிக்க நாம் ஒன்றுபடுவோம்.



ஐ.தே.க.எம்.பி. ரவி கருணாநாயக்க

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்திரிகை ஆசிரியர்களை மாதாந்தம் அலரிமாளிகைக்கு அழைத்து காலை விருந்தளித்து பேசுகிறார். ஆனால், ஏதாவது பிழையாக நடந்தால் அதை மறுநாள் காலையே ஆசிரியர்கள் தங்கள் பத்திரிகைகளில் எழுதத் தயங்கமாட்டார்கள். இந்த நாட்டில் ஊடகச் சுதந்திரம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. எம்மை ஊடகவியலாளர்கள் பாராட்டி எழுத வேண்டுமென்பதற்காகவே நாம் அவர்களைக் கவனிப்பதாக எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். நாம் கொடுத்த மடிக்கணினியைப் பயன்படுத்தியே எமக்கு எதிரான அவதூறுகளை இணையத் தளங்களில் வெளியிடுகிற பத்திரிகையாளர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.



தகவல், ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல

செய்தி ஆய்வு

# முழு அளவிலான உள்நாட்டுப் போரை நோக்கி தென் சூடான்



ஜனாதிபதி சல்வா கிர்



மஷார்

நீண்டகால ஆயுதப்போராட்டத்தைத் தொடர்ந்து சூடானிடமிருந்து சுதந்திரமடைந்து வெறுமனே இரண்டரை வருடகாலமே கடந்த நிலையில் உலகின் மிகவும் இளைய நாடான தென்சூடான் பாரதூரமான நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

ஜனாதிபதி சல்வா கிர்ரிற்கும் முன்னாள் உப ஜனாதிபதி றீய்க் மஷாருக்கும் விசுவாசமான குழுக்களுக்கு இடையிலான மோதல்களில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்துவிட்டார்கள். கடந்த ஜூலையில் உப ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்ட மஷார் தனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சதிப்புரட்சியொன்றை நடத்துவதற்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்ததாக ஜனாதிபதி கிர் குற்றஞ்சாட்டியதையடுத்து கடந்த மாதம் 15 ஆம் திகதி மோதல்கள் வெடித்தன. சதிமுயற்சி குற்றச்சாட்டுகளை மஷார் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது மோதல்கள் அரசியல் ரீதியானவை போன்றே தோன்றுகிறது.

ஆனால், மோதல்களுக்கு வலுவான இனரீதியான பரிமாணமும் இருக்கிறது. ஜனாதிபதி கிர் டிங்கா இனத்தைச் சேர்ந்தவர். மஷார் நுயெர் என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். எது எவ்வாறிருந்தாலும் வளங்கள் தொடர்பானதே இப்போர் என்பதிற் சந்தேகமில்லை. தென்சூடான் எண்ணெய் வளமிக்க நாடு. எண்ணெய் வயல்களைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்காகவே அதன் தலைவர்கள் சண்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இன அடிப்படையில் விடுக்கப்படும் அழைப்புகள் வெறுமனே போராளிகளைத் திரட்டுவதற்கும் ஆதரவைப் பெறுவதற்குமே என்று அவதானிகள் கூறுகிறார்கள். தற்போதைய வன்முறை முழு அளவிலான உள்நாட்டுப்போராக மாறக்கூடிய ஆபத்து உள்ளது. பெருமளவில் மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில கிராமங்கள் முற்றாகவே வெறிச்சோடிப் போயிருக்கின்றன.

அந்தப் பிராந்தியத்தில் பல தசாப்தங்களாக ஆயுதமோதல்கள் இடம் பெற்று வந்திருப்பதால் ஆயுதங்கள் தாராளமாகவே புழக்கத்தில் இருக்கின்றன. எனவே வன்முறையைக் கட்டுப்படுத்துவதென்பது சுலபமான காரியமல்ல. மேலதிக படைகளை அனுப்புவதில் ஐக்கிய நாடுகள் விரைந்து செயற்பட்டிருக்கின்ற அதே வேளை, பேச்சுவார்த்தைகளை நோக்கிய செயற்பாடுகளையும் அது முன்னெடுக்க வேண்டும். தென்சூடானின் எண்ணெய் வயல்களில் கூட்டாக திட்டங்களை முன்னெடுக்கின்ற இந்தியா போன்ற நாடுகளும் அங்கு சண்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

பல மேற்கு நாடுகள் தென்சூடான் எண்ணெய் மீது கண்வைத்திருக்கின்றன. சூடானுக்கு எதிரான தடைகளை விதிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்த காரணத்தினால் பல வருடங்களாக மேற்கு நாடுகள் எட்டவே நிற்கின்றன. உள்நாட்டுப் போர் ஒன்று முழுமையானால், அது தென்சூடானில் மேற்கு நாடுகள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும். ■



தென் சூடானின் பொர் பகுதியில் ஐ.நா. வளாகத்திற்குள் தஞ்சமடையும் இடம் பெயர்ந்த மக்கள்

செய்தி ஆய்வு

# மிக்கெய்ல் கலாஷ்னிகோவின் சர்ச்சைக்குரிய மரபு


உலகில் வேறு எந்த சுடுகலனையும் விடவும் கூடுதலான மக்களைக் கொன்றொழித்த ஆயுதமான ஏ.கே.47 என்ற ரஷ்ய ரைபிளை வடிவமைத்த மிக்கெயில் கலாஷ்னிகோவ் கடந்த மாதம் 23ஆம் திகதி யூரல் மலைப் பிராந்தியத்தில் உள்ள அவரது சொந்த நகரான ஐஷெவ்ஸ்கில் காலமானார். இவருக்கு வயது 94.

மாஸ்கோ ஆஸ்பத்திரியொன்றில் வைத்து கடந்த ஜூனில் இதயத்துடிப்பை ஒழுங்கமைக்கும் 'பேஸ் மேக்கர்' கருவி பொருத்தப்பட்ட கலானிஷ்கோவ் நவம்பர் 17ஆம் திகதியில் இருந்து ஐஷெவ்ஸ்க் ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஜேர்மனியர்களின் தன்னியக்க ரைபிள்களுக்கு போட்டியாக ஒரு துப்பாக்கியை வடிவமைப்பதற்காக இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது அழைக்கப்பட்ட கலாஷ்னிகோவ் 1947ஆம் ஆண்டு Avtomat Kalashnikova என்ற ரைபிளை வடிவமைத்தார். (அப்போது அவர் ரஷ்ய இராணுவத்தின் டாங்கி பிரிவில் பொறியியலாளராக இருந்தார்) இது விரைவாகவே Avtomat-Kkalashnikov-47 என்று பிரபல்யமானது. இது மிகவும் எளிதாக ஏ.கே.47 என்று அழைக்கப்பட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு மத்தியில் 'பிறந்த ஏ.கே.47 கெடுபிடியுத்த கால கட்டத்தின் (cold war) ஒரு சின்னமாக மாறியது. 1949ஆம் ஆண்டிலிருந்து இந்த ரைபிள் சோவியத் இராணுவத்தினதும் பிறகு வார்சோ ஒப்பந்த நாடுகளினதும் முத்திரை ஆயுதமாக விளங்கியது.

உலகம் பூராகவும் தேசிய விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்த கிளர்ச்சியாளர்களின் தெரிவாக





ஏ.கே.47 மாறியது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்தப் போராட்டங்கள் பலவற்றின் வெற்றியில் இந்த ரைபிள் குறிப்பிடத்தக்க ஒரு பங்கையாற்றியது. மொசாம்பிக்நாடு சுதந்திரத்தைப் பெறுவதில் ஏ.கே.47இன் பாத்திரம் பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்டது. மொசாம்பிக்கின் தேசியக்கொடியில் இந்த ரைபிளின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, ஏ.கே.47 போராட்ட இயக்கங்களின் ஒரு சின்னமாக உருவெடுத்தது. கெடுபிடி யுத்தகால கட்டத்தின்போது மறைமுக யுத்தங்கள் (proxy war) பலவற்றில் கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிட்ட இராணுவங்கள் இந்த ரைபிள் மீது கண் வைத்தன. வியட்நாம் போரின்போது அமெரிக்கப் படைவீரர்கள் தங்களது எம் 16 ரைபிள்களை வீசியெறிந்துவிட்டு இறந்து கிடந்த வியட்நாமிய படைவீரர்களின் ஏ.கே.47 ரைபிள்களை விழுந்தடித்துக்கொண்டு எடுத்தார்கள் என்று கூறப்படுகிறது. எம்16 போன்று சுடும்போது நெருக்கடி கொடுத்து இடறுப்படாமல் ஏ.கே.47 உறுதியாக கைகளில் இருக்கும்.

(45ஆம் பக்கம் பார்க்க...)

உள்நாட்டு அரசியல்



கலாநிதி பாக்கியசோதி
சரவணமுத்து

# பொதுநலவாய மகாநாட்டிலிருந்து ஜெனீவா 2014 நோக்கி ...

## இலங்கையின் முன்னால் உள்ள சவால்கள்

2011ஆம் ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியாகியதும் எல்லோரும் நல்லிணக்கம் பற்றிப் பேசத் தொடங்கினார்கள். 2012 இல் பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை விடயம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது எல்லோரும் அந்த விடயத்தையே பேசிக்கொண்டிருந்தார்கள். 2013 இல் ஐ.நா.உயர் ஆணையாளர் நவி பிள்ளை வந்தார். அதற்கு அடுத்து பொதுநலவாய மகாநாடு நடந்தது, பிரித்தானியப் பிரதமர் வந்து இலங்கையின் மனித உரிமைகள் நிலை பற்றி வெளிச்சம் போட்டுக்காட்டினார். இவையெல்லாம் நடந்த காலம் முதல் எல்லோர் வாயிலும் அடிபடும் சொல் பொறுப்புக் கூறுதல் (Accountability) என்பதாகும்.

சர்வதேச சமூகத்தின் இலக்கு பொறுப்புக்கூறுதல் என்ற போர்வையில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவது தான் என்று குற்றஞ்சாட்டி அரசு சார்பு அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் தொடர்ச்சியாக சர்வதேச சமூகத்தை இழிவாகத் தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டில் அரசியல் இலாபத்திற்காக அரசாங்கம் இப்பிரசாரத்தைப் பயன்படுத்தி மக்களிடம் உணர்வலைகளை எழுப்பியும் வருகிறது. இருந்தாலும் சர்வதேச சமூகத்தை அலட்சியம் செய்ய முடியாது என்பதையும் ராஜபக்ஷ அரசு உணர் ந்துள்ளது. இப்படியான புரிதல் அரசாங்கத்திடம் உண்டு என்பதை நவிபிள்ளையின் வருகை பொதுநலவாய மகாநாடு காலத்திலும் இப்போதும் அரசின் நடத்தையைக் கொண்டு அவதானிக்க முடிகிறது. இப்போது அரசு 2014 மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் என்ன நடைபெறும் என்பதைப் பற்றிய பிரச்சினையை எதிர்நோக்குகிறது. அங்கு இன்னொரு பிரேரணை இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படலாம் என்பதற்கான சாத்தியம் உள்ளது. அரசாங்கம் இப்படியான ஒரு சம்பவம் நிகழக்கூடாது என்பதை உறுதி செய்வதனையே நோக்கமாகக் கொண்டுள்ளது. உலகில் பல்தரப்பினரும் பங்கு கொள்ளும் ஒரே ஒரு அரங்கு ஐ.நா.மட்டுமே. அந்த நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரலில் இப்போதுள்ள இலங்கை விவகாரத்தை முற்றாக இல்லாமல் செய்வதற்கும் நீக்கிவிடவேண்டும் என்றே அரசாங்கம் முயற்சி செய்கிறது.

அரசாங்கத்தின் கவலையை அதிகரிக்கும் வகையிலான ஒரு கூற்றை சீனாவின் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் கூறியிருக்கிறார். இலங்கை உள்நாட்டில் 'மனித உரிமைகள் நிலையை முன்னேற்றவும் அவற்றைப் பாதுகாக்கவும்' நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அதிகாரி கூறினார். இக்கூற்று பீஜிங்கின் பொறுமையின்மையையும் கவலையையும் எடுத்துக்காட்டுகிறது என்று யோசிப்பதற்கு இடமளிப்பதாக உள்ளது. ஏனெனில், சீனா மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான சர்வதேச நடவடிக்கைக்கு தொடர்ந்து தடைபோட்டுக் கொண்டு இலங்கைக்குப் பாதுகாப்பு அளித்துக்கொண்டு இருக்க வேண்டும். ஆனால், இங்கே வெளிப்படையாகத் தெரியும் உண்மையான முன்னேற்றம் எதுவும் இல்லை என்ற நிலை தொடரும் என்றால் சீனாவுக்கு அது சங்கடமான

இலங்கையின் அரசியல் சமூகம் இனத்துவ அடிப்படையில் எதிர் எதிரான துருவங்களாகப் பிளவுபட்டு நிற்கிறது. அர்த்தமுள்ள நல்லிணக்கமும் ஐக்கியமும் ஏற்படுவதற்குரிய பாதையில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு அரசாங்கம் தயாரா? இதற்கான வலிமை அதற்கு உண்டா?

ஒன்றே என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. ஜப்பானிய தூதுவர் யசூசி அகாசியும் இலங்கைக்கு வந்த போது அரசுக்கு ஆதரவாகப் பேசிய போதிலும் இவ்விடயத்தில் முன்னேற்றம் வேண்டும் என்று கூறினார். அவரது ஆதரவு தயக்கத்துடன் கூடியது. இலங்கையில் உண்மை நிலையில் முன்னேற்றம் இல்லை; பேச்சளவில் தான் யாவும் உள்ளன என்ற கருத்து உலக மட்டத்திலும், உள்ளூரிலும் பலமாக உள்ளது என்பதை அகாசி சுட்டிக்காட்டினார். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கிறார். அவர் விரைவில் ஜெனீவா சென்று அங்குள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி எடுத்துரைப்பார் என்று ஜனாதிபதி தமக்குக் கூறியதாகவும் அகாசி தெரிவித்தார். கோதாபய ராஜபக்ஷ டில்லிக்குச் சென்றார். அத்தோடு அவர் ஐக்கிய அமெரிக்காவுக்கும் சென்றதாகவும் கூறப்படுகிறது. இப்பயணங்களின் நோக்கங்கள் யாவை, அவற்றின் பெறுபேறுகள் யாவை என்பனவும் தெரியவில்லை. எவ்வாறாயினும் ஜெனீவாவோடு இவை தொடர்புடையன என்றே ஊகிக்கலாம்.

பொதுநலவாய மகாநாட்டுக்கு வந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் கொழும்பில் வைத்து அரசின் மீது எச்சரிக்கை விடுத்துவிட்டுச் சென்றார். உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முன்னர் கூறியிருந்ததை அவரும் எதிரொலித்திருந்தார். வரும் மார்ச் மாதத்திற்கு முன்பாக யுத்தக் குற்றங்கள் தொடர்பாகப் பொறுப்புக்கூறும் செயல்முறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாவிட்டால் சர்வதேச விசாரணையைச் சந்திக்க நேரும் என்பதே இவர்கள் விடுத்துச் சென்ற எச்சரிக்கையாகும். உயர் ஆணையாளர் நவிபிள்ளையின் வருகையை போன்றே டேவிட் கமரூன் வருகையைப் அரசாங்கம் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது. இலங்கைக்குள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகச் சதி நடக்கிறதெனக் கூறி அரசியல் ஆதரவைப் பெருக்கும் பிரசாரத்திற்கு இவ்விருவரதும் வருகையையும், இலங்கை மீது திரும்பிய சர்வதேச ஊடகங்களின் கவனத்தையும் அரசு பயன்படுத்திக்கொண்டது. அரசாங்கத்தின் மனித உரிமைகள் மீறல் பற்றிய பிரச்சினையில் இருந்தும் கவனத்தை வேறுபக்கம் திருப்புவதற்கு இச்சந்தர்ப்பம் உபயோகிக்கப்பட்டது. ஆகவே 2014 மார்ச் தீர்மானத்தை இல்லாமல் செய்வதற்குச் செய்யப்படும் வெளிப்பூச்சு வேலைகள் தான் அரசாங்கத் தால் மேற்கொள்ளப்படுகின்றனவா அல்லது ஏதாவது உருப்படியான வேலைகள் நடைபெற்றனவா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் சில வருமாறு:

1. ஆளும் கட்சி அரசியல்வாதிகள் பலரைக் கைதுசெய்தலும் பல வகைக் குற்றங்களுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பதில் ஆர்வம் காட்டியமையும்

2. ஜனாதிபதியின் தலைமையில் சட்டமும் ஒழுங்கும் என்ற பெயரில் புதிய அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. முன்னர் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் பகுதி இப்போது இப்புதிய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அமைச்சை உருவாக்கும் இந்த நடவடிக்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு ஓரளவு ஏற்றதாக இருந்த போதிலும், பதினேழாவது திருத்தத்தை நீக்கி அதனிடத்தில் பதினெட்டாவது திருத்தத்தைக் கொண்டு வந்தமையால் பொலிஸ் மீதான சுதந்திரமான கண்காணிப்புக்கு இடமில்லாமல் போயுள்ளது.

3. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் 53 மேலதிகமாக இப்போது தேசிய செயற்திட்டத்தில் (National Action plan) சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 91 சிபார்சுகள் உள்ளன. இவற்றுக்கு என்ன நடந்தது? அவை நிறைவேறினவா என்பதும் புதிதாகச் சேர்க்கப்பட்ட 51 சிபார்சுகளுக்கான கால எல்லை என்ன என்பதும் தெளிவாக இல்லை.

> சர்வதேச சமூகம் இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் வெளிப்படையாக தெரியக்கூடிய முன்னேற்றம் உள்ளதா என்பதைக் காண விரும்புகிறது. ஆனால் அரசின் செயற்பாடுகள் 2014 மார்ச்சில் ஜெனிவாவில் தீர்மானம் ஒன்று வருவதை இல்லாமல் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் வெளிப்பூச்சு வேலைகள் தானே என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்

4. சொத்திழப்பு, உயிரிழப்பு என்பன குறித்த தேசியமட்ட மதிப்பீடு ஒன்று நடத்தப்படவேண்டுமென்பது ஆணைக்குழுவின் சிபார்சுகளில் ஒன்றாகும். இம்மதிப்பீட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து நுணுக்கமாகப் பரிசீலிக்கப்படவேண்டும்.

5. 30 வருட கால எல்லையில் யுத்தம் காரணமாக காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இது வடக்கு, கிழக்குப் பகுதிகளை மட்டும் உள்ளடக்குவதாகவும் 2013 டிசெம்பர் 28 என்ற காலக்கெடுவுக்குள் இவ்விசா

ரணை நிறைவேற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. சித்திரவதைகள் தொடர்பான விசாரணை பொதுநலவாயச் செயல கத்தின் மனித உரிமைகள் அலகின் துணையுடன் தேசிய மனித உரிமை கள் ஆணைக்குழுவால் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது. சிவில் சமூகத்தினரின் வேண்டு கோளுக்கு அமைய இந்நடவடிக் கையை ஒத்திப்போட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. அவ்வாறு வேண்டுகோள் விடுத்த சிவில் சமூக அமைப்புகள் எவை என்ற விபரத்தை வெளியிடுமாறு சிவில் அமைப்புகள் ஆணைக்குழு வைக் கேட்டுக் கடிதம் அனுப்பி யுள்ளன.

7. தென்னாபிரிக்காவில் நடைபெற் றது போன்று உண்மைகளைக் கண்ட றிதல், இணக்கப்பாடு ஏற்படுத்தல் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமா? அதற்கான சாத்தியப்பா டுகள் உள்ளனவா, அவ்வாணைக் குழு என்ன முறையில் அமையும் என்பன குறித்த கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன. இதற்கு உதவுவ தற்குத் தென்னாபிரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. இக்கலந்துரையா டல்களில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பும் (TNA) புலம்பெயர் தமி ழர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். பொது மன்னிப்பு வழங்கல் என்ற விடயத்தால் பேச்சுவார்த்தை பிசு பிசுத்துப்போக வாய்ப்புண்டு.

மேற்கூறிய விடயங்கள் 2014 மார்ச் மாதம் நடைபெறப்போகும் ஐ.நா. மனித உரிமைகள் சபை நிகழ்வை எவ்விதம் பாதிக்கப்போகி றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். பொறுப்புக்கூறு தல் விவகாரத்தை முதன்மைப்படுத்தி முன்னரிலும் கடுமையான தீர்மானம் நிறைவேற்றப்படும் சாத்தியம் உள்ள து. 2012 இலும் 13 இலும் ஐக்கிய அமெரிக்கா தீர்மானங்களைக் கொண் டுவருவதில் முனைப்பாகச் செயற் பட்டது. அவ்வாறே 2014இலும் அந் நாடு செயற்படலாம். உலகின் தென் பகுதி நாடுகளில் இருந்து ஒரு பிரேர ணையைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்து இருப்பினும், மனித உரிமைச் சபையில் சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் உள்ளன. அவை இலங்கை அரசாங்கத்திற்குச் சார்பாகச் செயற்பட்டவை. ஒரு நாட் டின் மீது தீர்மானம் கொண்டுவரும் நடைமுறையை அவை எதிர்த்து வரு கின்றன. இப்பின்னணியில் இந்தியா வின் பங்கு முக்கியமானது. வெறு மனே தீர்மானத்திற்கு ஆதரித்து வாக் களிப்பது அல்லது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது விடுவது என்ற அர்த்தத்தில் அல்லாமல் இந்தியா மூன்றாம் உலக நாடுகளிடையே தீர் மானத்துக்கு ஆதரவு தேடும் நடவடி க்கையில் இறங்குமா என்பதே முக்கி யமான கேள்வி. இந்தியா பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்குகிறது. அதற்கான பிரசார இயக்கம் அங்கு தீவிரமடைகிறது. இலங்கைக்கு எதி ரான தீர்மானத்தை இந்தியா முன் மொழிய வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் இரு ந்து எழுந்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு இலங்கையின் மனித உரிமைகள் பிரச்சினை கொண்டுவரப்பட்டுள் ளது. சர்வதேசம் இலங்கையில் மனித உரிமை விடயத்தில் வெளிப்படையா கத் தெரியக்கூடிய முன்னேற்றம் உள் ளதா என்பதைக் காண விரும்புகிறது. இலங்கை அரசாங்கம் மேலே கூறிய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் முன்னேற்றத்தின் அடையாளமாகக் காட்டவும் குறிப்பாகத் தென்னாபி ரிக்க மாதிரியிலான உண்மை நல்லி ணக்க ஆணைக்குழு (TRC) அமைத் தல் என்பதைக்காட்டி காலத்தை ஒத்திப்போட வழிபார்க்கும். இவை சாட்டுச் சொல்வதற்குப் போதுமா னவை அல்ல என்றே தெரிகிறது. உண்மை கண்டறியும் விசாரணை ஒரு தேசியமட்ட கலந்துரையாடலும் ஆகும். அதில் பாதிக்கப்பட்டவர்க ளும் பங்குகொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கான பாது காப்பு உறுதிப்படுத்தப்படல் வேண் டும். பாதிக்கப்பட்டோரையும், சாட்சி களையும் பாதுகாக்கக்கூடிய பலமான ஒழுங்கமைப்பு இருக்க வேண்டும். இது தொடர்பான சட்டம் இதுவரை இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட வில்லை.

பந்து இப்போது அரசின் பக்கம் அடிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்தின் கரிசனைக்குரிய விடயங் களில் அரசாங்கம் கவனம் செலுத் துமா? வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகளில் இருந்து சர்வதேசம் பெற்றுக்கொண்ட செய்தி என்ன?

இத்தேர்தல் முடிவுகள் வடக்கில் அரசின் கொள்கைக்கு எதிரான பல மான அடியாகும். வாக்காளர்களை அச்சுறுத்தியதும் ஏனைய துர்நடத்தை களும், அரச வளங்களைத் தேர்தலில் துஸ்பிரயோகம் செய்தமையும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட் டத்திலும் தேர்தல் கண்காணிப்பாளர் களால் நன்கு பதிவு செய்யப்பட்டுள் ளன. தேர்தல் முடிந்தவுடன் முதல மைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் உள்ள உறவு மேம்பாடு அடையும் அறிகுறிகள் தென்பட்டன வேனும், ஆளுநர் விவகாரத்தால் அதில் பின்னடைவு ஏற்பட்டது. ஆளுநர் பிரச்சினை அப்பதவியை வகிக்கும் நபர் பற்றியது மட்டுமல்லா மல் அமைப்பு முறையில் உள்ள குறையால் எழும் பிரச்சினையு மாகும்.

வடபகுதித் தேர்தலில் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு அமோக வெற்றி யீட்டியது. வடக்குக்கு வெளியே நடந்த தேர்தல்களில் ஆளும் கூட்ட ணியும் அமோக வெற்றி பெற்றது. தென்மாகாணத்திலும், மேற்கு மாகா ணத்திலும் கூட அரசாங்கத் தரப்பு அமோக வெற்றியை ஈட்டலாம். இவையாவும் ஒன்றைத் தெளிவுபடுத் துகின்றன. இலங்கையின் அரசியல் சமூகம் இனத்துவ அடிப்படையில் எதிரெதிரான துருவங்களாகப் பிளவு பட்டு நிற்கின்றன. அர்த்தமுள்ள நல்லிணக்கமும் ஐக்கியமும் ஏற்படு வதற்குரிய பாதையில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டும்.

இதற்கு இந்த அரசாங்கம் தயாரா? அதற்கான வலிமை அதற்கு உண்டா? ■

## நேர்காணல்

பாலன்

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் மீண்டும் ஆராயப்படுவதற்கு இன்னமும் மூன்று மாதங்களே இருக்கும் நிலையில், அங்கு ஏற்படக்கூடிய சவால்களைச் சமாளிப்பதற்கான வியூகங்களை வகுப்பதில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருக்கிறது.

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யகூசி அகாசி அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தெரிவித்த கருத்துகள் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு இருக்கின்ற பொறுப்புடைமை குறித்து சர்வதேச சமூகத்தின் முன்னணி வல்லாதிக்க நாடுகள் கிளப்புகின்ற சர்ச்சைகளில் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்துவந்திருக்கக்கூடிய ஜப்பான் போன்ற நாடுகள் கூட இலங்கையின் செயற்பாடுகளில் காணப்படுகின்ற தாமதம் மற்றும் போதாமைகள் குறித்து விசனமடையத் தொடங்கியிருக்கின்றன என்பதை உணர்த்துபவையாக அமைந்திருந்தன.

சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய செயன்முறைகளைப் பொருத்தவரை அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் இருக்கின்ற தவறுகளை, போதாமைகளை அடிக்கடி சுட்டிக்காட்டி விமர்சனம் செய்துவருகின்ற பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த புத்தி ஜீவிகளில் ஒருவர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

இனநெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகள் மற்றும் நல்லிணக்கத்தை நோக்கிய செயன்முறைகளில் குறிப்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற நடவடிக்கைகளில் தன்னை அரசாங்கத் தலைமைத்துவம் ஒதுக்கிவைப்பது குறித்து விசனம் கொண்டிருக்கும் பேராசிரியர் விஜேசிங்கவிடம்



# எமது சொந்த ஆணைக்குழுக்களின் சிபார்சுகளை விரைவாக நடைமுறைப்படுத்தவில்லையானால் சகல முனைகளிலும் கெடுதியே




தற்போது தோன்றியுள்ள நிலைவரங்கள் தொடர்பில் கருத்தறிய 'சமகாலம்' சார்பில் தொடர்பு கொண்டேன்.

பொறுப்புடைமையுடன் தொடர்புடைய விவகாரங்களில் சர்வதேச சமூகம் வெளிக்காட்டுகின்ற கரிசனையின் விளைவாகத் தோன்றியிருக்கின்ற சூழ்நிலையை வெளியுறவு அமைச்சு சரியான முறையில் கையாளத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் பேராசிரியரிடம் சில கேள்விகளைக் கேட்டேன்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் ஆளுநர் மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.சந்திரசிறிக்கும் இடையிலான பனிப்போர், தமிழர் பிரச்சினை தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை, சர்வதேச சமூகத்தின் அக்கறைகள், அகாசியின் அண்மைய கொழும்பு விஜயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பேராசிரியர் விஜேயசிங்க விரிவான பதில்களை அளித்திருக்கிறார். இதோ அவற்றை கேள்வி, பதில் வடிவில் தருகின்றோம்.

**ஆளுநர் எஸ்.ஏ.சந்திரசிறி தன்னுடன் எந்தவிடயத்தையும் கலந்தாலோசிக்காமல் தன்னெண்ணப்படி செயற்படுகிறார். இவ்வாறு செயற்படுவதன் மூலம் வடமாகாண மக்கள் தேர்தலில் அளித்த மகத்தான ஆணையை அவர் அர்த்தமற்றதாக்குகிறார் என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டுகிறார். சகல மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் ஒரேவிதமான அதிகாரங்களே இருக்கின்றன. ஆனால், வடமாகாண ஆளுநரும் கிழக்கு மாகாண ஆளுநருமே பகைமையுணர்வுடன் நடந்துகொள்கிறார்கள். ஏனைய மாகாணங்களின் ஆளுநர்கள் முதலமைச்சர்களின் பணிகளிலோ தீர்மானங்களிலோ தலையீடு செய்வதில்லை. அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக பெரும்பான்மைச் சமூகத்திற்குள் கருத்துவெளியிடுகின்ற முக்கியஸ்தர்களில் நீங்களும் ஒருவர் என்ற வகையில் இந்த துரதிர்ஷ்டவசமான நிலைவரம் பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

ஒரு தரப்பினர் மறுதரப்பினரின் தேவைகளைப் பற்றி எந்தவிதமான உணர்வு

பூர்வமான விளக்கப்பாடுமின்றி பேசுகிறார்கள், செயற்படுகிறார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நீண்டகாலமாகவே ஆளுநரைப் பற்றி எதிர்மறையான கருத்துகளைக் கூறிவந்திருக்கிறார்கள். குறிப்பாக வடமாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின்போதும் பின்னரும் கடுமையாக ஆளுநரைப் பற்றிப் பேசுகிறார்கள், பேசியிருந்தார்கள். அவர்கள் விவகாரங்கள் குறித்து முன் முடிவு செய்திருக்கிறார்கள் போன்று தோன்றுவதால், புதிய நிருவாகம் குறித்து ஆளுநர் எதிர்மறையல்லாத போக்கொன்றைக் கடைப்பிடிப்பார் என்று அவர்கள் உண்மையில் எதிர்பார்த்திருக்க முடியாது.

மறுபுறத்தில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடத்தைகள் எத்தகையதாக இருந்திருப்பினும், ஆளுநர் முயற்சியொன்றை எடுத்திருக்க வேண்டும். கூட்டமைப்பு ஒற்றைப் பாளக்கல்லைப் போன்று விறைப்பானதோ அல்லது வளைந்து கொடுக்க முடியாததோ அல்ல என்பதையும் ஆளுநர் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும். கூட்டமைப்பு வடமாகாண மக்களின் பிரமாண்டமான ஆணையுடன் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, அரசியலமைப்பு வரையறைக்குள் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கும் அவர் முன்வந்திருக்க வேண்டும்.

வடமாகாண ஆளுநரும் கிழக்கு மாகாண ஆளுநரும் பிரத்தியேகமான முறையில் செயற்படுகிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால், இருமாகாணங்களுமே பிரத்தியேகமானவை என்பதை நீங்கள் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல வருடங்களாக இருமாகாணங்களிலும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் இருக்கவில்லை. அதனால் இரு ஆளுநர்களும் நிருவாகமொன்றை நடத்துவதற்குப் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

எவ்வாறெனினும், இறுதியில் கிழக்கில் முதலில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண நிருவாகம் ஒன்று கிடைத்தது. அங்கு ஆளுநரும் முதலமைச்சரும் கலந்தாலோசனை நடத்தி செயற்படக்கூடிய ஆற்றலுடன் இருந்த காரணத்தினால் அவர்களுக்கிடையே பதற்றநிலை தோன்றவில்லை. பிள்ளையான் முதலமைச்சராக இருந்தபோது கிழக்கு பெருமளவுக்கு அபிவிருத்தி கண்டது. அனுபவம் வாய்ந்த நிருவாகியான ஆளுநரின் பாத்திரத்தை முதலில் ஏற்றுக்கொண்டவர் பிள்ளையானே.

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக ஆளுநர் எந்தளவு பணிகளைச் செய்திருக்கிறார் என்பதை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ளவேண்டும். அத்துடன் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சருக்கு முதன்மை வழங்குகின்ற நிலையை நோக்கி மிருதுவான நகர்வு இடம்பெறுவதற்கு இருவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதேபோன்றே விக்னேஸ்வரனும் அவரது சொந்தத்தில் அனுபவமிக்க ஒரு நிருவாகி என்பதையும் அரசியலமைப்பு விதந்துரைக்கின்ற ஏற்பாடுகளுக்குள் விவகாரங்கள் தொடர்பில் அவரின் ஆலோசனைகளையும் பெறவேண்டும் என்பதை யும் ஆளுநர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாண சபையை முறையாகச் செயற்பட அனுமதிப்பதன் மூலமாக தமிழ்மக்களுக்கு அரசியல் ரீதியில் நேசக்கரத்தை நீட்டுவதற்கு அரசாங்கத்துக்கு ஒரு நல்லவாய்ப்பு இருந்தது என்று தமிழ் அரசியல் சமுதாயத்தின் மத்தியில் உள்ள மிதவாதிகள் நம்பினார்கள். ஆனால் ராஜபக்ஷ நிருவாகம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக அதன் நடத்தைகளை மாற்றிக்கொள்ளவில்லை. நிலைவரம் மேலும் மோசமாகிக் கொண்டே போகிறது. தமிழ்மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபையொன்றைச் சீர்குலைப்பதற்கு அரசாங்கம் சகல காரியங்களையும் செய்துகொண்டிருக்கிறது. இது பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

ராஜபக்ஷ நிருவாகத்துக்கு எதிராக சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது தவறு என்று நான் நினைக்கிறேன். இந்த நிருவாகம் பல கூறுகளை உள்ளடக்கியது என்பதை முதலில் நீங்கள் மனதிற்கொள்ளவேண்டும். அந்தக் கூறுகளில் சிலவற்றின் சிந்தனைப் போக்கை அவதானிக்கும் போது அவை தமிழ் மக்கள் மீது கிஞ்சித்தும் கரிசனை கொண்டவையல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடியும். தமிழ் அரசியல் சமுதாயத்திற்குள் இருக்கின்ற மிதவாதிகள் இதைச் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். நிருவாகத்தின் அடிப்படைக் கூறாக அமைவது பெரும்பான்மையான பாரம்பரிய அரசியல்வாதிகளே. அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் பழைய இடதுசாரிக் கட்சிகளையும் சேந்தவர்கள். தமிழ்மிதவாதிகள் இவர்களை அணுகவேண்டும். அதேபோன்றே தீவிரவாதிகளின் போக்குகளினால் கவனத்தைத் திசைதிருப்பாது தமிழ் அரசியல் சமுதாயத்தில் உள்ள கண்ணியமான சக்திகளை ஜனாதிபதியும் அணுக வேண்டும்.

**நிலைவரங்களை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படக்கூடிய பரிகார நடவடிக்கைகள் எவை?**

அரசாங்கத்தை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நிர்மூலஞ்செய்யக்கூடிய சக்திகளைத் துடைத்தெறிவதற்கு ஜனாதிபதி இனிமேல் புதிய துடைப்பங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இந்தியாவுடனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனும் உறவுகளை நாம் மேம்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் அதற்கு ஜனாதிபதி இந்தியாவினதும் கூட்டமைப்பினதும் நம்பிக்கையைப் பெற்றவர்களின் சேவைகளைப் பயன்படுத்தவேண்டுமென்றும் அறிவுக்கூர்மையுடைய இளம் எம்.பி.யொருவர் அண்மையில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி மீதும் அவர் 2009ஆம் ஆண்டில் நிகழ்த்திக்காட்டிய மகத்தான சாதனை மீதும் முழுமையான பற்றுறுதி கொண்ட இந்தவகையான

ஒரு சிலரைத்தான் என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது. இது துரதிர்ஷ்டவசமானதாகும். இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டியிருக்கும் முயற்சிகளைப் பொறுத்தவரை, இரு க்கக்கூடிய சாத்தியமான ஒரே தெரிவு தயான் ஜெயதிலகதான். ஆனால், ஜனாதிபதியைச் சுற்றிவர இருக்கின்ற பலர் எளிதில் மசியச் செய்ய முடியாத அளவுக்கு தயானுக்கு எதிரானவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் சிலர் இஸ்ரேலின் செல்வாக்கிற்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள். 2009ஆம் ஆண்டு ஜெனீவாவில் தயான் குறிப்பிடத்தக்க வெற்றியொன்றைக் கண்டபிறகு அவரை நீக்குவதில் இவர்கள் முனைப்பாகச் செயற்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டத்திற்குள் இருப்பவர்களில் பாதுகாப்புச் செயலாளரும் அவரது நெருங்கிய ஆதரவாளர்களுமே இவ்வாறு தயானுக்கு எதிரானவர்கள். ஆனால், வடக்கில் இஸ்ரேல்பாணி குடியேற்றங்களைச் செய்யும் சரத்பொன்சேகாவின் கோட்பாட்டினால் பாதுகாப்புச் செயலாளர் அந்த நாட்களில் செல்வாக்கிற்குட்பட்டிருந்தார் என்று நான் கருதுகின்றேன். அந்தக் கோட்பாட்டை ஜனாதிபதி கடுமையாக எதிர்த்தார். இது எனக்கு குழப்பத்தைத் தந்தது. ஏனென்றால் கறைபடியாத ஒரு யுத்தத்தைச் செய்யவே பாதுகாப்புச் செயலாளர் முயற்சித்தார் என்று நான் நினைக்கிறேன். ஆனால், இப்போது அவர் கறைபடிந்த யுத்தத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. அவரை நியாயப்படுத்துவதற்கு, இராணுவத்தை நியாயப்படுத்துவதற்கு தெளிவான வாத த்தை முன்வைக்கக்கூடிய ஒருவர் இன்று இல்லாத நிலையைக் காண்கிறோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, 2011ஆம் ஆண்டு அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் வரலாறு நான் தான் சிறந்த தூதுவர் என்பதைத் தெளிவுபடுத்தும். ஆனால், அது தொடர்பிலான எனது மதிப்பும் தகுதியும் எமது தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர்களில் பேச்சுவார்த்தைகளை குழப்பியடிக்க வேண்டுமென்று உறுதி பூண்டுகொண்டு செயற்பட்டவர்களினால் முற்றாக நிர்மூலம் செய்யப்பட்டது. அரசாங்கத்தரப்பில் உள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி என்று எனக்கு அவர்கள் பட்டம் சூட்டினார்கள். என்னைப் பற்றி அப்படியொரு எண்ணத்தை ஜனாதிபதிக்கு ஏற்படுத்துவதற்காக அவர்கள் அவரிடம் பல கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். என்மீது நம்பிக்கை இல்லை என்பதையும் என்னால் எதையும் சாதிக்க முடியாது என்பதையும் அப்போது உணர்ந்து கொண்ட நிலையில் நான் இராஜினாமா செய்தேன். குறிப்பாக, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை எதிர்த்து நான் வாக்களித்ததைத் தொடர்ந்து என்னை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கமாட்டார்கள் என்பதை நான் நன்கு உணர்ந்து கொண்டேன். உண்மையில் என்னை விடவும் அது அரசாங்கத்துக்கே கூடுதல் கவலைக்குரிய விடயம். இருதரப்பிலும் இருக்கின்ற தீவிரவாதிகளுக்கு ஏக்கத்தைத் தரக்கூடிய முறையில் காணி அதிகாரங்கள் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் நான் எனது ஆற்றலை வெளிக்காட்டினேன். அத்தகைய மெய்ப்பிக்கத்தக்க ஆற்றல் உடைய வேறு எவரையாவது அவர்களினால் கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கலாம் என்று நம்புவதைத் தவிர நான் வேறு எதைத்தான் செய்வது?

இந்தக் கட்டத்தில் தயான் ஜெயதிலக தெரிவித்த யோசனையொன்று எனது கவனத்துக்கு வருகிறது. வடமாகாண ஆளுநராக என்னை நியமிக்க வேண்டுமென்று அவர் கூறியிருந்தார். நான் ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன். இது நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நியமனம்



'தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் நீண்ட காலமாகவே ஆளுநர் சந்திரசிறியைப் பற்றி எதிர்மறையான கருத்துகளைக் கூறி வந்திருக்கிறார்கள். கூட்டமைப்பினரின் நடத்தைகள் எத்தகையதாக இருந்திருப்பினும் வட மாகாண மக்களின் பிரமாண்டமான ஆணையுடன் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அடிப்படையாகக்கொண்டு அரசியலமைப்பு வரையறைக்குள் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு ஆளுநர் முன்வந்திருக்க வேண்டும்'

அல்ல. பாராளுமன்றத்தில் எனது பிரசன்னம் அவசியமானது என்று நம்புவதற்கு அப்பால், தெளிவான கோட்பாடுகளின் அடிப்படையிலான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் எமக்குத்தேவை என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கட்டத்தில் ஜெனரல் சந்திரசிறி ஆளுநர் பதவியில் இருந்து மாற்றப்படக்கூடாது என்று நான் நினைக்கின்றேன்.

இப்போது என்ன தேவையென்றால், ஒவ்வொரு அதிகாரத்துவ மட்டமும் ஒன்றை மற்றையது மதித்து, தற்போது இருக்கக்கூடிய வரையறைகளுக்குள் அதிகாரங்களைப் பயன்படுத்திச் செயற்படுவதை உறுதிப்படுத்தக்கூடியதாக கட்டமைப்புகளை வலிதாக்க வேண்டியதேயாகும். வேறுபட்ட அரசியல் கொள்கைகளையுடையவர்களின் தேவைகளை பரஸ்பரம் உணர்வுபூர்வமாக மதித்துச் செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

**வடமாகாணசபை தொடர்பிலான அரசாங்கத்தின் அணுகுமுறை, குறிப்பாக இனநெருக்கடி தொடர்பான அணுகுமுறை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் தமிழர்களையும் தமிழர் உரிமைகளுடன் தொடர்புடைய சகல விவகாரங்களுக்கும் சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவதற்கே தொடர்ச்சியாக நிர்ப்பந்திக்கின்றன. இதை எவ்வாறு நீங்கள் பார்க்கிறீர்கள்? அரசாங்கத்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உங்களது ஆலோசனை என்ன?**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களும் குறிப்பாக, கூடுதலான அளவுக்கு பகைமையுணர்வுடன் செயற்படுகின்ற புலம்பெயர் தமிழர்களும் நீண்டகாலத்துக்கு முன்னரே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச சமூகத்தைத் தூண்டிவிடுகிற விளையாட்டை ஆரம்பித்தார்கள். மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை ஜனாதிபதி தயக்கமின்றி நிறைவேற்றிய வேளையில் கூட அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச சமூகத்தைத் தூண்டிவிடுகின்ற கைங்கரியத்தைத் தொடர்ந்தார்கள்.

ஜனாதிபதி செய்ததை சரத் பொன்சேகா ஏற்றுக்கொள்ளவில்லை. இதை அவர் தனது இராஜினாமாக் கடிதத்திலே தெரிவித்திருந்தும் கூட சர்வதேச சமூகத்தில் உள்ள சில சக்திகள் ஜனாதிபதிக்கு எதிராக பொன்சேகாவையே ஆதரித்தன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அவ்வாறே செய்தது. ஜனாதிபதி மீது நெருக்குதல்களைப் பிரயோகிப்பதற்கு அதுவே சிறந்த வழி என்று சர்வதேச சமூகத்தின் அச்சக்திகள் ஆலோசனை கூறியதன் விளைவாகவே கூட்டமைப்பு பொன்சேகாவை ஆதரித்தது. அத்தகைய அப்பட்டமான பாசாங்குத்தனம் இயல்பாகவே சந்தேகங்களைத் தோற்றுவித்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பின்பற்றியதையடுத்து இச்சந்தேகங்கள் மேலும் வலுவடைந்தன.

இதன் விளைவாக அரசாங்கத்துக்கு இருக்கிற உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அது வெற்றிகொள்ள வேண்டுமென்று நம்புகிறவன் என்ற போதிலும், அந்தக்கொந்தளிப்புகள் தொடர்பில் எனக்கு ஓரளவு அனுதாபம் உண்டு. ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அத்தகைய மனநிலையைக் கைவிட்டு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு மேம்பாடு கிட்டவேண்டுமென்பதே அதன் விருப்பம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். இது விடயத்தில் சம்பந்தன் இதய சுத்தியான அக்கறையுடன் இருக்கிறார் என்று நான் நம்புகிறேன். ஆனால், கூட்டமைப்புக்குள் இருந்து வெளிவருகின்ற அறிவிப்புகள் அவருக்கு உதவுவதாக இல்லை. இதேபோன்றுதான் வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் ஜனாதிபதிக்கு உதவவில்லை.

இந்த நிலைவரங்கள் சகலதையும் மாற்றியமைப்பதற்கு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்துக்கு நான் பயன்படுத்தப்படமாட்டேன் என்பதால், இந்தியாவுடன் இணைந்து செயற்படக்கூடிய எவரையாவது ஜனாதிபதி வைத்திருப்பார் என்று நம்புகிறேன். ஆனால், அவர் தொடர்ந்தும் தனது வெளியுறவு அமைச்சரிலேயே தங்கியிருப்பாரானால், விளைவு அனர்த்தமே. அதே போன்றே, ஜப்பானினதும் தென்னாபிரிக்காவினதும் நல்லெண்ணத்தைப் பயன்படுத்துவதில் ஜனாதிபதி அந்த நாடு களுடன் இணைந்து பணியாற்றக்கூடியவர்களை உபயோகிக்க வேண்டும். இலங்கையில் தனது நிலையை மேம்படுத்துவதில் அக்கறைகொண்டு பகட்டு ஆரவாரம் காட்டுகிற பேர்வழிகளைப் பயன்படுத்தக்கூடாது. அத்தகை பகட்டு ஆரவாரம் அந்தப் பேர்வழிகளுக்கு உதவக்கூடும், ஆனால் நாட்டை நிர்மூலம் செய்துவிடும்.

இந்தியாவினதோ அல்லது மேற்குறிப்பிடப்பட்ட நாடுகளினதோ அனுசரணையில் தங்களால் நம்பிக்கை வைக்கக்கூடிய ஆட்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த விரும்புவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், தென்னாபிரிக்காவின் முன்முயற்சிக்கு அரசாங்கம் அதன் பிரதிபலிப்பை வெளிக்காட்டியதில் காண்பிக்கப்பட்ட கிறுக்குத்தனம் தொலைநோக்கற்ற தன்மையையே அம்பலப்படுத்தியது. அரசாங்கம் அனுப்பிய தூதுக்குழுவினர் என்ன விடயத்துக்காக தாங்கள் அனுப்பப்பட்டார்கள் என்பதையே மறந்துவிட்டார்கள்.

**ஜப்பானியத் தூதுவர் யகூசி அகாசி அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தையும் நாட்டைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னதாக கொழும்பில் செய்தியாளர் மகாநாட்டில் அவர் தெரிவித்த கருத்துகளையும் நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

அகாசி எப்போதுமே நல்லறிவுடைய சில விடயங்களைக் கூறிவந்தி



**‘இந்தியாவுடனும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடனும் உறவுகளை நாம் மேம்படுத்த வேண்டியது அவசியம். அந்த இரு தரப்பினரதும் நம்பிக்கையைப் பெற்றவர்களின் சேவைகளை ஜனாதிபதி பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்தை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நிர்மூலம் செய்யக் கூடிய சக்திகளைத் துடைத்தெறிவதற்கு இனிமேல் ஜனாதிபதி புதிய துடைப்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.’**

ருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். ஆனால், வழக்கமான ஜப்பானியப் பண்புடன் பேசுகின்ற அவர் அந்த விடயங்களைப் போதுமானளவுக்கு உறுதியான முறையில் சொல்லவில்லை என்பதுதான் எனக்கு வருத்தம்.


முழக்கமும் சீற்றமும் போதுமானவையல்ல என்று கூறியதன் மூலம் அவர் உறுதியான ஒரு செய்தியைத் தெரிவித்திருக்கிறார் என்று நம்புகிறேன். நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதிமொழிகளை வழங்கிக்கொண்டிராமல், நாம் செயலில் இறங்க வேண்டியிருக்கிறது என்பதையே அகாசி உண்மையில் சொல்லியிருக்கிறார். துரதிர்ஷ்டவசமாக நாம் செயலில் இறங்குவதில்லை. எமது முறைமை எவ்வளவு தூரம் செயலற்றதாக இருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ளாமல் ஜனாதிபதிதான் செயலில் இறங்குவதைத் தடுக்கிறார் என்று பெரும்பாலானவர்கள் நினைக்கிறார்கள். இவ்வாறு நினைப்பதற்கு காரணமும் இருக்கிறது. தான் உத்தரவிடுகின்றதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதை ஜனாதிபதி கண்காணிப்பதில்லை. அவரின் செயலாளரும் வேலைகளில் மூழ்கிக் கிடக்கிறார்.

அகாசி நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றபோதிலும், ஜனாதிபதியின் செயலாளரை மாத்திரம் ஜெனீவாவுக்கு அனுப்புவதால் பெரிதாக தாக்கம் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அவருக்குத் தேவை. ஜனாதிபதி சிவில் சமூக ஆட்களை ஈடுபடுத்துவதற்கு நாட்டம் காட்டிய போதிலும், அவர்கள் நாகரீகமற்ற முறையில் நிராகரிக்கப்பட்டார்கள்.

போரின் முடிவுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் அகாசி வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்போதாவது உடலாகம ஆணைக்குழுவின் விதப்புரைகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வில்லை என்பது பெரும் கவலைக்குரியது. இலங்கை ஆணைக்குழுக்களின் பணிகளை ஓரங்கட்டுவதற்கு முயற்சித்தவர்களே எம்மீது சர்வதேச ஆணைக்குழுக்களைத் திணிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கான குற்றப்பொறுப்பை ஏற்க வேண்டும். நீதியரசர் உடலாகம போன்றவர்களின் விவேகமும் அகவுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பணிகளும் தெளிவாக விளங்கிக் கொள் ளப்பட்டால் தான் எமது முறைமைகளின் மீதான நம்பிக்கையின்மையை முடிவுக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டபோது எமக்கு ஒரு இடை ஓய்வு கிடைத்தது.

ஆனால், சீர்குலைப்பவர்கள் தங்கள் வேலையைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார்கள். நல்லிணக்கம் பற்றி கலந்துரையாடுவதற்கு தென்னாபிரிக்கர்கள் ஒரு குழுவை அனுப்பிய போது லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடத்தப்பட்ட கூட்டத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் சிலாகிக்கப்பட்ட முக்கிய பங்கேற்பாளர்களின் பெயர்களை (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் உட்பட) பட்டியலில் இருந்து நீக்கிவிட்டார்கள். இக்காரியத்தை வெளியுறவு அமைச்சே செய்ததாக நான் நினைக்கிறேன். என்மீது வெளியுறவு அமைச்சுக்கு இருக்கின்ற அச்சவுணர்வை விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. (இதை ஜனாதிபதியே என்னிடம் விளக்கிக் கூறியிருந்தார்.) ஆனால், தயான் ஜெயதிலக மற்றும் பள்ளிஹக்கார போன்றவர்கள் ஒதுக்கப்பட்டது பெரும் குற்றமாகும்.

பாதுகாப்பு அமைச்சு மீதிருந்த அச்சவுணர்வே இதற்குக் காரணமாயிருந்திருக்கலாம் என்று நான் சந்தேகப்படுகிறேன். ஆனால், பாதுகாப்பு அமைச்சு கூடுதலான அளவுக்கு விளக்கமுடையதாக இருந்தது. ஏனென்றால், பள்ளி



ஹக்காரவும் அவரது சக ஆணையாளர் ரொஹான் பெரேராவும் பாதுகாப்புப் படைகளினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற கருத்தரங்குகளுக்கு கிரமமாக அழைக்கப்படுகிறார்கள். வெலிவேரியாவில் நடைபெற்ற சம்பவம் தொடர்பான மகஜரில் நான் கையெழுத்திடும் வரை அந்தக் கருத்தரங்குகளுக்கு நானும் கிரமமாக அழைக்கப்பட்டிருந்தேன். இது விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு குறிப்பாக பாதுகாப்புப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் கூடுதலான அளவுக்கு விளக்கமுடையவர்களாகவும் வெளியுறவு அமைச்சைவிடவும் யதார்த்தங்கள் குறித்து சிறந்த புரிதல் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். எமது சொந்த ஆணைக்குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்தும் கடப்பாட்டை விரைவாக நாம் நிறைவேற்றவில்லையானால், சகல முனைகளிலும் விரைவில் கெடுதியையே நாம் எதிர்நோக்குவோம்.

ஆனால், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பிலான எமது நிலைப்பாடு மீது பரிவிரக்கம் கொண்டவராக அகாசி இருக்கிறார் என்பதை நான் இங்கு நிச்சயம் குறிப்பிட்டாக வேண்டும். எமக்கு கால அவகாசம் தேவை என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். விசாரணைகளை வேகமாக முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று அவர் கூறுவது சரியானதே. ஆனால், நாம் செயற்படவேண்டியது மாத்திரமல்ல நாம் செயற்படுவதாகக் காண்பிக்க வேண்டியதும் அவசியமானதாகும். அதாவது எமது செயன் முறைகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அதன் மூலம் மாத்திரமே இந்த விவகாரங்கள் உள்நாட்டுச் செயன்முறைகளுக்குள் மட்டுப்படுத்தப்படுவதை எம்மால் உறுதிசெய்யக் கூடியதாக இருக்கும்.

இதுவிடயத்தில் நம்பகத்தன்மை வாய்ந்த பிரமுகர்கள் முன்னரங்கத்தில் நின்று செயற்படும் போதே எமக்கு அது உதவியாயிருக்கும். நீதியரசர் வீரமந்திரி, நீதியரசர் உடலாகம ஆகியோர் இருக்கிறார்கள். நீதியரசர் யாப்பா மற்றும் முன்னாள் பிரதம நீதியரசர் ஜி.பி.ஏ.டி.சில்வா போன்றவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் நம்பகத்தன்மை கொண்டவர்கள். இந்தியா, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து அவதானிகளையும் நாம் அழைத்துக்கொள்ள முடியும். ஆனால், நிலைவரங்களில் முன்னேற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படவில்லையென்றால், எம்மை நம்புமாறும் பொறுத்திருக்குமாறும் நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க முடியாது. அதன் காரணத்தினால் தான் முன்னைய சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை குறித்து அகாசி வலியுறுத்தியிருக்கிறார்.

நீங்கள் கேள்வியெழுப்பிய பிரதான விடயம் வேறுபட்டதாக இருந்தாலும் பதில் கூறும் கடமை அல்லது பொறுப்புடைமை தொடர்பில் இலங்கை மீது பிரயோகிக்கப்படுகின்ற சர்வதேச நெருக்குதல்களுடன் அரசியல் செயன்முறைகளில் ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களையும் நீங்கள் பிணைத்துப் பார்ப்பது சரியானதே. அரசியல் செயன்முறைகள் தொடர்பில் அரசாங்கத்தின் மீது நெருக்குதலைப் பிரயோகிப்பதற்கான மார்க்கமாகவே அமெரிக்கர்கள் ஆரம்பத்தில் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடித்தார்கள். அறியாமையின் அடிப்படையில் அமெரிக்கா கடைப்பிடித்த இத்தகைய பல அணுகுமுறைகள் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. என்றாலும் இடர்பாட்டுக்குள்ளாவதை நாம் தவிர்க்க வேண்டுமானால், அரசியல் செயன்முறைகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பது என்றென்றைக்கும் நிலையான யதார்த்தமாகும். அரசாங்கம் இதை விளங்கிக்கொள்ளும் என்று நம்புகிறேன். ■

‘எமக்கு கால அவகாசம் தேவை என்பதை அகாசி ஏற்றுக்கொள்கிறார். விசாரணைகளை வேகமாக முடிவுக்கு கொண்டுவர முடியாது என்று அவர் கூறுவதும் சரியானதே. ஆனால் நாம் செயற்பட வேண்டியது மாத்திரமல்ல, செயற்படுவதாக காண்பிப்பதும் அவசியம். எமது செயன்முறைகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அதன் மூலம் மாத்திரமே இந்த விவகாரங்கள் உள்நாட்டு செயன்முறைகளுக்குள் மட்டுப்படுத்தப்படுவதை எம்மால் உறுதி செய்யக் கூடியதாக இருக்கும்’



சுரேந்திர அஜித் ரூபசிங்க

உள்நாட்டு அரசியல்

# ஸ்ரீதரனின் பாராளுமன்ற உரையும் கிளம்பிய எதிர்ப்புகளும்



ஆண்டாண்டு காலமாக தமிழினம் பட்ட அவமானம், ஒதுக்குதல், கீழ்மைப்படுத்தல் என்பன மறக்கப் படக்கூடியனவா? ஸ்ரீதரனின் கருத்துக்களை பொதுபோக்கி லிருந்து விலகி நிற்கும் ஒருவரின் பைத்தியக் காரத்தனம் என்று ஒதுக்க முடியுமா?

வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணத்தை உத்தியோகபூர்வமாக நினைவு விழாவாகப் போற்றுதல் வேண்டும் என்ற கருத்தை யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான சிறிதரன் அண்மையில் பாராளுமன்ற உரையின் போது குறிப்பிட்டார். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு விடுதலைப் போராளி; அவர் தமிழ்த் தேசிய விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடித் தனது உயிரை நீத்தவர் என்ற கருத்தை அவர் தன் உரையில்



வெளிப்படுத்தினார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோகண விஜயவீர ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பகிரங்கமாக நினைவு கூரப்படுவது போல் பிரபாகரனும் நினைவு கூரப்படவேண்டும் என்றார். சிறிதரன் என்ன கூறினார் என்பதோடு, அவர் கூறியதற்கு எழுந்த எதிர்ப்பு எத்தகையது என்பதும் அரசியல் முக்கியத்துவம் உடையது. இந்த எதிர்ப்பின் ஊடாக வெறுப்பு, பழிவாங்கும் வெறித்தனம், தமது அதிகாரத்தை அசைக்க முடியாது என்ற அகம்பாவமும் மேலாண்மையும் போன்ற உணர்வுகளை எதிர்ப்பாளர்கள் கடும் கோபத்தோடு வெளியிட்டனர்.

ஒரு எரிமலை குமுறி வெடித்தது; தீப்பிழம்புகள் சிதறின. இந்தப் பயங்கரப்பிசாசை, வெறுத்ததற்குரிய கெட்ட கனவை மீட்டு உயிர்ப்பிப்பதற்கு உமக்கு அவ்வளவு துணிச்சலா? நாம் இதை அழிப்பதற்குக் கொடுத்த விலை என்ன? நாம் செய்த தியாகம், பட்ட வேதனை எவ்வளவு? உமக்கு நாம் நல்ல பாடம் படிப்பிப்போம். இதைப் பற்றி நீ மறுபடியும் நினைத்துப் பார்க்க முடியாதபடி நல்ல பாடம் உமக்குக் கிடைக்கும். இதுதான்சிறிதரனின் பேச்சுக்குக் கிடைத்த வெறித்தனமான பதிலாக இருந்தது. இத்தீவிரவாத எதிர்ப்புக்குரல் அரசாலும் ஊடகங்களாலும் பிரசாரப்படுத்தப்பட்டது. இந்த எதிர்ப்பு, பதிற்குறி உள்ளுணர்வாகவே கிளர்ந்து எழுந்தது. இது ஒரு அநாகரீக நிலை மனத்தின் உளவியல் வெளிப்பாடு. ஒரு தரப்பின் கற்பிதமான உயர்வு மனப்பான்மை, வீறாப்பு, தம்மை வெல்லவோ வீழ்த்தவோ முடியாது என்ற அகம்பாவம் என்பனவற்றின் மீது விழுந்த துணிச்சல் மிக்க தாக்குதலின் எதிரொலிப்பு என்றே கருதலாம்.

### போருக்கான அறைகூவல்

சிறிதரனின் இந்தச் செயலுக்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. அவரது செயல் அரசியல் யாப்புக்கு அமைவாக எடுத்துக்கொண்ட சத்தியப்பிரமாணத்திற்கு மாறானது. பாராளுமன்றத்தை அவமதிப்பது, அவர் ஓர் அரசதுரோகிச் சட்டத்தின் முன்னிறுத்தித் தண்டிக்கப்படவேண்டியவர் என்றெல்லாம் கண்டன மாரி பொழிந்தது. அத்தோடு 'தாய் நாட்டின் துரோகிகள்' எல்லோருக்கும் எதிரான போர்ப் பிரகடனமாகவும் அது அமைந்தது.

> ஸ்ரீதரனின் பேச்சுக்கு ஒன்றுபட்ட சூழலில் எதிர்ப்பு கிளப்பப்பட்டது. இது இலங்கையின் அரசியலில் சிங்கள-பௌத்த மேலாதிக்க அரசியலின் பலத்தை வெளிப்படுத்துகிறது. சிங்கள பௌத்த மேலாதிக்கம் அரசின் மீது தனது இறுக்கமான பிடியை வைத்துள்ளது. அது நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுகிறது. இனவாதப் பேரழிவுகளைக்கொண்டுவரும் ஆற்றல் அதற்கு உண்டு

எம்மைச்சூழ்ந்து அந்நியச் சக்திகள், அந்நிய அடிவருடிகள், புலனாய்வாளர்கள், பயங்கர எதிரிகள் உள்ளிருந்தே குழிபறிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள நிலையில் விடுக்கும் போருக்கான அறைகூவல் இது. ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் முன்னால் மண்டியிட மறுக்கும் அனைவரும் எதிரிகளாக்கப்படுவதோடு அவர்களுக்கு எதிரான இப்போர்ப்பிரகடனம் நாட்டுப்பற்று, அரசுக்கு விசுவாசம் செலுத்துதல், மக்களுக்குச் செலுத்த வேண்டிய கடப்பாடு, தேசத்தின் மீது மக்கள் கொண்ட பற்று என்பனவற்றோடு சமப்படுத்தப்படுகின்றன. இந்த அரசுக்கு எதிர்ப்பு எந்தக் கோணத்தில் இருந்து எந்த வடிவில் வந்தாலும் அதை தேசத்துரோகம், சட்ட விரோதமானது, ஆபத்தானது என்று வசைபாடவும் தூற்றவும் தொடங்கி விடுவார்கள். சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்று யாராக இருந்தாலும் மூச்சு விடக்கூடாது! இதுவொன்றும் புதுமையானதல்ல. நாம் இதற்கு நன்கு பழக்கப்பட்டிருக்கிறோம். நவபாசிச நவகாலனித்துவ, தரகு முதலாளித்துவ அரசு வாந்தியெடுக்கும் அருவருப்பான இந்த வசைபாடல் எமக்கு பரிச்சயமான பழைய பல்லவி ஆகும்.

### நவபாசிச நிகழ்ச்சி நிரல்

சிங்கள - பௌத்த தேசியத்திற்கும் அரசுக்கும் எதிராகக் கிளம்பியுள்ள பேராபத்து ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகுமாறு கூறும் கணினி வழி கடிதம் (இ-மெயில்) அனுப்பப்பட்டது. சுற்றுக்கு வந்த இந்தக் கடிதம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டுவரும் சதிவேலையில் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும், அவர்கள் திட்டங்களை முன்னெடுக்கும் நிகழ்ச்சி நிரல் இணைக்கப்பட்டுள்ளது என்றும் அந்நியச் சக்திகள் இந்த சதிவேலையில் முனைந்து நிற்கின்றன என்றும் கூறப்படுகிறது. வருகின்ற மார்ச் மாதம் ஜெனீவாவில் அரசின் மீதான சுருக்குக்கயிற்றை இறுக்குவதற்கும், பொறுப்புக் கூறல், நல்லிணக்கச் செயற்பாடுகள் என்பனவற்றை காரணம்காட்டி அரசை மடக்குவதற்குமான செயற்திட்டத்தின் ஓர் அங்கமே இதுவென்றும் குற்றம் சாட்டப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள், வசைபாடல்களின் பின்னணி என்ன? ஏன் இப்படிச் சன்னதம் கொண்டு ஆட வேண்டும். இதற்கான காரணம் தெளிவானது. இராணுவ சர்வாதிகார ஆட்சியை வலுப்படுத்தி எந்தவிதமான எதிர்ப்பையும் சாத்தியமில்லாமல் செய்வது தான் இந்த அரசின் நோக்கம். முழுமையும் இராணுவ மயமாக்கப்பட்ட நவபாசிச ஆட்சியை இந்நாட்டில் விரைவி

லேயே ஏற்படுத்திவிடலாம். ஏனெனில் அதற்குத் தேவையான அடிப்படைகள் எல்லாம் தற்போது இருக்கின்றன. காலனித்துவ கட்டத்தின் கொடுமைகளை விட இன்றைய நவகாலனித்துவ கட்டம் மோசமானது, பயங்கரமானது என்பதற்கு வேறு என்ன சாட்சி வேண்டும்? ஐந்து நூற்றாண்டுகளாக நாம்பட்ட அவலத்தை விட இன்றைய நிலை எவ்வளவு மோசமானது? விடுதலைக்காக நாம் இன்றும் கொடுக்க வேண்டிய விலை தான் என்ன? என்று தணியும் எங்கள் சுதந்திரத் தாகம்?

சிறிதரனின் பேச்சுக்கு ஒன்றுபட்ட சூழலில் எதிர்ப்புக் கிளப்பப்பட்டது. இது இலங்கையின் அரசியலில் சிங்கள - பௌத்த மேலாதிக்க அரசியலின் பலத்தை வெளிப்படுத்துகிறது. சிங்கள- பௌத்த மேலாதிக்கம் அரசின் மீது தனது இறுக்கமான பிடியை வைத்துள்ளது. அது நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுச் செயற்படுகிறது. இனவாதப் பேரழிவுகளைக் கொண்டு வரும் ஆற்றல் அதற்கு உண்டு. கறுப்பு ஜூலை, பிந்துனுவெவ படுகொலைகள் என்ற இரண்டும் தகுந்த உதாரணங்களாகும். அதற்கு அரசு ஆதரவும் உதவியும் உண்டு. இராணுவத்தின் உயர் பீடத்தோடும் அதற்குத் தொடர்பு உண்டு. சிறிதரனின் பேச்சுக்கு எழும் எதிர்ப்பை வைத்துக் கொண்டு வடமாகாண சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வடமாகாண ஆட்சியைக் கலைக்கும் அளவுக்குப் போகலாம். நாட்டை கொந்தளிப்பில் ஆழ்த்தலாம். விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுத்து விட்டார்கள் என்று பிரசாரம் செய்யலாம். நவபாசிச அரசின் திட்டம் அதுதான். சிறிதரனின் பேச்சுக்கு தமிழ் அரசியல் தலைமையிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கவில்லை. அவரது கருத்தில் இருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்ளவே தமிழர் தரப்பு முயன்றதைக் காணலாம். தமிழரசுக் கட்சியின் உயர்தலைமைப்பீடம் தமக்கு சிறிதரன் கருத்தில் உடன்பாடு இல்லையென்பதைத் தெரிவித்து விட்டனர். இது எதனைக் காட்டுகின்றதென்றால் தமிழர் மத்தியில் உள்ள நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ வர்க்கத்தலைவர்கள் வெகுஜனங்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே ஆயுதப் போராட்டத்தைப் பற்றிப் புகழ்ந்துரைப்பார்கள். ஆனால், பிரச்சினை முற்றும் போது அதனைக் கண்டிப்பார்கள். இந்நிலையில் தமிழ்த்தேசிய இனத்தின் நிலை என்னவாகும்? விடுதலைக்கான போராட்டத்தை யார் முன்னெடுக்கப் போகிறார்கள்?

## தொடர்ச்சியான பிரசாரம்

சிறிதரனை ஒரு துரோகியாகவும் பயங்கரமான எதிரியாகவும் காட்டுவதற்கான பிரசாரப் போரில் பலர் இறங்கினர். அரசின் உயர்மட்டத்தில் அதிகாரம் உள்ளவர்களும், பொதுபல சேனா, சிங்கள ராவய போன்றனவும் இப்பிரசாரத்தில் முன்னணியில் நின்றன. அவருக்குத் தகுந்த தண்டனை வழங்குவதோடு, அவரைப் போன்ற துரோகிகள் யாவருக்கும் நல்லதொரு பாடம் படிப்பிக்கும் வகையில் சட்டம் கொண்டுவந்து தண்டிக்க வேண்டும் என்றனர். நாட்டுக்குள்ளும், வெளியே சர்வதேச மட்டத்திலும் இயங்கும் எல்லோரும் இதில் உள்ளடக்கப்படவேண்டும். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், இந்து, இஸ்லாம் என்று எந்தவித வேறுபாடும் இல்லாமல் யார் யார் அரசாங்கத்தையும், ஒற்றையாட்சி முறையையும் எதிர்த்தும், சுயநிர்ணய உரிமைக்கும் ஏதேனும் வகையில் விடுதலைப் புலிகளுக்கும் அனுதாபத்தையோ மதிப்பையோ காட்டுவதைத் தடுத்து நிறுத்துவதோடு, தண்டிக்க வேண்டும் என்று கருதினர். சிங்கள- பௌத்த அரசு, ஒற்றையாட்சி அரசு என்ற மேலாதிக்க முறைமையின் அதிகாரத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாகச் சிறிதரன் விவகாரத்தைப் பயன்படுத்தினர். அரச ஊடகங்கள் கடுங்கோபத்தை வெளிப்படுத்தின; விடுதலைப் புலிகளின் குற்றங்கள் அவர்கள் நிராயுதபாணிகளை எப்படிக் கொலை செய்தார்கள்; குழந்தைகள் உட்பட

> தமிழரசுக்கட்சியின் உயர் தலைமைப்பீடம் அதற்கு ஸ்ரீதரனின் கருத்தில் உடன்பாடு இல்லை என்பதைத் தெரிவித்துவிட்டது. இது எதனைக் காட்டுகிறது என்றால் தமிழர் மத்தியிலுள்ள நில பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ வர்க்கத்தலைவர்கள் வெகுஜனங்களின் ஆதரவைப்பெறுவதற்காகவே ஆயுதப் போராட்டத்தை புகழ்ந்துரைப்பார்கள். பிரச்சினை முற்றும் போது அதனைக் கண்டிப்பார்கள்

முழுக்குடும்பங்களையே படுகொலை செய்தார்கள் என்பதை விவரணப்படங்கள் மூலம் காட்டினார்கள். இவ்விவரணப் படங்களின் போது பௌத்த வணக்கத்தலங்களையும், அங்கு வழிபட்டுக்கொண்டிருந்த பக்தர்களையும் தாக்கியமை, சரணடைந்த நிராயுதபாணிகளான நபர்களைப் படுகொலை செய்தமை, சிறுவர்களை போராளிகளாகச் சேர்த்தமை, தமிழ் அரசியல் தலைவர்களைக் கொலை செய்தமை, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கொலை செய்தமை, இனச்சுத்திகரிப்பை நடத்தியமை ஆகிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டும் பிரசாரம் செய்யப்பட்டது. இலத்திரனியல் ஊடகங்களும், அச்சு ஊடகங்களும் பிரபாகரன் ஒரு மனநோய் பிடித்த பயங்கரவாதி என்றும் உலகத்திலேயே மிக

வும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத இயக்கம் விடுதலைப்புலிகள் இயக்கமாகும் என்று எடுத்துக்கூறின. இந்தப் பிரசாரத்தைக் கேள்விக்குட்படுத்துவதோ, அல்லது அரசின் இப்பிரகடனத்தை மறுத்துரைப்பதோ தேசத்துரோகமாகவும் அவ்வாறு செய்பவர் அரசின் பகைவர் ஆகவும் ஆகும் நிலை உள்ளது. அத்தகைய அரச விரோதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுக் குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனையைப் பெறும் ஆபத்தும் உள்ளது. இதுவே இந்தப் பிரசாரம் மக்களுக்குச் சொல்ல வரும் செய்தியுமாகும்.

### ஏகாதிபத்தியம் உருவாக்கும் கருத்தொருமை

விடுதலைப்புலிகள் பற்றியும் அதன் தலைவர் பற்றியும் ஒன்றுபட்ட கருத்தொருமையை உருவாக்கியுள்ளார்கள். இந்தக் கருத்தில் அரசாங்கம், அரசு, எதிர்க்கட்சிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கள் என்று எல்லாத்தரப்பினரும் ஒற்றுமைப்படுகிறார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிறிதரனின் கருத்தை மறுதலித்தார்.

> வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கருத்தொற்றுமையைக் கட்டியெழுப்பும் நவகாலனித்துவ அரசின் வர்க்கப்பின்னணி என்ன? ஏன் இந்தக்கருத்தொற்றுமை வர்க்க வேறுபாடுகளைக் கடந்து சமூகத்தின் எல்லா மட்டங்களையும் உட்படுத்தி நிற்கிறது?

அவர் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாக, ஒரு ஆபத்தான சக்தியாக வர்ணித்தார். இந்தக் கருத்தொற்றுமை பிராந்தியத்தின் வல்லரசுகளையும் உலக வல்லரசுகளையும் இணைத்ததாயும் பலம்பெற்றுள்ளது. இதிலிருந்து விலகி நிற்கும் நாடாக எந்த வல்லரசும் இல்லையென்பதும் கவனிப்புக்குரியது. இதனால் இதனை -அதாவது விடுதலைப்புலி எதிர்ப்பை, உலகு தழுவிய பெரும் இணக்கப்பாடு (a grand imperialist consensus) இப்படியான ஒரு பெரும் கூட்டாளிதான் யுத்தத்திற்கு ஆதரவைக் கொடுத்தது.

### சிறிதரன் எத்திசையில் செல்கிறார்?

சிறிதரன் உணர்வுபூர்வமாகவும், திட்டமிட்ட வகையிலும் இந்தப் பிரசார அலைக்கு எதிராக எதிர்நீச்சல் போடத்துணிந்தது ஏன்? தெரிந்துகொண்டே இத்தகைய கொந்தளிப்பை, எதிர்ப்பை அவர் ஏன் தூண்டினார்? தமிழரசுக் கட்சிக்கு உள்ளேயே குழப்பத்தையும், பிளவையும் ஏற்படுத்த ஏன் துணிந்தார்? இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தேசிய இனங்களுக்கும் எதிரான ராஜபக்ஷ அரசின் சிங்கள-பௌத்த, இனவாத முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசின் கொள்கைகளுக்கும் மேலும் வலுவூட்டக்கூடிய அதன் நடவடிக்கைகளுக்கும் நியாயம் கற்பிக்கக்கூடிய செயலில் சிறிதரன் இறங்கியது ஏன்? இதை தனி ஒருவரின் பொதுப்போக்கில் இருந்து விலகி நிற்கும் ஒருவரின் பைத்தியக்காரத்தனம் என்று ஒதுக்குவதா? அல்லது சிறிதரன் மிகுந்த துணிச்சலோடும் வீரத்தோடும் போற்றும் ஒரு உணர்வுபூர்வமான நம்பிக்கையின் வெளிப்பாடாக ஏன் அவரது பேச்சைக் கொள்ள முடியாது? ஆண்டாண்டு காலமாக தமிழினம் பட்ட அவமானம், ஒதுக்குதல், கீழ்மைப்படுத்தல் என்பன மறக்கப்படக்கூடியன வா?. நீண்ட காலமாகத் தொடர்ந்த இராணுவ ஒடுக்குமுறை, பட்ட துன்பமும் மௌனமாகத் தாங்கிக் கொண்ட அவலமும் மறக்கக்கூடியனவா? ஆகவே தான் ஒரு மனிதன் என்ற முறையில், ஒரு தமிழன் என்ற முறையில் அவரிடம் இருந்து பீறிட்டு எழும் ஒரு உள்ளக்குமுறலாக ஏன் இதைக் கொள்ள முடியாது?

### உண்மையைக் கண்டறிதல்

பொய்யான அறிக்கைகள், ஆவணங்கள், கட்டுரைகள் என்ற மணல் குவியலுக்குள் அடியில் புதைந்து போன உண்மையைத் தேடிக் கண்டறிய வேண்டும். பொய்கள், புனைவுகள், திட்டமிட்ட திரிபுபடுத்தல்கள் அன்றாடம் உற்பத்தி செய்யப்படுகின்றது, பரப்பப்படுகின்றது. பொது மக்களின் சிந்தனையும் உணர்வும் இப்பிரசாரத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. கருத்தியல், உளவியல், உணர்வு என்பன தரகு முதலாளித்துவம் விதித்த வரையறைகளுக்குள் உருவாக்கப்பட்டு மக்கள் அவற்றால் பிணைத்து வைக்கப்படுகின்றனர். இவ்விடயத்தில் நாம் தெளிவான வர்க்க நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அரசியல் சக்திகளைப்பின்னின்று நெறிப்படுத்தும் வர்க்கநலன்களை நாம் கண்டுகொள்ளாவிட்டால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாகவே இருப்போம். இது லெனின் கூறிய உண்மை. வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கருத்தொற்றுமையைக் கட்டியெழுப்பும் நவகாலனித்துவ அரசின் வர்க்கப் பின்னணி என்ன? ஏன் இந்த கருத்தொற்றுமை வர்க்க வேறுபாடுகளைக் கடந்து சமூகத்தின் எல்லா மட்டத்தினையும் உட்படுத்தி நிற்கிறது. வர்க்க ஒடுக்குமுறையும் தேசிய இனங்களின் ஒடுக்குமுறையும் ஒன்றிணை ந்து செல்கிறது. அது நவகாலனித்துவ தரகு முதலாளித்துவ அரசினதும் அரசாங்கத்தினதும் தந்திரோபாயங்களில் ஒன்று என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியத்தின் முகவர்கள் என்ற முறையில் தங்கள் பணியைச் சரியாகவே செய்கிறார்கள். ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரித்து பிளவு படுத்தி

அவர்களின் போராட்ட உணர்வு களை மழுங்கடித்து புரட்சிகர சக்தி கள் ஒன்றுபட்டு இந்த முறைமைக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதைத் தடுப் பதற்கான தந்திரோபா யமே இதுவா கும். தேசிய இன ஒடுக்குமுறை கால னியத்தாலும் ஏகாதிபத்தியத்தினாலும் நன்கு பரீட்சித்துப் பார்க்கப்பட்ட கருவி. இதனைக்கொண்டு மக்க ளைப் பிளவுபடுத்தி ஆளலாம்.

> நாங்கள் மக்களுக்கும் இறந்த தியாகிகளுக்கும் மரியாதை செய்வதென்றால் அது இரத்தத்தால் செய்யப்பட்ட தியாகங்களிலிருந்து பாடங்களைப் படித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் செய்த தவறுகளை மீண்டும் செய்ய மாட்டோம் என்று உறுதிபூண வேண்டும். தவறான பாதைகளில் சென்றதால் ஏற்பட்ட துன்பம், அழிவுகளையும் இறுதியில் தோல்வியையும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

### காரணமும் விளைவும்

திட்டமிடப்பட்ட ஒடுக்குமுறை யின் விளைவாகவே தமிழ்த்தேசிய இனத்தின் ஆயுதம் தாங்கிய விடுத லைப்போராட்டம் கிளர்ந்தெழுந்தது. அப்போராட்டம் எல்லாவகையான சட்ட,அரசியல் யாப்பு வழி, அரசி யல் வழிமுறைகள் யாவும் தோல்வி கண்டபின்னரே எழுச்சி பெற்றது. இப்போராட்டங்களை பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசும் சதிகள் மூலம் மழுங்கடித்து தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தன. இதன் பயனாக அரசின் ஆதரவுடன் கூடிய கலகங் கள் இடம்பெற்றன.ஆயுதம் கொண்டு மக்கள் ஒடுக்கப்பட்டனர். இதனால் தமது சுயநிர்ணய உரிமையைக் கோரி ஆயுதப்போராட்டத்தில் இறங் குவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியிருக்கவில்லை. ஆளும்வர்க்கத் தின் இனத்துவேசக் கொள்கையும் பயங்கரவாத உத்திகளுமே தனிநாட் டுக்கான போராட்டத்தை சாத்திய மாக்கின. இதுவே சமாதான, சக வாழ்வு என்பது ஒரு மாயை, பொய்த்தோற்றம் என்பதை நிரூபித் தது. பழைய இடதுசாரிகளும் புதிய இடதுசாரிகளும் ஒன்றுசேர்ந்து படுது ரோகத்தைச் செய்தனர். 'பொறுப்புக் கூறுதல்', 'நல்லிணக்கம்' என்று பேசு வது சுத்த ஏமாற்று அன்றி வேறெ ன்ன? அரசியல் ஒடுக்குமுறை, பொருளாதார ரீதியில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல், அவ மதிப்பும், இழிவும் ஆகியன தொட ரப்போகின்றன. இன்றைய பணி ஒரு மக்கள் ஜனநாயக அரசை அமைப்ப தேயாகும். எல்லா ஒடுக்கப்பட்ட மக் களையும் தேசிய இனங்களையும் எம்மோடு இணைத்துக்கொண்டு போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே இது சாத்தியமாகும்.

### பயங்கரவாத அரசியல்

அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் அடிப்படை ஜனநாயக உரிமையை நாம் மாவோயிஸ்ட்டு கள் என்ற வகையில் தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளோம். பெரும் பான்மைச் சிங்கள -பௌத்த இனத் தின் ஆதிக்கத்தால் ஒடுக்கப்படும் முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் உட்பட்ட அனைத்து தேசிய இனங்க ளுக்கும் இவ்வுரிமை உள்ளதென நாம் ஏற்கின்றோம். ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கியத்தை இலங்கையின் மக்கள் என்ற அடிப்படையில் கட்டி யெழுப்ப வேண்டும் என நாம் நம்புகின்றோம். மக்கள் விடுதலை முன்னணியும் விடுதலைப் புலிகளும் பயங்கரவாதத்தில் இறங்கியதற்கு அடிப்படையாக அமைந்தது அரசின் பயங்கரவாதமே என நாம் நம்புகின் றோம். இலங்கையின் தரகு முதலா ளித்துவ அரசு மக்களுக்கு எதிரான பல ஒடுக்குமுறைகளை நடத்தி வந்த தோடு, இனக்கலவரம், பெருந்தொ கையில் மக்களைக் கொன்று குவித் தல், நீதிக்குப் புறம்பான கொலைகள், ஆட்கடத்தல்கள், பாலியல் வன்புண ர்ச்சி என்பனவற்றைத் திட்டமிட்ட முறையில் செய்து வந்தது. ஆகவே, விஞ்ஞான முறையில் சிந்திக்கத் தெரிந்த எவரும் காரணம் எது, விளைவு எது என்பதைப் பிரித்து அறிந்துகொள்வர். கட்டமைப்பு ரீதி யான காரணங்களுக்கும் தோற்ற அளவிலான விளைவுகளுக்குமி டையே உள்ள பேதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### புரட்சிகர கம்யூனிஸமும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்

மாவோயிஸ்ட்டுகளாகிய நாம் பயங்கரவாதத்தை ஒரு கொள்கை யாக ஏற்பதில்லை. எமது கொள்கை மூன்று உன்னத புரட்சிகளின் மீது கட் டமைக்கப்பட்டது. பரிஸ் கம்யூன், ரஷ்யாவின் ஒக்டோபர் சோஷலிசப் புரட்சி, சீனாவின் பாட்டாளி வர்க்க கலாசாரப் புரட்சி என்பனவே அவை. மனித குலத்தின் வரலாற்றை மாற்றி யமைத்த விஞ்ஞானப் புரட்சிகளின் பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாம். ஏகாதிபத்தியத்தைப் பூண்டோடு அழிக்கும் புரட்சிகர தத்துவமாகிய மார்க்சிசம்- லெனினிசம்-மாவோயிச த்தில் நாம் நம்பிக்கை கொண்டுள் ளோம். பொதுமக்களை பயங்கர வாதம் கொண்டு அச்சுறுத்தும் நடவடிக்கையில் எமக்கு சிறிதள வேணும் நம்பிக்கை கிடையாது. ஆத லால், எமது வர்க்க எதிரியின் அற நீதியற்ற உத்திகளிலும் வரலாற்று அனுபவத்தால் செயலற்றதாக்கப் பட்ட தந்திரோபாயங்களிலும் நாம் நம்பிக்கை கொள்ளமாட்டோம். மக் களை புரட்சிகரப் பாதையில் ஒன்று

திரட்டி, வழிநடத்தி சர்வதேச தொழிலாளர் பாட்டாளிகளுடன் இணைந்த போராட்டங்களை நடத்துவதன் மூலம் ஏகாதிபத்தியத்தை புதைகுழிக்கு அனுப்புவதே எமது வேலைத்திட்டமாகும்.

### கற்றுக்கொண்ட பாடங்கள் : தியாகிகளுக்கு மரியாதை செய்தல்

நாங்கள் மக்களுக்கும் இறந்த தியாகிகளுக்கும் மரியாதை செய்வதென்றால் அது இரத்தத்தால் செய்யப்பட்ட தியாகங்களில் இருந்து பாடங்களைப் படித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் செய்த தவறுகளை மீண்டும் செய்ய மாட்டோம் என்று உறுதிபூண வேண்டும். தவறான பாதைகளில் சென்றதால் ஏற்பட்ட துன்பம், வேதனை, அழிவுகள் என்பனவற்றையும் இறுதியில் தோல்வியையும் அடைந்ததை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். பழிக்குப்பழி என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும். எதிரியின் வலையில் விழவும் பிற்போக்குச் சக்திகள் அரசியலில் அதை ஒரு கருவியாக உபயோகித்து தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவும் நாம் உதவக்கூடாது. 'துப்பாக்கியை அரசியல் தான் கட்டுப்படுத்த வேண்டும். மக்களுக்கு எதிராக ஒருபோதும் ஆயுதத்தை திருப்பக்கூடாது. வெகுஜனங்கள் தான் வரலாற்றை உருவாக்கும் வீரர்கள் என்பவை மாவோ எமக்கு சொல்லித்தந்த பாடங்கள். மக்கள் விடுதலை முன்னணியும் விடுதலைப்புலிகளும் பயங்கரவாதத்தில் நம்பிக்கை வைத்தனர். இது வெகுஜனங்கள் மீது நம்பிக்கை வைக்காமல் ஆயுதத்தின் மீது நம்பிக்கை வைத்தமைக்கு எடுத்துக்காட்டாகும். இந்த நம்பிக்கை முதலாளித்துவ அரசியலினதும் முதலாளித்துவ வர்க்க உணர்வினதும் வெளிப்பாடாகும். உண்மையான விடுதலைப் போராட்டத்தில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை.

### சுதந்திர தீபம்

சுதந்திர தீபத்தை எந்தவித அடக்குமுறையாலும் அணைக்க முடியாது. இராணுவத் தோல்வி, ஆக்கிரமிப்பு, அரசியல் அடிமைத்தனம் இவை யாவும் சுதந்திரத்திற்கான வேட்கையை இல்லாதொழிக்க முடியாது. பிரபாகரனின் வாழ்க்கையையும் அவர் விட்டுச்சென்ற பாரம்பரியத்தையும் போற்றுவதற்கு சிறிதரன் ஏன் முன்வந்தார் என்பதற்குரிய பதில் இதுதான். விடுதலைப் புலிகளினதும் பிரபாகரனினதும் பாதை தவறானது. அவர்கள் மாபெரும் தவறுகளை இழைத்தார்கள். இருந்தாலும் அவர்கள் விட்டுச்சென்ற உணர்வுகளான சுதந்திரம்,விடுதலை ஆகியன நினைவு கூரப்படும். மௌனமாக வேனும் அவர்களை நினைவு கூருவதும் அவர்கள் கண்ட கனவைப் போற்றுவதும் நடைபெறவே செய்யும். அது மனித இயற்கையின் விதி. எந்தளவிற்கு ஒன்றை ஞாபகப்படுத்துவதைத் தடுக்க முனையப்படுகிறதோ அந்தளவிற்கு அது மேற்கிளம்பவே செய்யும். அடிமைப்பட்ட ஒரு தேசிய இனம் கௌரவம், சமத்துவம், சுயாதீனம் என்பனவற்றுடனும் ஜனநாயகச் சுதந்திரத்துடனும் வாழ முடியாத நிலையில் இருந்து எழும் வேதனை, துன்பம், தாம் அடைந்த ஏமாற்றம், விரக்தி, அவமதிப்பு இவை யாவற்றினதும் ஒன்று சேர்ந்த வெளிப்பாடுதான் சிறிதரனின் உரையில் வெளிப்பட்டது. அது தமிழ் மக்களின் இதயபூர்வமான வேதனையை, சுதந்திரத்திற்கான வேட்கையை வெளிப்படுத்தியது. நாம் விரும்பலாம், விரும்பாமல் விடலாம். இது தான் சிறிதரன் பேசியதன் தாற்பரியம். நாம் எதிரணியில் நிற்கலாம். அவர் கருத்துகளோடு உடன்படாதவர்களாக இருக்கலாம். அவர்களுடைய உணர்வுபூர்வமானதும் துணிச்சல்மிக்கதுமான பேச்சு ஒரு யதார்த்தத்தை எடுத்துக்காட்டுகிறது. அவரது குரல் குரலற்றவர்களின் குரலாகும்.

### விடுதலைக்கான பாதை

விடுதலைப்புலிகளின் முதலாளித்துவ கருத்தியல்வாத அரசியல் வழியை நாம் விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். அவர்களது வழி இராணுவ ரீதியான அழித்தொழிப்பிற்கும் அரசியல் ஒடுக்குமுறைக்கும் வழிவகுத்ததை சுய விமர்சனத்துடன் நோக்குதல் வேண்டும். ஒரு சந்ததியையே துடைத்து எறிந்த இந்த அழிவில் இருந்து பெறக்கூடிய விஞ்ஞான உண்மைகளைக்கண்டு தெளிய வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் பாதையும் இதுபோன்றதே. இன்று அது ஒடுக்குமுறை அரசின் பக்கம் நிற்கிறது. கடந்த காலத்தில் இழைத்த தவறுகள் குறித்து சரியான விமர்சனத்தை முன்வைப்பதன் மூலம் மட்டுமே நாம் விஞ்ஞான அடிப்படையில் ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்க்கலாம். நடந்து முடிந்த பேரழிவிற்கும் பெருந்தவறுக்கும் நாம் கூட்டுப்பொறுப்பை ஏற்க வேண்டும். எம்மத்தியில் உள்ள பிளவுகளை ஒழித்து நாம் ஒற்றுமைப்படுதல் வேண்டும். எமது அறியாமையில் இருந்து மீளவேண்டும். இலங்கையின் மக்கள் என்ற முறையில் நாம் ஒன்றுபட்டு ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம் என்பனவற்றிற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இலங்கை மக்கள் குடியரசு ஒன்றை தாபிப்பதை எமது இலக்காகக் கொண்டு நாம் முன்செல்வோம். ■

***சுரேந்திர அஜித் ரூபசிங்க***
***இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாவோய்ஸ்ட்)யின் பொதுச்செயலாளர்***

உள்நாட்டு அரசியல்



# மேற்கு நாடுகளுடன் சேர்ந்து பொது நிலைப்பாட்டிற்கு நகர்கிறதா ஜப்பான்?



கலாநிதி ஜெஹான் பெரேரா

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புடைமையுடன் தொடர்புடைய விவகாரங்கள் மீதே சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக கவனத்தைக் குவித்துக்கொண்டிருக்கிறது. ஜெனீவாவில் 6 மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டங்கள் இலங்கைக்கு முக்கியமான சர்வதேச பிரமுகர்களின் வருகைக்கு வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி 23 ஆவது தடவையாக இலங்கைக்கு வந்திருந்தார். அண்மைய நாட்களில் கொழும்பிற்கு வந்திருக்கக்கூடிய முக்கியமான சர்வதேச பிரமுகர் என்றால் அவர்தான். வேறு நாடுகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்களும் இலங்கைக்கு வந்து தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்படுகின்ற நெருக்குதல்களுக்கு அவர்களும் தங்களது பங்களிப்பைச் செய்கிறார்கள்.

இலங்கையில் மாற்றம் ஏற்படவேண்டுமென்ற நாட்டத்தைக் கொண்டவர்கள் இந்த சர்வதேச நெருக்குதல்களை வரவேற்கிறார்கள். நாட்டிற்குள் எந்தவொருவரது கருத்தையும் பற்றிக் கவலைப்படத் தேவையில்லாத அளவிற்கு அரசாங்கம் மிகவும் பலம் பொருந்தியதாக மாறியிருக்கிறது. எந்தவிதமான விளைவைப் பற்றியும் பொருட்படுத்தாமல் தான் விரும்பியமாதிரி செயற்படலாம் என்று அரசாங்கம் நம்புகிறது. இந்தப்பின்னணியிலேயே சர்வதேச சமூகத்

தின் நெருக்குதலை வரவேற்கவேண்டியுள்ளது. கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு சாதகமான மாற்றத்திற்கும் காரணியாக சர்வதேச நெருக்குதலே அமைந்திருந்தது. வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதாக இந்தியாவினதும் ஜப்பானினதும் பிரதமர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழி அத்தகைய சாதகமான விளைவுகளுக்கு ஒரு உதாரணம்.

போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புடைமையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் மேற்கு நாடுகளுடன் சேர்ந்து பொதுவான நிலைப்பாடொன்றை எடுப்பதை நோக்கி ஜப்பான் நகர்ந்து செல்வதற்கான சமிக்ஞைகளை இலங்கைக்கான அகாசியின் அண்மைய விஜயத்தின் போது காணக்கூடியதாக இருந்தது. முழக்கங்களையும் சீற்றங்களையும் அல்ல முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக் காண்பதற்கே சர்வதேச சமூகம் மாத்திரமல்ல இலங்கையர்களும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்று அவர் சொன்னார்.

முன்னைய தனது விஜயங்களின் போது அகாசி வெளிப்படுத்திய கருத்துகளில் இருந்து இது வேறுபட்டதாக அமைந்திருக்கிறது. முன்னரெல்லாம் அவர் புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தைப் பாராட்டியதுடன் நல்லாட்சி, பொறுப்புடைமை விவகாரங்கள் தொடர்பில் உலக நாடுகள் பொறுமையைக் காக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வந்தார்.

கடந்த காலத்தில் இலங்கையின் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு அகாசி கடைப்பிடித்த அணுகுமுறை இலங்கை தொடர்பான ஜப்பானில் ஒட்டுமொத்த கொள்கையின் பொதுவான செல்திசைக்கு இசைவானதாகவே இருந்து வந்தது. இதுவரை ஜப்பான் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மேற்கு நாடுகளின் அணுகுமுறைகளுடன் ஒத்துச் செயற்படவில்லை. இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஜப்பான் அதில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தது. போர்க்காலகட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு மேற்குலக நாடுகள் அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களைப் பிரயோகித்த போது அவற்றுடன் இணைந்து கொள்ள ஜப்பான் மறுத்தது. ஜப்பானின் ஏராளமான உதவிகள் போர்க்காலகட்டத்தின் போது அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்ட பற்றாக்குறையைக் குறைப்பதற்கு பயனுள்ள வகையில் உதவின. அதனால் போருக்கு கூடுதலான நிதியைச் செலவிட அரசாங்கத்தினால் முடிந்தது.

2ஆவது உலக மகா யுத்த காலத்தில் ஜப்பான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் சரித்திரத்தை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும் போது இலங்கையை புரிந்துகொள்ளக்கூடிய ஒரு நிலையில் அந்த நாடு இருந்து வந்திருக்கிறது என்பதை உணர முடியும். ஜப்பானின் நேச அணியான ஜேர்மனி போருக்குப்பிறகு அதன் கடந்த காலத்துடனான தொடர்பை முற்றுமுழுதாகக் கைவிடக்கூடியதாக இருந்த அதேவேளை ஜப்பானினால் அவ்வாறு செய்யக்கூடியதாக இருக்கவில்லை. யூதர்களுக்கும் ஏனைய சிறுபான்மையினங்களுக்கும் எதிரான கொடுமைகளுக்கும் போர்க்குற்றங்களுக்குமான பொறுப்பை நாஜிகள் மீது சுமத்த ஜேர்மனியினால் முடிந்தது. சகலவிதமான கெடுதிகளினதும் ஊற்று மூலமாக ஹிட்லரையும் அவரது சகாக்களையும் குற்றஞ்சாட்டக் கூடியதாக இருந்தது. நாஜித் தலைமைத்துவத்தின் தோல்வியையும் மரணத்தையும் அடுத்து ஜேர்மனியினால் கடந்த காலத்துடனான தொடர்பை அறுத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. அத்துடன் குற்றங்களுக்காக அந்த நாடு மன்னிப்பையும் கேட்டுக்கொண்டது.

ஆனால், மறுபுறத்தில் ஜப்பானினால் அதன் கடந்தகாலத்துடனான தொடர்பை முற்றுமுழுதாக முறித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. 2ஆம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரும் யுத்த காலகட்டத்திலும் பெரிதாக மதிக்கப்பட்ட சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் வடிவில் கடந்த காலத்துடனான இணைப்பை ஜப்பான் தொடர்ந்தது. போரின் முடிவிற்குப் பின்னரும் சக்கரவர்த்தியை ஜப்பானியர்கள் தொடர்ந்தும் மதித்தார்கள். போரின் போது ஏகாதிபத்திய ஜப்பானிய இராணுவம் சக்கரவர்த்தியின் பதாகையின் கீழேயே சண்டையில் ஈடுபட்டது. ஜப்பானியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். போரில் வெற்றி பெற்றவர்கள் ஜப்பானியர்கள் மீது போர்க்குற்றங்களைச் சுமத்தினார்கள். ஆனால், போருக்குப் பின்னரான ஜப்பான் சக்கரவர்த்தியைக் கைவிடவில்லை. பதிலாக, ஜப்பானியர்களை ஐக்கியப்படுத்தும் ஒரு சக்தியாகவே அவர் நோக்கப்பட்டார்.

இலங்கையில் இன்று, போரை வென்றமைக்காக அரசாங்கத் தலைவர்களை பெரும்பான்மையினத்தவர்கள் தங்களை விடுதலை செய்த பெருமகன்களாக நோக்குகிறார்கள். மனித உரிமை மீறல்களைச் செய்ததாக இத்தலைவர்கள் மீது ஏனைய

> ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது வெளியிட்ட கருத்துகள் அவர் தனது முன்னைய விஜயங்களின் போது தெரிவித்து வந்திருக்கக்கூடிய கருத்துகளிலிருந்து வேறுபட்டதாக அமைந்திருந்தது. முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைக் காண்பதற்கு சர்வதேச சமூகம் மாத்திரமல்ல இலங்கையர்களும் கூட ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்று அவர் சொன்னார்

வர்கள் குற்றஞ்சாட்டுகின்ற போதிலும் கூட பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் இவர்களின் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டே போகிறது. ஜப்பானின் சொந்த வரலாறு காரணமாக, அந்த நாடு ஏனைய நாடுகளையும் விட இலங்கையின் திரிசங்கு நிலையை இனங்கண்டு உணர்ந்துகொள்ளக்கூடிய தகுநிலையில் இருக்கிறது. இலங்கை விவகாரத்தில் ஜப்பான் பொறுமைகாத்ததற்கும் சர்வதேச நெருக்குதல்களைத் தணிக்கக்கூடியதாக சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கைத் தலைவர்களைத் தூண்டுவதற்கு இடையறாது முயற்சித்ததற்கும் இதுவே அடிப்படைக்காரணமாகும். இந்தப் பின்புலத்திலேயே, அகாசி இறுதியாக இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது எடுத்த நிலைப்பாட்டை நோக்க வேண்டியிருக்கிறது. அதாவது, பொறுப்புடைமையுடன் தொடர்புடைய விவகாரங்களில் நடவடிக்கை எடுப்பதில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாதது குறித்து ஜப்பானும் விசனமடையத் தொடங்கியிருக்கிறது என்று கருதலாம்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ ஜப்பானிய பிரதமருக்கு அளித்த வாக்குறுதி மதித்து நடைமுறைப்படுத்தப்பட்டமைக்காக ஜப்பானிய அரசாங்கம் மகிழ்ச்சியடைந்தது என்பதில் சந்தேகம் இல்லை. சில மாதங்களுக்கு முன்னர் மாகாண சபை முறை முழுவதையும் இரத்துச் செய்வது குறித்து அரசாங்கம் சிந்தித்துக்கொண்டிருந்த பேதிலும் கூட, அந்தச் சிந்தனையை மாற்றி, பதிலாக வடமாகாண சபையை அமைத்திருக்கிறது. ஒரு அரசியல் அதிகாரபீடமாக வடமாகாண சபை அமைந்திருப்பது வடபகுதி மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் விரும்புகின்ற வழியில் தீர்வுகளைக் காண்பதற்கு வாய்ப்புகளைக் கணிசமான அளவிற்கு ஏற்படுத்தும் என்று நம்பலாம்.

ஆனால், இன்று வடமாகாண சபையில் என்ன நடந்துகொண்டிருக்கிறது? அங்கு நடைபெறுபவை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அதிகாரப் பரவலாக்கல் இல்லாதிருப்பதையே அம்பலப்படுத்தி நிற்கிறது. மேம்பாடு ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் தோன்றுவதைத் தடுக்கும் பிரதான முட்டுக்கட்டையாக ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையேயான முரண்நிலை விளங்குகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலை தொடர்வதை ஜப்பானோ அல்லது எஞ்சிய சர்வதேச சமூகமோ விரும்பவில்லை. இலங்கையில் இருந்து புறப்படுவதற்கு முன்னதாக அகாசி நிலைவரங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை சந்தேகத்திற்கு இடமின்றி முன்னெடுக்குமாறு அரசாங்கத் தலைவர்களை வலியுறுத்திக் கேட்டிருந்தார் என்று நம்பப்படுகிறது. சவால்களுக்கு முகம் கொடுத்து, நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கேற்ப உறுதியான முறையில் செயற்பட அரசாங்கம் தவறுமேயானால் ஜப்பானும் மேற்குலக நாடுகளுடன் சேர்ந்து இத்தடவை ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இலங்கை விஜயத்தின் இறுதியில் கொழும்பில் செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய அகாசி 'நல்லிணக்கத்திற்கான யோசனைகளை நடைமுறைப்படுத்தும் என்ற விடயத்தில் யதார்த்த நிலைக்கும் கருத்துருவுக்கும் இடையேயான நம்பகத்தன்மை இடைவெளியை அரசாங்கம் இல்லாதொழிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால், களத்தில் அதற்கான எந்தவொரு அறிகுறியையும் பெரிதாகக் காணவில்லை. குறிப்பாக இராணுவமய நீக்கம் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களில் முன்னேற்றம் இல்லை. திருகோணமலையில் காணாமல் போனோர்களின் குடும்பத்தவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதையும் எடுக்காமல் பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்த வகையான செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு மேலும் அபகீர்த்தியை ஏற்படுத்தும். ■

***(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

இரா.சம்பந்தனுக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கும் ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பு. இரண்டாவது தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்தைப் பயன்படுத்தப்போவதாக வெளிவரும் செய்திகள். வடமாகாண சபை அமைக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், விக்னேஸ்வரனின் உருப்படியாகச் செயற்படுவதற்கு வகை செய்யக்கூடிய செயற்பாடுகள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. மாகாண அரசுடன் மோதல்போக்கு ஒன்றைத்தான் அரசாங்கம் கையாள்கின்றது. இந்த நிலையில் திடீரென விடுக்கப்பட்டுள்ள அழைப்பு நிச்சயமாக மனப்பூர்வமானதாக இருக்கப்போவதில்லை. ஆற்றைக் கடக்கும் வரைதான் அண்ணனும் தம்பியும் என்பதுபோல இப்போது மார்ச் மாதத்தைத் தாண்டுவதற்கான வியூகங்களைத்தான் அரசு அமைக்கின்றது. அரசாங்கம் தமது அணுகுமுறையை மாற்றி விசுவாசமான பேச்சுகளுக்கு அழைப்பு விடுத்தால் அதனை ஏற்பதற்கு தாம் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்குப் பதிலளித்துள்ளார். ஆக, பந்து இப்போது மீண்டும் ஜனாதிபதியின் பக்கம் அடிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கான தமது அழைப்பு விசுவாசமானது என்பதை நிரூபிப்பதற்கு ஜனாதிபதி எதனையாவது செய்தாகவேண்டும். ■

உள்நாட்டு அரசியல்



போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்றாட தேவைப்களை பூர்த்தி செய்வதன் மூலமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண அரசு அந்த மக்களின் ஆதரவை நிலைநிறுத்திக்கொள்ள முடியும். இளம் தலைமுறையினர் மாகாண அரசு தங்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தே அதிக எதிர்பார்ப்புகளுடன் இருக்கின்றனர்

# அகாசியின்

வடமாகாண சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசு முழுமையாக பணி செய்யத் தொடங்கும் முன்னரே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவி விலகி விடுவாரோ என்று அச்சம் தோன்றியுள்ளது. மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசிற்கும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர் மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.சந்திரசிறிக்கும் இடையே தோன்றியுள்ள முரண்பாடுதான் இதுபோன்ற அவசியமற்ற கவலையைத் தோற்றுவித்திருக்கிறது. இதன் காரணமாக இனப்போரின் பாதிப்புகளில் இருந்து இன்னமும் முழுவதுமாக விடுபடாத அப்பாவித்தமிழ் மக்களின் நிகழ்காலத் தேவைகளும் எதிர்கால ஆதர்சங்களும் கேள்விக்குறியாகி உள்ளன. இதுவே வயிற்றுக்கும் அறிவுக்கும் இடையேயான உணர்ச்சிப் போராட்டமாக வெடிக்கும் வாய்ப்பும் உள்ளது. கடந்த கால அனுபவங்கள், நிகழ்கால அத்தியாவசியங்கள் அத்துடன் எதிர்காலம் குறித்த கனவுகளை மனதில் கொண்டால், இருசாராரும் முரண்நிலையைக் கைவிட்டு இணக்கபூர்வமான முறையில் செயற்படுவதற்கான வாய்ப்பு இன்னமும் உள்ளது.

தற்போது நிலவுகின்ற அரசியல் சூழ்நிலையில் வடமாகாணத்தை ஆளுகின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசு ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் உரிமை பெரிதா, கடமை பெரிதா என்ற கேள்விக்கு முதலில் பதிலைக் கண்டாக வேண்டும். தங்களுக்கு வடமாகாண தமிழ்



என்.சத்தியமூர்த்தி

# அறிவுரைக்கு அப்பால்

மக்கள் தேர்தலில் அளித்திருக்கும் பிர மாண்டமான வெற்றிக்குப் பின்னர் அந்த மக்களின் முக்கியமான முதல் எதிர்பார்ப்பு என்னவாக இருக்கும் என்பதையும் கூட்டமைப் பினர் புரி ந்துகொள்ள வேண்டும். தங்களுக்கு இடப்பட்டுள்ள அரசுப் பணிகளை செவ்வனே செய்வ தற்கும் அவர்கள் முயற்சித்தால் மாத் திரமே அதன் பயன்கள் அவர்களது மக்களைச் சென்றடையும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்க ளின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் மாத்திரமே கூட்ட மைப்பின் அரசு நிர்வாகம் அரசியல் ரீதியாக அந்த மக்களின் ஆதரவை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். காலம் செல்லும் தலைமுறைக்கு உரிமை அதி முக்கியமாக இருக்க லாம். ஆனால், இளந்தலைமுறையி னர் மாகாண அரசு தங்களுக்கு ஆற் றவேண்டிய கடமைகள் குறித்தே அதிக எதிர்ப்பார்ப்புகளுடன் இருக் கின்றனர். அவர்கள் ஏமாற்றம் அடை யும் விதத்தில் முதலமைச்சர் விக் னேஸ்வரன் தலைமையிலான அரசு செயற்படுமேயானால் கூட்டமைப்பு அடுத்தடுத்த தேர்தல்களில் ஏமாற்றத் தைச் சந்திக்கும் சூழ்நிலை கூட உரு வாகலாம்.

வடமாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில் கூட்ட மைப்பின் மூத்த தலைவர்கள் அரசி யல் காரணங்களுக்காக வெளிநாடுக ளுக்கு பயணம் மேற்கொண்டு வரு கின்றனர். அங்கெல்லாம் அவர்கள் உரிமைகள் குறித்துப் பேசுகின்றார் களே தவிர தங்களது தலைமையில் வடமாகாணத்தில் அமைந்திருக்கும் அரசின் கடமையை சிறப்புறச் செய் வதற்கு புலம் பெயர்ந்த தமிழர்களின் அறிவுரைகளையும் உதவிகளையும் கேட்டுப் பெற்றுவருவதாகச் செய்தி கள் இல்லை. புலம் பெயர்ந்த தமிழர் கள் மத்தியில் உள்ள அறிவுஜீவிகள், அறிஞர்கள் மற்றும் நிபுணர்களிடம் விட்டுப்போன - விடப்பட்டுப்போன அப்பாவித் தமிழ் மக்களின் முன் னேற்றத்திற்கான அரசு சார்ந்த முயற் சிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி யதாகவும் செய்திகள் இல்லவே இல்லை. இது கவலை அளிக்கும் ஒரு விடயமாகும்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் கூட் டமைப்பானது அங்குள்ள மேடைக ளில் இருந்து இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் உரிமைக் குரல் எழுப்புவதாகவும் இதனால் மத்திய அரசிற்கு கவலையைக் கொடுத்து வருவதாகவும் கூட செய்திகள் தெரி விக்கின்றன. ஆங்காங்கே இந்தத் தலைவர்களுக்கு அதிக அளவில் பணப்பரிசுகளும் வழங்கப்படுவதாக அவ்வப்போது வந்திருக்கக்கூடிய செய்திகளை உண்மையானவை அல்ல என்று நாம் நம்பலாம். என்றா லும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தி யில் பயணம் செய்யும் கூட்டமைப் பின் தலைவர்கள் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் இழந்த வாழ்வைப் புனரமைப்பதற்கான வழிவகைகளை யும் அதற்கான நிதி ஆதாரங்களை யும் சேர்த்து அவற்றை சட்டபூர்வ மான அந்தப் பயனாளிகளிடம் எப்ப டிச் சேர்க்கலாம் என்பது குறித்து ஆழ மாக யோசித்துச் செயற்படவேண் டும்.

### ஆளுநர் பிரச்சினையும், ஆளுமைப் பிரச்சினையும்

கூட்டமைப்பின் தலைமையைப் பொறுத்தவரை வடமாகாண அரசு மற்றும் அதன் அரசியலில் ஆளுந ரின் செயற்பாடுகள் தொடர்பிலான பிரச்சினைகளில் அதிகமான நேரத் தைச் செலவிட்டு வருகிறது என்றே தோன்றுகின்றது. அரசியலமைப்புக் கான 13ஆவது திருத்தத்தின் அடிப்ப டையிலான அதிகாரங்கள் மாகாண அரசிற்கு தேவையென்று அவர்கள் கோருவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், அந்த சட்டத்திருத்தத் தையே அவர்கள் முழுமையாக ஏற் றுக்கொள்ளவில்லையே. அதற் கென்ன சொல்வது? ஜனாதிபதி ராஜபக்ஷ அவர் உறுதியளித்த 13+ திட்டத்தை செயற்படுத்துகிறாரோ இல்லையோ கூட்டமைப்பு அதன் கோரிக்கையில் திடமாக இருக்கிறது.

13ஆவது திருத்தம் ஒரு குறிப்பி ட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட கார ணங்களுக்காக கொண்டுவரப்பட்ட தென்பது உண்மை. அந்தக் காலகட் டத்தில் தமிழ் அரசியல் தலைமை மாத்திரமாவது அதனை ஏற்று செயற் பட்டிருந்தால், இன்று அடுத்தடுத்த கட்டங்களை அடைந்திருக்கலாம். அன்று 13ஆவது திருத்தம் செயற் படுத்தப்பட்டுவிடக் கூடாதென்ப தைத் தெளிவாக இருந்த மிதவாத அரசியல் தலைமை இன்று அதற்கும்

அப்பால் சென்று அதிக அதிகாரங்கள் மாத்திரமே தங்களுக்கு ஏற்புடையவை என்று கூறிவருகின்றது. அரசுடனான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காண முடியாமல் போவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

கூட்டமைப்பினர் கோருகின்ற மாகாண அரசிற்கான அதிகாரங்கள் மொத்தமாக ஒரு தீர்வின் அடிப்படையில் தோன்றியவை. அதிக அதிகாரங்களும் அந்த அடிப்படையிலே அமைய முடியும். 13ஆவது திருத்தமும் சரி அதனோடு ஒட்டிய வடக்கு - கிழக்கு இணைப்பிற்கான சட்டமும் சரி அன்றைய காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது போராட்டத்தை முழுமையாகக் கைவிடவேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைந்தன. பேரழிவை ஏற்படுத்தும் இனப்போரை முடிவிற்குக் கொண்டுவருவதற்காக இலங்கை அரசு அன்று அதிகாரப் பரவலுக்கு ஒப்புக்கொண்டது என்றே அதனை நோக்க வேண்டும். ஆனால், அடுத்த கால் நூற்றாண்டு காலமாக போரையும் தீவிரவாதத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்த பின்னர், அந்த இயக்கமே இல்லாமலான பின்னர் தமிழ் அரசியல் தலைமை அதிக அதிகாரங்களைக் கோருவது ஒரு முரண்நிலையான விவாதப்பொருள்.

இடைப்பட்ட கால் நூற்றாண்டு காலத்தில், குறிப்பாக போரில் சிக்கித் தவித்த வடமாகாணத்தில் இராணுவ தலைமையிலான அரசியல் நிர்வாகம் செயற்படுவதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டது. அதனால்தான் என்னவோ, அங்கு ஆளுநரை நியமிக்க வேண்டிய நல்ல சூழல் உருவான போது அரசு ஒரு மூத்த இராணுவ அதிகாரியைத் தெரிந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்று எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாமல் அங்கு தேர்தல் நடந்து புதிய மாகாண அரசு பதவியேற்ற நிலையில் அதிகாரப் பரவல் முறை அமுல்படுத்தப்படவேண்டியது அத்தியாவசியமாகிவிட்டது.

இது குறித்த கூட்டமைப்பின் கோரிக்கைக்கு இரண்டு அலகுகள் உள்ளன. ஒன்று இராணுவ அதிகாரியை மாற்றிவிட்டு வேறொருவரை வடமாகாண ஆளுநராக நியமிப்பது. இரண்டு, தற்போது பிற மாகாண அரசுகள் அநுபவித்த அதிகாரங்களையும் அவற்றுடன் சேர்த்து ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புகளையும் வடமாகாண அரசுக்கு கிடைக்கச் செய்வது. இவை இரண்டுமே நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படவேண்டிய விடயங்கள்.

ஆனால், மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு மத்திய அரசு இத்தகைய மாற்றங்களை உடனடியாக, அதுவும் ஒரேயடியாகச் செய்து முடித்துவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அரசியல் ரீதியாக நடைமுறைச்சாத்தியமற்ற தொன்று. ஆளுநர் சந்திரசிறியை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு தேர்தலைச் சந்தித்து வெற்றி பெற்ற கூட்டமைப்பினர் ஆளுநர் மாற்றப்பட வேண்டும் என்பது உறுதியாக இரு ந்து பதவிப் பிரமாணத்தைச் செய்துகொள்ளாமலே இருந்திருந்தால் அந்த அளவிற்காவது தற்போதைய பிரச்சினையின் ஒரு பகுதி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

அதேவேளை, மாகாண அரசின் பிரதம செயலாளர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் போன்றோரின் நியமனத்தில் மத்திய அரசும் சரி ஆளுநரும் சரி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை கலந்தாலோசித்து முடிவெடுத்திருக்க வேண்டும். யார் பெரியவர் என்பது போன்ற விவாதங்களுக்கு அப்பால் மாகாண அரசுடன் சேர்ந்து செயற்பட வேண்டிய உயர் அதிகாரிகள் மாகாண அரசும் நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும் என்பது வெளிப்படையானது. அதில் மாகாண முதலமைச்சரை கலந்தாலோசிக்காமல் மத்திய அரசு தன்னிச்சையாக முடிவெடுத்து செயற்படவேண்டும் என்பது அதிகாரப்பரவல் குறித்த விவாதப் பொருள் மாத்திரமல்ல, அதற்கு அப்பால் சென்று புரையோடிப்போன இருதரப்பு அவநம்பிக்கையையும் வெளிக்காட்டுகிறது. அரசு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அரசியல் சாசன ரீதியாகவும் இது ஜனாதிபதி ராஜபக்‌ஷவின் நிலைப்பாட்டிற்கு எதிராக அமைந்திருந்தது.

அதேவேளை, ஆளுநர் இல்லாமலேயே தன்னிச்சையாக செயற்பட விரும்புவதுபோன்ற எண்ணத்தை கூட்டமைப்பின் அமைச்சர்கள் ஏற்படுத்தி வருகிறார்களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது. ஆளுநர் தான் தங்களை அழைத்து கலந்தாலோசிக்கவில்லை என்றாலும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அவரது அமைச்சரவைச் சகாக்களும் ஆளுநர் சந்திரசிறியுடன் அவ்வப்போது கலந்துரையாடி அரசு சம்பந்தப்பட்ட முடிவுகள் குறித்து ஆலோசனை நடத்தலாம். அவருடன் தங்கள் துறையின் செயற்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கலாம். இருசாராருக்கும் அனுபவமில்லையென்ற நிலையில் ஒருவரை ஒருவர் சார்ந்து கலந்தாலோசித்து செயற்படுவது தான் அதிகாரப் பரவல் முறையின் அடிப்படையே தவிர தனியாகச் செயற்படுவதல்ல.

### நிழல்யுத்தம்

வடமாகாணத்தில் தற்போது அரங்கேறிவரும் அரசியல் நிலைப்பாடுகள் தனிப்பட்ட தலைவர்களையோ ஏன் மத்திய மாகாண அரசுகளையோ மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அது இலங்கையின் ஒட்டுமொத்தமாக எதிர்நோக்கி வரும் சர்வதேச பிரச்சினையின் பிறிதொரு கட்டம் மாத்திரமே. எதிர்வரும்



மார்ச்மாதம் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐக் கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை யின் கூட்டத்திற்கு முன்னதாக அரங்கேறும் நிழல் யுத்தம் என்றே இதைக்கருத வேண்டி யுள்ளது. எப்போது இனப்பிரச்சினையை சர்வ தேச சமூகத்தின் மூலம் தங்களால் தீர்த்துக் கொள்ள முடியும் என்று கூட்டமைப்பு நம்பிக்கைகொள்ள ஆரம்பித்ததோ அன்றே இது போன்ற உள்நாட்டுப்பிரச்சினைகளை எதிர் கொள்ளவேண்டிய கட்டாயம் தோன்றிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்ட ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி மனித உரிமை மீறல்கள் குறித்த விட யங்களில் அரசு சரவெடி போன்று ஒலி - ஒளிக் காட்சிகளோடு நிறுத்திவிடாமல் தகுந்த நடவடிக் கைகளை முன்னெடுக்க வேண்டுமென்று கூறியிருந்தார். இத்தகைய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மட்டுமல்ல உள்நாட்டிலும் பல்வேறு தரப்பு மக்களும் எதிர்பார்ப்பதாகவும் அகாசி கருத்துத் தெரிவித்திருந்தார். இதில் இனப்போர் காலகட்டத்தைய போர்க்குற்றங்கள் மட்டுமல்ல பிற மனித உரிமை மீறல்கள் குறித் தும் அவர் கருத்தும் கவலையும் வெளியிட்டார் என்பது கவனிக்கத்தக்கது.

அகாசியும் சரி பிற சர்வதேச தலைவர்களும் சரி கொழும்பில் நடைபெற்ற பொதுநலவரசு உச்சிமகாநாட்டிற்குப் பின்னர் சிறிது அடக்கி வாசிக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகின் றது. போர்க்குற்றங்கள் மற்றும் அரசியல் தீர்வு குறித்து அரசு நியமித்த கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந் துரைத்த செயன்முறைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று மட்டுமே அவர்கள் தற்போது எதிர்பார்ப்பதாகக் கருதவேண்டியுள்ளது. ஆனால், அதில் தான் அரசுக்கு சிக்கல்கள் உள்ளன என்றும் எண்ணத்தோன்றுகின்றது.

உதாரணத்திற்கு அகாசி கூறியது போன்று சர்வதேச சமூகம் 'நல்லிணக்க ஆணைக்குழு' அறிவுரையோடு நிறுத்திக்கொள்ளுமா அல்லது பிறிதொரு காலகட்டத்தில் பிற மனித உரிமை மீறல்கள் என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை அரசை யும் அதன் தலைவர்களையும் முடக்கிவிடப் பார்க்குமா என்ற கவலை அரசு தரப்பிற்குத் தோன்றலாம். அதுபோன்றே நல்லி ணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளோடு சர்வதேச சமூகம் நிறுத்திக்கொள்ளுமா அல்லது எதிர்காலத்தில் ஒவ்வொன்றாக புதிய பிரச்சினை களை முன்வைக்குமா? இது வெறுமனே அறிவுசார் கேள்வியாக மட்டுமே தற்போது தோன்றினாலும் ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கும் வகையாக சர்வ தேச சமூகத்தின் நிலைப்பாடு மாறிவிடுமோ என்று அரசு கவலைப்பட்டால் அதில் தவறு இல்லை என்றே கூறவேண்டும்.

### பிள்ளையார் பிடிக்கப்போய்

இனப்போரின் முடிவிற்குப் பின்னரான கால கட்டத்தில் 2010 ஜனாதிபதித் தேர்தலில் முன் னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கத் தீர்மா னித்த போதே போர்க்குற்றம் என்பது அரசிய லாக மாறிவிட்டது என்றுதான் சொல்ல வேண் டும். அதாவது போர்க்கால மனித உரிமை மீறல் கள் குறித்த குற்றச்சாட்டுகளில் இருந்து கூட்ட மைப்பும் தமிழர் சமூகமும் பொன்சேகா தலை மையிலான இராணுவத்தை விடுவித்து விட்டது என்ற எண்ணமே உருவானது. அதில் இருந்து விடுபட்ட அரசியல் தலைமையையும் அரசி யல் பின்னணி கொண்ட அரசு உயரதிகாரி களும் மட்டுமே சர்வதேச சமூகத்தின் முன் குற்ற வாளிகளாக நிறுத்தப்படுவர் என்ற எண்ணம் உருவாகி விட்டது. இந்த எண்ணத்தை மாற்றுவ தற்கு சர்வதேச சமூகம் எந்த முயற்சியும் எடுக்க வில்லை.

இவ்வாறல்லாது, போர்க்காலக் குற்றங்களுக் காக இரண்டாம் மூன்றாம் கட்ட இராணுவ தளப திகளும் அவர்களின் கீழ் பணியாற் றிய இரா ணுவ வீரர்களும் மட்டுமே குறிவைக்கப்பட்டால்

(37ஆம் பக்கம் பார்க்க...)

# வலசைப் பறவை 1



பி.ஜெயமோகன்

# காற்றுமானியின் நடுநிலை

மிலன் குந்தேராவின் The Book of Laughter and Forgetting நாவலில் ஒரு நிகழ்ச்சி. 1948இல் சோவியத்படைகள் செக்கோஸ்லாவாகியாவுக்குள் ஆக்கிரமித்துக் கடந்து அந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சியமைக்கின்றன. செக் நாடு ருஷ்ய ஆதிக்க கம்யூனிஸ நாடாக அறிவிக்கப்படுகிறது. ருஷ்ய கம்யூனிஸ்ட் தலைவரான க்ளெமெண்ட் கோட்வால்ட் பிராக் நகரின் பரோக் பாலஸ் என்ற மாளிகையின் பால்கனிக்கு வந்து தன்முன் கூடியிருந்த பல்லாயிரம் மக்களைநோக்கி ஆவேசமான உரையொன்றை நிகழ்த்தினார். அவருக்கு அருகே அவரது தோழரான க்ளெமென்டிஸ் நின்றிருந்தார். பனிபெய்துகொண்டிருந்தது. கோட்வால்டின் தலை திறந்திருப்பதைக் கண்ட க்ளெமெண்டிஸ் தன் பனிக்குல்லாயைக் கழற்றி கோட்வால்டின் தலையில் அணிவித்தார்.

அந்த உப்பரிகையில் இருந்துதான் பொ ஈமிய மாநிலக் கம்யூனிஸ்ட்கட்சி பிறந்தது என்று சொல்லப்பட்டது. ஆகவே கம்யூனிஸ் பிரசார இயந்திரம் அந்தப்படத்தை பல்லாயிரம் பிரதிகள் எடுத்து நாடெங்கும் கொண்டுசென்றது. பள்ளிப்பாடங்கள் அருங்காட்சியகங்கள் எங்கும் அந்தப்படம் காணப்பட்டது. நான்கு வருடங்களுக்குப்பின் கிளெமென்டிஸ் கம்யூனிஸத் துரோகி என குற்றம் சுமத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அவரைப்பற்றிய அனைத்து தகவல்களும் வரலாற்றில் இருந்து அழிக்கப்பட்டன. கலைக்களஞ்சியங்கள் திருத்தப்பட்டன. புகைப்படங்கள் அனைத்திலும் அவர் இல்லாமலாக்கப்பட்டார். வரலாற்றுப்புகழ்பெற்ற அந்தப்புகைப்படத்தில் கிளெமென்டிஸ் இருந்த இடங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு அங்கே சுவர் இருந்தது, ஆனால் கோட்வால்டின் தலைமேல் கிளெமென்டிஸ் வைத்த அந்தக்குல்லாய் அங்கேதான் இருந்தது.

அதே கதையை சிலநாட்கள் முன் பி.பி.சி செய்தியில் வாசித்தேன். 2011இல் வடகொரிய கம்யூனிஸ அரசின் அதிபர் கிம் ஜோங் இல் இறந்தபோது அவரது சகோதரியின் கணவனான சாங்க் சோங் தாயேக் என்பவர் கிம் ஜோங்கின் மகனும் புதிய தலைவருமான கிம் ஜோங் உன் பதவிக்கு வந்து அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்தார். வடகொரிய அரசின் உண்மையான அதிகாரமையமாக சாங்க் சோங் தாயேக் இருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சாங்க் சோங் தாயேக் எல்லா பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார் என்ற தகவல் டிசம்பர் மாத இறுதியில் சர்வதேச ஊடகங்களுக்குத் தெரியவந்தது. அவரும் அவரது ஆதரவாளர்களும் சென்ற நவம்பரிலேயே பொது இடத்தில் தூக்கிலேற்றப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி பிறகு வந்தது.

இச்செய்தியை வடகொரியா எவ்வகையிலும் உறுதிப்படுத்தவில்லை. சென்ற டிசம்பர் 9ஆம் திகதி சாங்க் சோங் தாயேக் கொல்லப்பட்டதை வடகொரியா தனக்கே உரியமுறையில் உறுதிப்படுத்தியது. அதிபரின் நிகழ்ச்சிகள் பற்றிய அனைத்து புகைப்படங்களிலும் அனைத்து ஆவணப்படங்களிலும்

சாங் சோங் தாயேக் முழுமையாக அகற்றப்பட்டார். பி.பி.சி வெளியிட்ட செய்தியில் அனைத்துப் புகைப்படங்களிலும் அவர் கண்ணுக்குத்தெரியாமலானதைக் காண முடிகிறது. இயல்பாக மறைந்திருந்தால் அவர் கொஞ்ச காலத்தில் நினைவுகளில் இருந்து அழிந்திருப்பார். இனி மேல் அவர் என்றென்றும் கொரிய வரலாற்றில் இருந்து கொண்டிருப்பார்.

நான் எழுதிய பின்தொடரும் நிழலின் குரல் சோவியத் ருஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னணியில் எழுதப்பட்ட அரசியல் நாவல். முக்கால் நூற்றாண்டுகால ருஷ்யக் கம்யூனிஸப் பரிசோதனையின் பெறுமதியை ஆராய்வது. கருத்தியல் மனித அறத்துடன் எவ்வாறெல்லாம் முரண்படுகிறது என்பதை விவாதிப்பது. அந்நாவலுக்குள் ஒரு சிறுகதை வரும். இறுதியந்திரம் என்ற அச்சிறுகதை ஒரு மிகுபுனைவு. ஸ்டாலினைப் பார்க்க அழைத்துச்செல்லப்படும் ஒரு அறிவியல் கண்டுபிடிப்பாளரின் கதை அது. அவர் ஒரு ஜிப்ஸி. வரலாற்றின் பக்கங்களில் மறைந்து திரிந்த அனுபவங்களைக் கொண்டு அவர் ஓர் இயந்திரத்தைக் கண்டுபிடிக்கிறார். அந்த இயந்திரம் மனிதர்களை இல்லாமலாக்கிவிடும். நேரிலும், வரலாற்றிலும்,நினைவுகளிலும் எல்லாம் அவர் இறக்க மாட்டார், பிறக்காமலேயே ஆகிவிடுவார். இயந்திரத்தை ஸ்டாலின் வாங்கிக்கொள்கிறார். பல அதிகாரிகளை உடனுக்குடன் இல்லாமலாக்கி அதை சோதனைசெய்து நிறைவடைகிறார். பணம் பெற்றுக்கொண்டு அங்கிருந்து கிளம்பும் அந்த அறிவியல் கண்டுபிடிப்பாளர் ஒரு ரகசியத்தை அறிவார் என கதைமுடியும். இல்லாமலான அனைவரும் அந்த இயந்திரத்துக்குள் இருப்பார்கள். அந்த இயந்திரம் ஸ்டாலினின் தலைமாட்டில் இருந்துகொண்டிருக்கும்.

### அழித்தொழிப்பில் முடியும் அதிகார மோதல்

சர்வதிகார ஆட்சிகளுக்கு மக்கள் ஒரு பொருட்டே அல்ல. வலிமையான ஆயுதங்கள் மூலம், சுயமான வலங்கள் மூலம் உலக நாடுகளின் எதிர்ப்பை அலட்சியப்படுத்த முடிந்தால் எதைப்பற்றியும் கவலைப் பட வேண்டியதில்லை. உள்வட்ட அதிகார மோதல் எப்போதும் அழித்தொழிப்பிலேயே முடிகிறது

வரலாற்றில் புதியதாக ஏதும் நிகழ்வதில்லை போலும். பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட முகலாயச் சக்கரவர்த்தி அக்பரின் மாமன் பைராம் கானின் கதையும் இதுவே. பைராம்கான் ஹுமாயூனுக்கு மிக நெருக்கமான இராணுவத்தளபதி. ஹுமாயூன் பாரசீகத்தில் நாடிழந்து அலைந்தபோது துணைநின்றவர். மீண்டும் டில்லியை ஹுமாயூன் கைப்பற்றக் காரணமாக அமைந்தவர். ஹுமாயூன் இறந்தபோது 13 வயதாக இருந்த அக்பர் ஆட்சிக்கு வருவதற்கு பைராம்கான் தான் காரணம். பல்வேறு அதிகாரப்போட்டிகளையும் சதிகளையும் சமாளித்து அக்பரை அரியணையில் அமர்த்தி அவர் பாதுகாவலராக இருந்து ஆட்சிசெய்தவர். வலுவான இந்து அரசர்கள் ஹெமுவின் தலைமையில் அக்பரை எதிர்த்தபோது அவர்களைத் தோற்கடித்து அக்பரின் அரசைக் காப்பாற்றியவர் பைராம்கான்தான்.

பைராம்கான் ஷியா முஸ்லிம். சுன்னி முஸ்லிமான ஹுமாயூன் பாரசீகத்தில் நாடிழந்து அலைந்தபோது ஹுமாயூன் ஷியாவாக மாறினால் படைபலம் கொடுத்து ஆதரிப்பதாக பாரசீக மன்னர் சொன்னார். அதை ஏற்று ஹுமாயூன் ஷியாவாக மாறினார். பாரசீகப்படைகளின் உதவியுடன் ஹுமாயூன் டில்லியைக் கைப்பற்றினார். டில்லியைப் பிடித்ததும் அவர் மீண்டும் ஷியாவாக மாறினார். ஆப்கானில் பிறந்த ஷியா முஸ்லிமான பைராம்கான்தான் ஹுமாயூனுக்கும் பாரசீக மன்னருக்கும் இடையே பேச்சுவார்த்தைகளை நடத்தியவர். பைராம்கானுக்கு எதிராக டில்லியின் சுன்னி முஸ்லிம் படைத்தலைவர்களும் பிரபுக்களும் காழ்ப்புகொண்டிருந்தனர். அக்பர் பதவிக்கு வந்ததும் அவர்களின் குரல் ஓங்கியது. அக்பரை கொன்று ஆட்சியைக் கைப்பற்ற பைராம்கான் சதிசெய்வதாக அக்பர் நம்பவைக்கப்பட்டார்.



சாங் சோங் தாயேக்

அதன்விளைவாக 1560இல் அக்பர் பைராம்கானை பதவி நீக்கம்செய்து கைதுசெய்தார். மெக்காவுக்குச் செல்லும்படி ஆணையிடப்பட்ட பைராம்கான் அவ்வாறு செல்லும் வழியில் குஜராத்தில் வைத்து கொல்லப்பட்டார்.

வேறுவகை வரலாறு எங்காவது உள்ளதா என்று மூளை நமநமத்தது. சட்டென்று நினைவுக்கு வந்தது, அருண் நேரு. இந்திரா காந்தியின் மருமகன் அவர். ராஜீவ் காந்தியை அரசியலுக்குக் கொண்டுவந்தபோது அவருக்குத்துணையாக இருக்கும்படி அருண் நேருவை கோரினார் இந்திரா காந்தி. ஜென்ஸன் ஆண்ட் நிக்கல்சன் சாயநிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அருண்நேருவை அரசியலுக்குக் கொண்டுவந்தார். இந்திரா காந்தி 1984இல் கொல்லப்பட்டபோது இளைஞராகவும் அனுபவமற்றவராகவும் இருந்த ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராகவும் காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பேற்கவும் செயற்படவும் உறுதுணையாக அமைந்த ஒருவர் அருண்நேரு. நேரு குடும்பத்தின் ஆஸ்தான தொகுதியான ரே-பரேலியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.

ராஜீவ் ஆட்சிக்காலத்தில் அனைத்து வல்லமைகளும் கொண்டிருந்த அருண்நேரு அக்காலத்தில் ராஜீவ் அரசு மீது சுமத்தப்பட்ட பல ஊழல்வழக்குகளிலும் குற்றவாளி என்று சுட்டிக்காட்டப்பட்டார். முக்கியமாக செக்கோஸ்லாவாகிய கைத்துப்பாக்கி ஊழலில் அவரே முதற்குற்றவாளி என்று சொல்லப்பட்டது. பின்னர் அவர் ராஜீவ்காந்தியிடம் கருத்துவேறுபாடு கொண்டார். ராஜீவின் ஆலோசகர்களும் அடிப்பொடிகளும் மாறினார்கள். அருண்நேரு வெளியேற்றப்பட்டார். ஆனால் அருண்நேரு அழித்தொழிக்கப்படவில்லை, மாறாக எதிர்க்கட்சியில் சென்று சேர்ந்தார். ஜனதாதளத்தின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வென்று அமைச்சராகவும் பணியாற்றினார். அரசியல் கட்டுரையாளராக தொடர்ந்து செயற்பட்ட அருண்நேரு 2013 ஜூலையில் மரணமடைந்தார்.

அரசதிகாரம் என்பது எப்போதும் கடைசியில் ஒரு சிறு குழுவினராலேயே நேரடியாகக் கையாளப்படுகிறது. மன்னராட்சியாக இருந்தாலும் சர்வாதிகார ஆட்சியாக இருந்தாலும் ஜனநாயகமாக இருந்தாலும் உடனடி முடிவுகளை எடுப்பதும் செயற்படுத்துவதும் அவர்களே. அந்தச் சிறுகுழுவுக்குள் கடுமையான அதிகாரப்போட்டி ஒன்று நடந்துகொண்டிருப்பதைத் தவிர்க்கமுடியாது. அது அந்த மனிதர்களின் உலகப்பார்வை சார்ந்த மோதலாக இருக்கலாம், அகங்காரப்போட்டியாக இருக்கலாம், அவற்றைவிட முக்கியமாக அம்மனிதர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரவிசைகளின் மோதலாக இருக்கலாம், உள்மோதலே அந்தக்குழு செயற்படும் வழிமுறை.

அந்த உள்மோதலை ஒற்றுமையின்மை என்று எளிமையாகப் புரிந்துகொள்ளமுடியாது. உண்மையில் அதுவும் ஒருவகை ஜனநாயகமே. உதாரணமாக, ராஜீவின் அதிகார உள்வட்டத்துக்குள் அருண்நேரு தாராளவாத பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு முழு ஆதரவளிப்பவராக இருந்தபோது வி.பி.சிங் அரசதிகாரத்தின் கட்டுப்பாட்டை விரும்பக்கூடியவராக இருந்தார். இவ்வாறு பலவகையான கருத்துநிலைகளைக் கொண்டவர்கள், தேசத்தின் பலவகையான அதிகாரசக்திகளின் பின்புலம் கொண்டவர்கள் ஒருவரோடொருவர் முரண்பட்டு ஒரு பொதுமுடிவை அடையும்போதுதான் அது உண்மையான அதிகாரச் சமநிலையை உருவாக்குகிறது. ஜனநாயகம் என்பதே பல்வேறு அதிகாரங்கள் நடுவே சரியான சமநிலைப்புள்ளியைக் கண்டுகொள்வதில்தான் உள்ளது.

எந்த ஒரு அதிகார அமைப்பிலும் அந்த உள்வட்ட மோதல் இருந்துகொண்டேதான் இருக்கும். உதாரணமாக, ராஜராஜசோழனின் அதிகார உள்வட்டத்தில் மறவர், வேளாளர் முரண்பாடு மிக வலுவாக இருந்திருக்கிறது. முகலாய உள்வட்டத்தில் ஷியா- சுன்னி போராட்டமும், ஆப்கானிய- பாரசீக வம்சாவளியினரின் உள்முரணும் வலுவாக இருந்துள்ளது. மன்னராட்சி என்பது ஆசாரங்களுக்குக் கட்டுப்பட்டது. ஆசாரநம்பிக்கைகளே மன்னர்களை அந்தப் பீடத்தில் அமரச்செய்கின்றன. ஒவ்வொருவரையும் அவரவருக்கான இடங்களில் நிலைநிறுத்துகின்றன. ஆகவே ஆசாரங்கள் அனுமதித்த ஒரு சுதந்திரம் உள்வட்ட அதிகாரசக்திகளுக்கு உண்டு. அதை மன்னர்கள் பறிக்க முடியாது. ஆசாரமீறல் நிகழ்ந்தால் மக்களின் எதிர்ப்பு உருவாகநேரிடும். ராஜராஜசோழனின் அதிகாரம் என்பது அவருக்கு கட்டுப்பட்ட குறுநிலமன்னர்களின் கூட்டு அங்கீகாரம் வழியாக அவருக்குக் கிடைப்பது. அந்த மன்னர்கள் அவர்களின் குல ஆசாரங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

சர்வாதிகார ஆட்சிகளுக்கு மக்கள் ஒரு பொருட்டே அல்ல. வலிமையான ஆயுதங்கள் மூலம், சுயமான வளங்கள் மூலம் உலகநாடுகளின் எதிர்ப்பை அலட்சியப்படுத்த முடிந்தால் எதைப்பற்றியும் கவலைப்படவேண்டியதில்லை. ஆகவே அங்குள்ள உள்வட்ட அதிகார மோதல் எப்போதுமே அழித்தொழிப்பில்தான் முடிகிறது. ரஷ்யா, சீனா, கம்போடியா, கொரியா போன்ற கம்யூனிஸ அரசுகள் ஹிட்லர் ,முசோலினி போன்றவர்களின் நாசிச, பாசிச அரசுகள் செயற்பட்ட விதம் அதுதான். வடகொரியாவில் நடந்துகொண்டிருப்பதும் அதுவே. வென்ற தரப்பு தோற்ற தரப்பை முழுமையாகவே இல்லாமலாக்குகிறது. அவர்களை துரோகிகள் என்று அடையாளப்படுத்துகிறது. சர்வாதிகாரத்தின் இயங்குமுறையை இப்படி வரையறுக்கலாம். அது துரோகிகளையும் தியாகிகளையும் உருவாக்கிக் கொண்டே இருக்கும். தியாகிகள் துரோகிகளாக ஆவது அதன் ஒரு பகுதிதான். நாளைய இன்றைய வடகொரிய அதிபர் அடுத்து வருபவரால் துரோகியாக அறிவிக்கப்பட்டால், தூக்கிலிடப்பட்டால் ஆச்சரியம் கொள்ள ஏதுமில்லை.

இந்தியாவில் ஜனநாயகம் இருந்ததனால் அருண்நேரு கடைசிவரை ராஜீவ்காந்தியின் வலுவான எதிர்த்தரப்பாக நீடித்து அரசியலில் செயற்பட்டார். தாராளவாதப் பொருளியல் சீர்திருத்தங்களுக்காக தொடர்ச்சியாக

பேசிக்கொண்டிருந்தார். பைராம் கானை அகற்ற அக்ப ருக்கு ஒரு நுட்பமான நாடகம் தேவைப்பட்டது. ராஜராஜ சோழனும் அவ்வாறு பல நுட்பமான நாடகங்கள் வழியா கவே செயற்பட்டிருப்பார். ஆனால் தென்கொரியாவில் சாங் சோங் தாயேக்கை மௌனமாக கிள்ளி அப்பால் போட்டிருக்கிறார்கள். இதுதான் அரசுகள் நடுவே உள்ள வேறுபாடு.

ஜனநாயகம் என்பது முரண்பாடுகள் வழியாக மட்டுமே செயற்படக்கூடிய ஓர் அரசமைப்பு என்பதை சிந்திப்பவர்க ளில்கூட பலர் புரிந்துகொள்வதில்லை. ஜனநாயகம் என் பது மக்களிடம் உருவாகி வந்திருக்கும் அதிகாரச் சம நிலையை அரசாங்கத்திலும் உருவாக்கிக் கொள்வதற்கான ஓர் அமைப்பு. மக்களிடம் இருக்கும் அத்தனை அதிகார மோதல்களும், அத்தனை முரண்பாடுகளும் அரசாங்கத் தில் பிரதிபலித்தாகவேண்டும். சமூகத்தில் உருவாகிவரும் அதிகாரச் சமநிலை அரசில் பிரதிபலிக்கவேண்டும். காற் றுத்திசையைக் காட்டும் சேவல்பொம்மை போன்றது ஜன நாயக அரசு. காற்றுக்கேற்ப அது மாறிக்கொண்டேதான் இருக்கும். காற்று நிலையற்றது என்பதனால் அதுவும் நிலையற்றதாகவே இருக்கமுடியும். எந்த அளவுக்கு கச்சி தமாக நிலையற்றிருக்கிறதோ அந்த அளவுக்கு அது நல்ல காற்றுமானி, நல்ல ஜனநாயக அரசு.

ஆகவே ஜனநாயகம் இருக்குமிடத்தில் முரண்பாடும் மோதலும் எப்போதும் வெளியே தெரியும். டிசம்பரில் திடீ ரென்று சாங் சோங் தாயேக் அகற்றப்படும்வரை அது எவருக்கும் தெரிந்திருக்காது. ஜனநாயக அரசு இருந்திருந் தால் 2011 முதலே அவருக்கும் மருமகனுக்குமான மோதல்கள் செய்தியில் அடிபட்டுக்கொண்டே இருந்தி ருக்கும். ஜனநாயகத்தைப் புரிந்துகொள்ளாத ஒருவர் அந் தச் சர்வாதிகாரத்தை அமைதி என்றும் உறுதி என்றும் விளங்கிக்கொள்வார். ஜனநாயகத்தை கூச்சல் என்றும் நினைப்பார். அத்தனை தடுமாற்றங்களுடனும் நிலையின் மையுடனும் ஜனநாயகம் சரியான பாதையில் செல்கிறது. அத்தனை உறுதியுடன் சர்வாதிகாரம் மக்களுக்கெதிரான பாதையில் செல்கிறது என்பதே அதற்கான பதிலாகும். ■

---

*(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அது இலங்கையில் அரசு மற்றும் அரசியல் அத்திவாரத்தையே ஆட் டிப்பார்க்கும் விபரீத விளையாட்டாக மாறிவிடும் ஆபத்தே உள்ளது. நேற்றுவரை விடுதலைப் புலிகள் இயக்கத்தை வேரறுத்ததை உலகமே பாராட்டியதைக் கண்டு வெற் றிப்பெருமிதம் கொண்ட அந்த வீரர் கள் தங்களையோ தங்களை அன்று வழிநடத்திய தளபதிகளையோ குற் றவாளிக் கூண்டில் நிறு த்திப் பார்ப் பதை அல்லது அதற்காக தண்டனை பெறுவதை ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குறியே. அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த இரண்டு இலட் சம் வீரர்களின் குடும்பத்தவர்களும் வாளாவிருப்பார் களா? இது சிந்தித் துப் பார்க்க வேண்டிய விடயம்.

இதனால் தோன்றும் அரசியல் மற் றும் தேர்தல் கால அழுத்தங்கள் அதற்கு அப்பால் சென்று தோன்ற வாய்ப்புள்ள 'அரசு அமைப்பு' ஒட் டிய அடிப்படை மாற்றங்கள் ஆகி யவை இலங்கை என்றல்ல, தெற்கா சியா மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்கே அதிர்ச்சி வைத் தியம் கொடுக்கவல்லது. எந்த உல களாவிய பாதுகாப்புக் காரணங்க ளுக்காக விடுதலைப்புலிகள்இயக்கம் அழிக்கப்படவேண்டுமென்று சர்வ தேச சமூகம் முனைப்புக் காட்டியதோ அதே காரணங்களினால் யாராலும் அசைக்க முடியாத நிலைமை தோன் றலாம். இதுவே 'பிள்ளையார் பிடிக் கப்போய்' கதையாக மாறிவிடும் ஆபத்து உள்ளது.

இராணுவ தாக்குதல் ஆகட்டும் அல்லது அரசியல் முனைப்புகள் ஆகட்டும் ஆப்கானிஸ்தான், ஈராக், எகிப்து, லிபியா போன்ற நாடுகளின் விடயத்தில் எப்படி சர்வதேச சமூகம் சீ...சீ... இந்தப் பழம் புளிக்கும் என்று கையை உதறிக்கொண்டு எதுவுமே நடக்காததுபோல் வெளியேறுகின் றதோ அதுபோன்ற நிலைமைகூட இலங்கையில் தோன்றினால் அதிர்ச் சியடையத் தேவையில்லை. அவ் வாறு ஒரு சூழ்நிலை தோன்றினால் அன்று தமிழ்ச்சமூகமும் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பும் என்ன கூறப்போ கின்றன? அன்று இதே சர்வதேச சமூ கம் தமிழர்களுக்காகக் கவலைப் படுமா? அல்லது இலங்கைக்காக கவலைப்படுமா?அத்தகைய சூழ்நி லையைத் தான் புலம்பெயர்ந்த தமி ழர்கள் விரும்புகிறார்களா- அல்லது அவர்களில் சிலராவது அதனை எதிர் பார்க்கிறார்களா?

இதனால் எல்லாம் தமிழர்களின் உரிமைகளையும் அபிலாசைகளை யும் இலங்கை அரசு கண்டுகொள்ளா மல் விட்டுவிட வேண்டும் என்ப தல்ல பொருள். மாறிவரும் உள் நாட்டுச்சூழலில் தமிழர்கள் நிலைமை அறிந்து அரசியல் செய்ய வேண்டும் என்பதே எதிர்ப்பார்ப்பு. எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைப் பேர வைக் கூட்டத்திற்கு முன்னர் ஜனாதி பதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஜெனீவா சென்று அரசின் நிலைப் பாட்டை விளக்கிக் கூறுவார் என்று அகாசி தெரிவித்திருக்கிறார். வீரதுங் கவின் கூற்றில் உள்ள நியாயங்களை யும் எதிர்கால நிலைமைகளையும் கருத்தில் கொண்டு சர்வதேச சமூகம் செயலாற்றுமா என்பதைப் பொறுத்தி ருந்தே பார்க்கவேண்டும். இடைப் பட்ட காலத்தில் அரசிற்கு அழுத்தம் கொடுக்கிறோம் என்ற பெயரில் கூட் டமைப்பு ஆளுநர் மற்றும் ஆளு மைப் பிரச்சினைகளில் அதிரடி செய் தால் அதன் விளைவுகள் நாட்டிற்கு மட்டுமல்ல முக்கியமாக தமிழ் மக்க ளுக்குக் கூட எதிர்பார்த்திராத விளை வுகளையே ஏற்படுத்தும். அப்போது உள்ளதும் போச்சு என்று மீண்டும் புலம்பத் தொடங்குவதில் அர்த்தம் இல்லை. காரணம் அன்று அதற்கு உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச சமூகத்திலும் ஆதரவு இருக்காது. ■

# நேபாளத் தேர்தலில் மாவோயிஸ்டுகளின் வீழ்ச்சி

புரட்சி அரசியலை முன்வைப்பவர்கள் இன்றைய ஜனநாயக முறைக்கு திரும்பும்போது அதற்குரிய விதிகளைப் புறக்கணித்துவிடலாகாது என்பது நேபாளம் கற்றுத்தரும் ஒரு பாடம். இதன் பொருள் தேர்தல் அரசியலின் ஊழல்களுக் கும் போலித்தனங்களுக்கும் தகவமைத்து போவது என்பதல்ல. அப்படியாகாமலேயே சாதாரண மக்களின் பிரச்சினைகளிலும் ஆளுகையிலும் கருத்தூன்றி செயற்பட்டு ஒரு வித்தியாசத்தை அவர்கள் நிலைநாட்ட வேண்டும்

நேபாளத்திற்கு அரசியல் சட்டம் ஒன்றை இயற்றுவதற்கான இரண்டாம் அவைக்கான (Constituent Assembly II) தேர்தலில் மாவோயிஸ்டுகள் படுதோல்வி அடைந்துள்ளன. ஐந்தாண்டுகளுக்கு முன் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட அவர்கள் அரசியல் சட்ட அவைக்கான முதல் தேர்தலில் (2008) முதலிடத்தைக் கைப்பற்றி வெற்றியடைந்தது நினைவிருக்கும். மாறியுள்ள உலகச் சூழலைக் கணக்கில் கொண்டு அவர்கள் தங்கள் அணுகல் முறையை மாற்றிக்கொண்டதை உலகம் வரவேற்றது. ஊழலும், எதேச்சாதிகாரமும் நிரம்பிய பன்னூறாண்டு கால முடியாட்சியை வீழ்த்திய சாதனைக்குரியவர்கள் என்கிற வகையில் மக்கள் நம்பிக்கையோடு அவர்களைத் தேர்வு செய்தனர். இன்று மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, பல தொகுதிகளில் வைப்புத் தொகைகளையே இழந்துள்ளனர். முக்கிய தலைவர்கள் பிரசண்டா, பாபுராம் பட்டாராய் இருவரும் தாம் போட்டியிட்ட இரு தொகுதிகளில் ஒன்றில் தோற்றுள்ளனர். பிரசண்டாவின் மகள், பட்டாராயின் மனைவி ஆகியோரும் தோல்வியுற்றுள்ளனர்.

இந்தத் தோல்வியை நாம் ஆய்வு செய்வதற்கு முன் நேபாளத் தேர்தல் முறையை விளங்கிக் கொள்ள வேண்டும். அவையின் மொத்த உறுப்பினர்கள் 601. இவர்களில் 240 பேர் (40%) நேரடியாகத் தொகுதிகளில் போட்டியிட்டு, அதிக வாக்குப் பெற்றவர்கள் (First Past The Post) தேர்வு செய்யப்படுவர். 355 உறுப்பினர்கள் (56%) கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப அந்தந்தக்கட்சிகளால் தேர்வு செய்யப்படுவர் (Proportional Representation). மீதமுள்ள 26 பேர் (4%) நியமன உறுப்பினர்கள் (Reserved for Distinguished Persons).

**2013 தேர்தல் முடிவுகள்:**

| கட்சி | நேரடித் தேர்வு | விகிதாசாரத்தேர்வு | மொத்தம் |
|---|---|---|---|
| நேபாள காங். (N-P) | 105 (29.8%) | 91 (25.55%) | 196 |
| நேபாள கம்யூ. (UML) | 91 (27.55%) | 84 (26.66%) | 175 |
| மாவோயிஸ்ட் (UCPN-M) | 26 (17.79%) | 54 (15.21%) | 80 |
| ராஷ்ட்ரீய பிரஜாதந்திரி-N (RPP-N) | 0 (2.79%) | 24 (6.66%) | 24 |
| மாதேசி ஜனாதிகார்-L (MJF-L) | 4 (3.13%) | 10 (2.91%) | 14 |
| ராஷ்ட்ரீய பிரஜாதந்திரி (RPP) | 3 (2.63) | 10 (2.75%) | 13 |
| மாதேசி ஜனாதிகார் (MJF) | 2 (2.28%) | 8 (2.26%) | 10 |
| தராய் மாதேஷ்-L (TMLP) | 4 (1.9%) | 7 (1.91%) | 11 |
| பிற | 5 | 47 | 52 |



அ.மார்க்ஸ்

## பிராந்திய அரசியல்



பிரசண்டா

**குறிப்பு :** நேபாள கம்யூனிஸ்ட் என்பது தேர்தல் அரசியலை ஏற்றுக் கொண்ட ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (UML) கட்சி. மாதவ் குமார் நேபால், ஜாலாநாத் கானல் ஆகியோர் இதன் முக்கிய தலைவர்கள். மாவோயிஸ்ட் கட்சி என்பது நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாவோயிஸ்ட் எனப்படும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்த அமைப்பு. புஷ்ப கமல் தகல் (பிரசண்டா). பாபு ராம் பட்டாராய் முதலானோர் இதன் முக்கிய தலைவர்கள். மேலும் விவரங்களுக்குப் பார்க்க:

(அ.மார்க்ஸ், நேபாளம்: வரலாறு, மக்கள், மாவோயிஸ்டுகள் பயணி வெளியீடு, சென்னை, 2008)

2008 தேர்தலில் 220 (120+100) இடங்களை வென்ற மாவோயிஸ்டுகள் இம்முறை வெறும் 80 இடங்களைத்தான் பெற்றுள்ளனர். அதே நேரத்தில் சென்றமுறை 110 (37+73) இடங்களை மட்டுமே வெல்ல முடிந்த நேபாளக் காங்கிரஸ் இம்முறை 175 இடங்களைப் பெற்றுள்ளது. சென்ற முறை 103 (33+70) இடங்களை வென்ற நேபாள கம்யூனிஸ்ட் கட்சியோ இம்முறை 175 இடங்களைப் பெற்றுள்ளது. சென்ற முறை மாதேசி கட்சிகள் இரண்டும் 72 இடங்களைப் பெற்றிருந்தன. இம்முறை அட்டவணையில் இடம்பெற்றுள்ள மூன்று மாதேசிக் கட்சிகளும் சேர்ந்து 35 இடங்களைத்தான் பெற முடிந்துள்ளது.

ஆக இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவாக மாவோயிஸ்ட் மற்றும் மாதேசிக் கட்சிகளுக்கு எதிராகவும் நேபாளக் காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஆதரவாகவும் அமைந்துள்ளது என்பதை யாரும் மறக்க இயலாது. இன்னொரு கவலைக்குரிய அம்சம், சென்றமுறை வெறும் 4 இடங்களை மட்டுமே பெற முடிந்த ராஷ்ட்ரீய பிரஜா தந்திரக் கட்சி (N) இம்முறை 24 இடங்களைப் பெற்றுள்ளது. இது இந்து மத அடையாளத்துடன் கூடிய முடியாட்சியை வேண்டுகிற ஒரு வலதுசாரிக் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் மோசடி நடந்துள்ளது எனவும் இந்த இரண்டாம் அரசியல் சட்ட அவையில் தாங்கள் பங்கு பெற முடியாது எனவும் மாவோயிஸ்டுகள் முரண்டு பிடித்துப் பார்த்தனர். விகிதாசாரப் பிரதிநிதித்துவ இடங்களுக்கு தங்கள் கட்சியின் சார்பாக யாரையும் நியமிக்க இயலாது எனவும் கூறினர். தங்களுக்கு எதிரான இம்மோசடிக்குக் காரணமாக அவர்கள் நேபாள இராணுவம், குடியரசுத் தலைவர் ராம் பரண் யாதவ் உள்ளிட்ட தேர்தல் நடத்துவதற்கான தற்காலிக அரசு, அந்நிய சக்திகள் குறிப்பாக இந்திய அரசு ஆகியவற்றைக் குறிப்பிட்டனர். இவை மூன்றுமே எப்படியும் மாவோயிஸ்டுகள் ஆட்சியில் அமர்வதைச் சகித்துக்

கொள்ளாதவை என்பது ஊரறிந்த இரகசியம். வாக்குப் பெட்டிகள் பல மணி நேரம் கட்சிப் பிரதிநிதிகளின் கண்காணிப்பின்றி இராணுவத்தின் வசம் இருந்ததையும், நேரடித் தேர்தல் முடிவுகளுக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முடிவுகளுக்கும் வித்தியாசம் உள்ளதையும் சுட்டிக்காட்டினர்.

எனினும் மாவோயிஸ்டுகளின் இக் குற்றச்சாட்டிற்குப் பெரிய ஆதரவில்லை. தேர்தல் முடிந்த அன்று (நவம்பர் 19) தேர்தல் நியாயமாக நடந்தது எனப் பிரசண்டாவே கூறியுள்ளார். மாவோயிஸ்டுகள் நேரடித் தேர்தலில் குறைவாகவும், கட்சிக்கு அளிக்கப்பட்ட விகிதாசார வாக்குகளினூடாக அதிக இடங்களையும் பெற்றுள்ளதற்கு தனிப்பட்ட முறையில் மாவோயிஸ்ட் கட்சி வேட்பாளர்களின் மீது மக்கள் கொண்ட வெறுப்பும் ஒரு காரணமாக இருக்கலாம். கடந்த ஐந்தாண்டு அனுபவத்தில் மாவோயிஸ்ட் தலைவர்களின் வாழ்நிலையில் ஏற்பட்ட மாற்றம், தொகுதி முன்னேற்றத்தில் அவர்களின் கவனமின்மை, மக்களை அணுகுவதில் அவர்கள் காட்டிய முரட்டுத்தனம் ஆகியன மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தி இருந்தமையைப் பலரும் குறிப்பிடுகின்றனர், ஜிம்மி கார்டரின் தலைமையில் இயங்கிய பன்னாட்டுத் தேர்தல் பார்வையாளர் குழுமமும் தேர்தல் முறைகேடுகள் குறித்த மாவோயிஸ்டுகளின் கூற்றை மறுத்துள்ளது. ஆக, தேர்தல் முடிவுகளை அமைதியாக ஏற்றுக் கொள்வதற்குப் பன்னாட்டழுத்தமும் செலுத்தப்படுகிறது. வாக்கு எண்ணிக்கையில் கலந்துகொள்ள மாட்டோம் என்றெல்லாம் மாவோயிஸ்டுகள் சொன்ன போதும் அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

மக்களின் தீர்ப்பை மதித்து ஏற்றுக் கொள்வதுதான் எதிர்கால அரசியலுக்கு நல்லது என்பதே நடுநிலையாளர்களின் கருத்தாகவும் இருந்தது. தேர்தல் நடக்காது என்றும், அப்படியே நடத்தப்பட்டாலும் மக்கள் பங்கேற்பு அதிகம் இருக்காது என வும் கூறப்பட்ட ஆருடங்களுக்கு எதிராக, ஒரு சில வன்முறைச் சம்பவங்கள் தவிர்த்து, தேர்தல் அமைதியாகவே நடந்தது மட்டுமன்றி, 78 சதத்திற்கும் மேலாக வாக்குப் பதிவு நடந்துள்ளது. குறிப்பாக முதல் தலைமுறை வாக்காளர்கள் அதிக அளவில் உற்சாகமாகப் பங்கேற்றுள்ளனர்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது கடந்த ஐந்தாண்டு காலம் அரசியல் சட்டத்தை உருவாக்காமல் வெறும் பதவிச் சண்டையில் கழிந்ததாகவே மக்கள் கருதுகின்றனர் என்பதும், அப்படியானதற்கு அனைத்துக்கட்சிகளுக்கும் பங்கிருந்த போதும், தோல்விக்கான முழுப் பொறுப்பையும், முந்திய தேர்தலில் தாங்கள் யாரை நம்பி முதன்மை வாக்களித்தார்களோ அவர்கள் மீதே ஏற்றிப் பார்க்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. அப்படியான ஒரு கருத்தைச் சர்வதேச சமூகமும், குறிப்பாக இந்தியாவும், குடியரசுத் தலைவர் உள்ளிட்ட அதிகார வர்க்கமும் மாவோயிஸ்டுகளின் பரம எதிரியான இராணுவமும் பிரசாரம் செய்து, அதில் வெற்றியும் அடைந்துள்ளது.

மாவோயிஸ்டுகளைப் பொறுத்த மட்டில், 2008இல், அரசியல் சட்ட அவையில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்கிற வகையில், அறுதிப் பெரும்பான்மை இல்லாமலேயே ஆட்சியில் அமர்ந்தனர். அரசியல் சட்டத்தை உருவாக்குவது தவிர மாவோயிஸ்டுகளுக்கென வேறு சில அவசரமான, முக்கிய பணிகளும் இருந்தன. தமது புரட்சிகர இராணுவம் வசம் இருந்த ஆயுதங்களை அவர்கள் ஐ.நா.அவைப் பார்வையாளர்களின் பொறுப்பில் ஒப்படைத்திருந்தனர். மாவோயிஸ்டுகளின் இராணுவத்தை நேபாள இராணுவத்துடன் இணைப்பது என்பது ஒப்பந்தத்தில் இருந்தபோதும், நேபாள இராணுவம் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்பதோடு, முட்டுக்கட்டையும் போட்டு வந்தது. குடியரசுத் தலைவர் தேர்தலிலும் மாவோயிஸ்டுகள் விரும்பிய தலைமையைக் கொண்டு வர இயலவில்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட ராம் பரண் யாதவ் மாவோயிஸ்டுகளுக்கு எதிரானவர்.

## இந்தியத் தலையீடு

அடுத்த இரு பெருங்கட்சிகளான நேபாள காங்கிரஸும், நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சியும் தேர்தல் அரசியலில் நீண்ட நாள் அனுபவம் வாய்ந்தவை. கருத்து மாறுபாடுகளை மீறி மாவோயிஸ்டுகளை ஓரங்கட்டுவதில் இவ்விரு கட்சிகளும் ஒன்றுபட்டன. சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாக விளங்கிய இந்தியாவுக்கு நேபாளத்தைத் தன் முழுக்கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்வது அவசியமாக உள்ளது. அருகாமை நாடுகள் அனைத்துடனும் பகைமையுறவையே கொண்டுள்ள இந்தியா, போர் நிலை முக்கியத்துவமுள்ள நேபாளத்தை முழுமையாகத் தன் கட்டுக்குள் வைப்பதற்கு மாவோயிஸ்டுகள் தடையாக இருப்பதைச் சரியாகவே கணித்தது.

ஏப்ரல் 2010இல் பிரதமர் மன்மோகன் சிங்கின் சிறப்புத் தூதுவராக நேபாளத்திற்கு வந்த இந்திய அயலுறவுச் செயலர் ஷியாம் சரண்


> கடந்த ஐந்து ஆண்டு கால அனுபவத்தில் மாவோயிஸ்ட் தலைவர்களின் வாழ்நிலையில் ஏற்பட்ட மாற்றம், தொகுதி முன்னேற்றத்தில் அவர்களின் கவனமின்மை, மக்களை அணுகுவதில் அவர்கள் காட்டிய முரட்டுத்தனம் ஆகியவை மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன

வெளிப்படையாக மாவோயிஸ்டுகளை முழுமையாக ஜனநாயகப் பாதைக்குத் திரும்புவதுதான் நல்லது என எச்சரித்தார். நேபாள மாவோயிஸ்டுகளும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சூழல்களைக் கணக்கில் கொண்டு இறங்கி வந்தனர். இந்த ஆண்டு பெப்ரவரியில் ஹெடாவ்டா நகரில் நடந்த கட்சியின் முழு அளவிலான மகாநாட்டுக்கும் பின்னர் நடந்த கூட்டத்தில் தங்கள் பாதையில் மூன்று அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக பிரசண்டா அறிவித்தார். அவை :

1. முழுமையான பல கட்சி ஜனநாயக ஆளுகைக்குத் திரும்புதல். 2. பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்தல். இந்த வளர்ச்சியில் இந்தியாவை முக்கிய பங்காளியாக ஏற்பது, இந்திய முதலீடுகளுக்கு வாய்ப்பளிப்பது, இந்த வளர்ச்சியின் மூலமாக உருவாகும் அரசியல் நிலைத்தன்மை அருகிலுள்ள நாடுகளின் (அதாவது இந்தியாவின்) பாதுகாப்பு தொடர்பான கவலைகளையும் போக்கும். 3) குறுகிய தேசியத்தைக் கைவிட்டுவிட்டு இனி முற்போக்கு தேசியத்தை முன்னெடுத்தல்.

நேபாள அரசியலில் இந்தக் குறுகிய தேசியம் என்பது இந்திய மேலாதிக்கம் பற்றிய கவலையைக் குறிக்கும். இந்திய மேலாண்மை குறித்த அச்சம் நேபாளிகளுக்கு எப்போதுமே உண்டு. இந்தியா பெரிய அளவில் நேபாளத்தில் முதலீடுகளைச் செய்துள்ளதோடு, அதன் அபரிமிதமான கனிம வளங்கள் மீதும் இந்தியாவிற்கு எப்போதுமே ஒரு கண்ணுண்டு. தவிரவும் திபெத்திலிருந்து வரும் அகதிகளை இந்தியா நேபாளத்திற்குத் திருப்பி விடுவதை ஒரு தந்திரமாக மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் சீனாவின் கோபத்திலிருந்து தான் தப்பி, சீனாவுக்கும் நேபாளத்திற்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துவது நோக்கம். இது தவிர எல்லையோரத்தில் இந்திய ஆக்கிரமிப்பு நிகழ்வதாகவும் நேபாளத்திற்கு ஐயங்கள் உண்டு.

மொத்தத்தில் சிக்கிமை வளைத்துப் போட்டது போல நேபாளத்தையும் தன்னுடன் இந்தியா இணைத்துக் கொண்டுவிடுமோ என்கிற (sikkimisation) அச்சம் நேபாளத்திற்கு உண்டு. இந்தியாவும் ஏதோ தன்னுடைய மாநிலங்களில் ஒன்றைப் போலவே நேபாள அரசியலில் தலையிட்டு வருகிறது. நேபாளத்தில் உள்ள இந்தியத் தூதர் நேபாள அயலுறவு அமைச்சகத்தின் அனுமதி இல்லாமலேயே எப்போது வேண்டுமானாலும் நேபாளப் பிரதமர் உட்பட யாருடைய அலுவலகத்திற்கும் சென்றுவரக் கூடிய நிலை உள்ளது.



ஜனாதிபதி ராம் பரண் யாதவ்

இந்தப் பின்னணியில் இந்திய மேலாண்மை குறித்து அதிகம் கவனப்படுத்தி வந்தவர்கள் மாவோயிஸ்டுகள்தான். இந்திய மேலாண்மைக்கு எதிராக உருவாகியுள்ள இந்த நேபாள தேசிய உணர்வைத்தான் இப்போது குறுகிய தேசியம் என அவர்களே அழைத்துக் கொள்ள வேண்டிய நிலை நேபாளிகளுக்கு ஏற்பட்டுள்ளது. சென்ற மார்ச்சில் இந்தியா வந்த நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் மாதவ் குமார் நேபால் இந்து இதழுக்கு அளித்த பேட்டியில் தம் கட்சி உட்பட நேபாளிக் கட்சிகள் பலவற்றிலும் இந்திய வெறுப்பு எனப்படும் குறுகிய தேசியம் செயற்படுவதாகக் கூறினார்.

மாவோயிஸ்டுகள் வேறு பல அம்சங்களிலும் விட்டுக் கொடுக்கவே செய்தனர். 2006 புரட்சியைக் கொடுங்கரம் கொண்டு ஒடுக்க முனைந்தவரும் முடியாட்சிக்கு மிக நெருக்கமாக இருந்தவருமான லோக் மான்சிங் கார்கியை ஒரு உயர்ந்த அதிகாரமிக்க பதவியில் அமர்த்த ஒப்புதல் அளித்தது, தலைமை நீதிபதி கில் ராஜ் ரெக்மியை தேர்தலுக்கான தற்காலிக அரசுக்குத் தலைமை ஏற்க முன்மொழிந்தது ஆகியவற்றைச் சில எடுத்துக்காட்டுகளாகச் சொல்லலாம்.

## அரசியல் சட்டம் எழுதுவதில் என்ன பிரச்சினை?

எனினும் இந்தியா கடைசிவரை மாவோயிஸ்டுகளை நம்பாமைக்கு இன்னொரு காரணமும் உண்டு. இன்று படுதோல்வி அடைந்துள்ள மாவோயிஸ்டுகள், மாதேசிக் கட்சிகள் ஆகிய இருதரப்பினருமே வெஸ்ட்மினிஸ்டர் மாதிரி, அதாவது இந்தியாவில் உள்ளது மாதிரி ஜனநாயகத்திற்குப் பதிலாக அடையாள அடிப்படையிலான பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை (identity based federalism) முன் மொழிந்தனர். இதை நேபாளக் காங்கிரஸும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த்தன. இந்தியாவின் கருத்தும் அதுவே.

இந்த அடையாள அடிப்படையிலான ஜனநாயகக் கூட்டாட்சி என்பதென்ன? இந்தியாவைப் போலவே பல்வேறுபட்ட சாதிகள், இனங்கள், ஆதிக்குடிகள் அந்தச் சின்ன நாட்டிலும் உண்டு. பாகுன், சேத்ரி முதலான சாதிகள் இந்தியாவிலுள்ள பார்ப்பன, சத்திரிய சாதிகளைப்போல ஆதிக்க சாதியினர். காத்மண்டை மையமாகக் கொண்ட இவர்களின் அதிகாரமே நேபாளத்தில் கோலோச்சி வந்தது. சட்டமன்றங்களிலும் 37 சதம்வரை இவர்களே ஆக்கிரமித்திருந்தனர். ஆரம்பம் முதலாகவே தலித்துகள், உள்நாட்டு இனத்தினரான ஜன ஜாதிகள், இந்திய வம்சாவளியினரான மாதேசிகள், இவர்கள் ஒவ்வொரு பிரிவினரிலும் பெண்கள் முதலான அனைத்துப் பிரிவினருக்கும் ஆளுகையில் பங்கு வேண்டும் என்பதை மாவோயிஸ்டுகள் வற்புறுத்தி வந்தனர். நீண்ட விவாதங்களுக்குப் பின்

2008 தேர்தலில் இது நடைமுறைக்கும் கொண்டு வரப்பட்டது. போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும், இந்த ஒவ்வொரு பிரிவினருக்கும் உரிய வீதங்களில் வாய்ப்பளிக்க வேண்டும். அதிலும் ஒவ்வொரு பிரிவினரிலும் பாதி வேட்பாளர்கள் பெண்களாக இருக்க வேண்டும் என்கிற கருத்தொருமிப்பு ஏற்பட்டது.

இது குறிப்பிடத்தக்க நல்ல விளைவையும் தந்தது. 2008 அரசியல் சட்ட அவையில் பாகுன் மற்றும் சேத்ரி பிரிவினரின் பங்கு 4 சதமாகக் குறைந்தது. ஒரு சதப் பிரதிநிதித்துவம் கூட இதுவரை கிடைக்காதிருந்த தலித்துகளுக்கு முதன் முதலாக 8.17 சதம் கிடைத்தது.மொத்த உறுப்பினர்களில் 32.22 சதம் பெண்கள்; மாதேசிகள் 34.09 சதம்; ஜனஜாதிகள் 33.39 சதம் இருந்தனர்.



தேர்தல் முடிவுகளையடுத்து கொண்டாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

இவ்வாறு அனைத்துப் பிரிவினருக்கும் ஆளுகையில் உரிய பங்கை அளிப்பதற்கு அரசியல் சட்டத்திலேயே வழி வகுப்பதைத்தான் அடையாள அடிப்படையிலான ஜனநாயகக் கூட்டாட்சி என்பதாக மாவோயிஸ்டுகளும் மாதேசிகளும் முன்வைத்தனர். இதைக் கடுமையாக நேபாளக் காங்கிரஸும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்த்தன. இந்தியாவின் கருத்தும் இதுவாகவே இருந்தது.

## சட்டசபைக் கலைப்பும் பின் நடந்த அரசியலும்

இதில் ஒரு ஒப்புதல் ஏற்படாதது அரசியல் சட்ட உருவாக்கத்திற்குத் தடையாக இருந்தது. இரண்டாண்டுகளுக்குள் இந்தப் பணி முடியாததால் அவையின் காலக்கெடு இருமுறை நீடிக்கப்பட்டது. இறுதிவரை இது சாத்தியமில்லாமல் போகவே 2012 மே 27 அன்று முதலாம் அரசியல் சட்ட அவை அதன் நோக்கம் நிறைவேறாமலேயே கலைக்கப்பட்டது. மார்ச் 13, 2013 அன்று இரண்டாம் அரசியல் சட்ட அவைக்கான தேர்தலை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு, பின் அந்தத் திகதி மீண்டும் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டு, இறுதியில் நவம்பர் 19, 2013 என்பதாக முன் வைக்கப்பட்டது. தேர்தலை நடத்த, தலைமை நீதிபதி ரெக்மி தலைமையில் இடைக்காலத் தேர்தல் அரசு ஒன்று அமைப்பது எனவும் கருத்து உருவானது. ஒவ்வொரு முறையும் இப்படியான முடிவுகளுக்கு ஏற்ப இடைக்கால அரசியல் சட்டமும் திருத்தப்பட்டது.

இத்தகைய முக்கிய முடிவுகள் எடுக்க மாவோயிஸ்ட் கட்சி, நேபாளக் காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்ட், மாதேசி முன்னணி ஆகிய நான்கு கட்சிகளின் எட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்ட அரசியல் குழுவும் (HLPC) உருவாக்கப்பட்டது.

2013 செப்டெம்பர் 14 அன்று இந்த உயர்மட்ட அரசியல்குழு கூடியபோது அதில், தேர்தலை 2014 மார்ச் மாதத்திற்கு ஒத்திவைப்பது, இடைக்கால அரசுக்குத் தலைமை ஏற்கும் ரெக்மி தனது தலைமை நீதிபதிப் பொறுப்பிலிருந்து விலகுவது முதலான கோரிக்கைகளை மாவோயிஸ்டுகள் முன்வைத்தனர். ஒரு வட்ட மேசை மகாநாடு கூட்டிப் பொதுப் பிரச்சினைகளில் முடிவெடுப்பது, பெரும்பான்மை அடிப்படையிலான ஆளுகை என்பதாக இல்லாமல் கருத்தொருமிப்பு அடிப்படையிலான அரசியல் சட்ட அவைக்கான அரசு (consensus government) முதலியன மாவோயிஸ்டுகளின் பிற கோரிக்கைகளாக இருந்தன. தேர்தலை ஒத்திவைப்பது, தலைமை நீதிபதிப் பொறுப்பிலிருந்து ரெக்மி விலகுவது முதலான மாவோயிஸ்டுகளின் கோரிக்கைகளில் ஒரு கருத்தொருமிப்பு எட்டும் தறுவாயில் இந்திய அயலுறவுத் துறைச் செயலர் ஷ்யாம் சரணின் வருகை அறிவிக்கப்பட்டது. அன்று மாலை இந்தியத் தூதரகத்தில் விருந்தொன்றுக்கு அவர் அழைப்பு விட்டிருந்தார். விருந்தின்போது, தேர்தலை ஒத்தி வைக்கக்கூடாது என்பதே இந்தியாவின் கருத்து என அறிவிக்கப்பட்டது.

மீண்டும் செப்டெம்பர் 16 அன்று குடியரசுத் தலைவர் ராம் பரண் யாதவ் தலைமையில் உயர்மட்டக் குழு கூடியபோது இரண்டு நாட்கள் முந்திய கருத்தொருமிப்புகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. மாவோயிஸ்டுகளின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு, முன் தீர்மானித்தபடி நவம்பர் 19, 2013 அன்றே தேர்தலை நடத்துவது என்பதும் ஒரே நேரத்தில் ரெக்மி தலைமை நீதிபதியாகவும் இடைக்கால அரசின் தலைவராகவும் நீடிப்பது என்பதும் உறுதியானது.

**அரசியல்வாதிகள் அரசியல் சட்டத்தை உருவாக்காமல் வெறும் பதவிச்சண்டையில் காலத்தை கழித்ததாகவே மக்கள் கருதுகின்றனர் என்பதும் அப்படியானதற்கு அனைத்துக்கட்சிகளுக்கும் பங்கிருந்த போதிலும் தோல்விக்கான முழுப்பொறுப்பையும் முந்திய தேர்தலில் தாங்கள் யாரை நம்பி முதன்மை வாக்களித்தார்களோ அவர்களின் மீதே மக்கள் ஏற்றிப் பார்க்கின்றனர் என்பது தெளிவாகிறது**

### மாவோயிஸ்டுகள் விட்ட பிழைகள்

நடந்து முடிந்த தேர்தலின் மிகச்சுருக்கமான பின்னணி இதுவே. இந்தியா பிரதிநிதித்துவப்படுத்திய சர்வதேச அழுத்தம் மற்றும் உள்நாட்டு அரசியல் சக்திகள் ஆகியவற்றால் மாவோயிஸ்டுகள் ஓரங்கட்டப்பட்டு முறியடிக்கப்பட்ட வரலாறும் இதுவே. மாவோயிஸ்டுகளின் தோல்விக்கான காரணங்களை ஆய்வு செய்யும் பலரும் இப்போது இந்த வரலாற்றைப் புறக்கணித்துவிட்டு தோல்விக்கு முழுக்க முழுக்க மாவோயிஸ்டுகளே காரணம் என்பதாக முன்வைக்கின்றனர்.

மாவோயிஸ்டுகளின் பக்கம் தவறுகளே இல்லை என்பதல்ல. ஆனால், இந்தச் சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சதிகளைக் கணக்கில் கொள்ளாமல் பழி அனைத்தையும் மாவோயிஸ்டுகளின் பக்கம் திருப்பிவிடலாகாது என்பதுதான்.

மாவோயிஸ்டுகளும் மாதேசிகளும் இவ்வாறு 2008 தேர்தலைக் காட்டிலும் இப்போது பெரிய அளவில் தோல்வி அடைந்திருப்பதற்குக் காரணமாக சர்வதேச மற்றும் அவர்களுக்கு ஒத்துழைத்த உள்நாட்டுச் சக்திகள் கூறுவது, இவ்விரு கட்சிகளின் அடையாள அடிப்படையிலான ஜனநாயகக் கூட்டாட்சி என்பதை மக்கள் புறக்கணித்துவிட்டார்கள் என்பதுதான். இதை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது. இத்தகைய அணுகல் முறையின் பலனாக இதுகாறும் அதிகாரம் மறுக்கப்பட்ட தலித்துகள், பெண்கள் ஜனஜாதிகள் முதலான பல்வேறு பிரிவினருக்கும் சென்ற தேர்தலில் உரிய பிரதிநிதித்துவம் கிடைத்ததைக் கண்முன் கண்ட மக்கள் இதை ஏற்கவில்லை என்பதாக இந்தத் தேர்தல் முடிவின் அடிப்படையிலிருந்து மட்டும் சொல்லிவிட இயலாது. இந்தத் தேர்தல் முடிவுகளில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் பிரதிநிதித்துவம் எவ்வாறு அமைந்துள்ளது என்பது குறித்த விவரங்கள் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், கட்சிகளால் களமிறக்கப்பட்ட வேட்பாளர்கள் பட்டியலை வைத்துப் பார்க்கும்போதே முந்தைய தேர்தலைக் காட்டிலும் இப்போது பிரதிநிதித்துவம் குறைந்துள்ளது விளங்குகிறது. தவிரவும் ஒப்புக்குப் பெண்கள் முதலான பிரிவினருக்கு வாய்ப்பளித்தபோதும் உறுதியாகத் தோல்வியைத் தழுவும் தொகுதிகளிலேயே கட்சிகள் அவர்களை வேட்பாளர்களாக்கியுள்ளன.

அடையாள அடிப்படையிலான ஜனநாயகம் குறித்த கருத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு மாவோயிஸ்டுகளும் மாதேசிகளும் தவறிவிட்டனர் என்கிற கருத்தை இது குறித்து ஆய்வு செய்துள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர். தவிரவும் சென்ற அரசியல் சட்ட அவையில் இப்படிப் பல பிரிவினருக்கும் இடமிருந்த போதும், இந்த ஐந்தாண்டு கால அரசியல் குழப்பங்களின் விளைவாக உண்மையான அரசியல் அதிகாரம் இந்தச் சக்திகளுக்கு மாற்றீடு செய்யப்படவில்லை. மீண்டும் அரசியலதிகாரம் காத்மண்டுவை மையமாகக் கொண்ட மேட்டிமைச் சக்திகளிடமே குவிந்திருந்தன. விளைவாக அதிகாரப் பரவலின் பலன்களை மக்களால் ருசிக்க இயலவில்லை.

தவிரவும் இந்த ஐந்தாண்டு இடைவெளியில் மாவோயிஸ்ட் கட்சி மட்டுமன்றி, மாதேசிக் கட்சிகளும் பிளவுண்டன. மாவோயிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் மோகன் வைத்யா மற்றும் சி.பி கஜுரெல் முதலானோர் தலைமையில் பிரிந்து நேபாள கம்யூனிஸ்ட் கட்சி மாவோயிஸ்டுகள் (CPNM) என்கிற பெயரில் இயங்கிய அமைப்பு மாவோயிஸ்டுகளைப் பெரிய அளவில் பலவீனப்படுத்தியது. ஐ.நா. அமைப்பிடம் பதிந்த முன்னாள் மாவோயிஸ்டுகளின் புரட்சிகர இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 32,250. இதில் கிட்டத்தட்ட சரி பாதிப்பேர் இன்று மோகன் வைத்யா அமைப்பில் சேர்ந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பிளவே கூட வெளிநாட்டுச் சக்திகளால் முன்னெடுக்கப்பட்டது என்றொரு கருத்தும் உண்டு. எப்படியோ பொதுவுடைமைக்கட்சிகள் பிளவுறும்போது பிளவுண்ட கூறுகள் தமது வர்க்க எதிர்ப்பை எல்லாம் ஒத்தி வைத்துவிட்டு பரஸ்பர எதிர்ப்பை முதன்மைப்படுத்துவது வழக்கம். அதுதான் இங்கும் நடந்தது. மோகன் வைத்யா குழுவினர் சில தொகுதிகளில் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக நேபாளக் காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்ததாகவும் சொல்லப்படுகிறது.

பிரிந்து சென்ற மோகன் வைத்யா குழுவினர் தேர்தல் புறக்கணிப்பிற்கு அறைகூவல் விடுத்தனர். ஒரு பொதுக்கூட்டத்தில் பங்கேற்பவர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படும் என மறைமுகமாக கஜுரெல் எச்சரிக்கையும் விடுத்தார். எனினும் உற்சாகமான 78 சத வாக்களிப்பு என்பது அவர்களது கோரிக்கையையும் அரசியலையும் மக்கள் ஏற்கவில்லை என்

பதை நிறுவியது.

எனினும் மாவோயிஸ்டுகள் ஓரம் சத்தில் கோட்டைவிட்டுவிட்டார்கள் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆயுதப் போராட்டத் தையே நடைமுறையாகக் கொண்டி ருந்த அவர்களுக்கு இந்தப் புதிய அரசியலின் விதிகளுக்கும் இலக்க ணங்களுக்கும் தங்களைத் தகவமைத் துக் கொள்ள இயலவில்லை. இட்டுச் சென்றது.

புரட்சிகர அரசியலை முன்வைப்ப வர்கள் இன்றைய ஜனநாயக முறைக் குத் திரும்பும்போது இதற்குரிய விதி களைப் புறக்கணித்துவிடலாகாது என்பது நேபாளம் கற்றுத்தரும் ஒரு பாடம். இதன் பொருள் தேர்தல் அர சியலின் ஊழல்களுக்கும் போலித் தனங்களுக்கும் தகவமைந்து போவது என்பதல்ல. அப்படி ஆகா மலேயே சாதாரண மக்களின் பிரச்சி னைகளிலும் ஆளுகையிலும் கருத் தூன்றிச் செயற்பட்டு ஒரு வித்தியாச த்தை அவர்கள் நிலைநாட்ட வேண் டும்.

**நேபாளத்தைப் பொறுத்தவரை இந்தியா அதன் அர சியல் தந்திரத்தில் தற்காலிகமாக வெற்றிபெற்றி ருக்கலாம். ஆனால், இப்படியே நேபாளத்தை தனது மாநிலங்களில் ஒன்று போல் நடத்தி மேலாண்மை செய்வதை அது தொடர்ந்தால் இந்திய வெறுப்பு அங்கு அதிகமாகும். சிக்கிம் உதாரணம் அவர்களை ஏற்கனவே அச்சுறுத்திக்கொண்டுள்ளதை இந்தியா கவனத்தில் கொள்ள வேண்டும். நேபாளத்தை பகைத்துக்கொள்வது இந்தியாவுக்கு நல்லதே அல்ல**

பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்களி டம் அவர்களின் அணுகல் முறைகள் முரட்டுத்தனமாக இருந்ததைப் பல ரும் குறிப்பிடுகின்றனர். அகன்ற பெரிய கொள்கை மோதல்களுக்கு முதன்மை அளித்த இவர்கள் அதிகா ரத்தில் அமர்ந்தபோது ஆளுகைக்கு (governance) முக்கியத்துவம் அளி க்கவில்லை. அதேபோல வென்ற மாவோயிஸ்ட் வேட்பாளர்கள் தொகுதிப் பிரச்சினைகளிலும் நாட் டம் செலுத்தவில்லை. பெரும் செல் வாக்குப் படைத்த தலைவரும் 2008 தேர்தலில் பெரு வெற்றி பெற்றவரு மான பிரசண்டா காத்மாண்டு -10 தொகுதியில் இம்முறை இரண்டாவ தாகக் கூட வர இயலாமல் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுப் படு தோல்வி அடைந்ததற்கு இது ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இப் படி ஆளுகையில் உரிய கவனம் செலுத்தாததன் விளைவு முடியாட்சி யைத் தூக்கி எறிந்த பின்னும் கூட மேட்டிமைச் சக்திகளின் அதிகார மையத்தைத் தகர்க்க இயலாமைக்கும்

பிரசண்டா, ஹிசிலா யாமி (பாபு ராம் பட்டாராயின் மனைவி) ஆகி யோரது மேட்டிமைத்தனமான வாழ் க்கை முறையையும் மக்கள் ரசிக்க வில்லை. இங்கு மக்களின் ஒரு மனப் பாங்கை நாம் புரிந்துகொள்ள வேண் டும். தமிழில் ஒரு கதையுண்டு, ஒரு பிச்சைக்காரருக்கு ஒரு பெண் தினசரி பிச்சையிடுவாள். பக்கத்து வீட்டுப் பெண் பிச்சையிட மறுத்துவிடுவாள். அவர் ஒன்றும் சொல்லாமல் போய் விடுவார். ஒரு நாள் எப்போதும் பிச் சையிடும் பெண் இல்லை என்பாள். உடனே அந்தப் பிச்சைக்காரர் அவ ளைத் திட்டுவார். அந்தப் பெண், தின சரி பிச்சையிடாத பக்கத்து வீட்டுக் காரியைத் திட்டமாட்டாய், ஒரு நாள் போடவில்லை என்பதற்காக என் னைத் திட்டுகிறாயே என்பாள். அதற்கு அவர், என்னைக்கும் போடுற மகராசி இன்னைக்கும் போடல. தின சரி போடற கழுதை இன்னைக்கு ஏன் போடலை? என்று கேட்டதாகக் கதை. இந்தக் கதையின் ஆபத்தான கூறுகள் ஒரு பக்கம் இருந்தபோதும், மக்களின் எதிர்பார்ப்பு எப்படி உள் ளது என்பது குறித்து ஒரு பாடத்தை நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ள இய லும். பூர்ஷுவா அரசியலாளரிடம் இந்தப் பண்புகள் இருப்பதைக் கண்டுகொள்ளாத மக்கள் அதே அணுகல்முறை இடதுசாரிகளிடமும் இருப்பதை அவ்வளவாக ஏற்ப தில்லை. அவர்களிடம் ஒரு வித்தியா சமான அரசியலை மட்டுமல்ல அணு கல் முறைகளையும் எதிர்பார்க்கிறார் கள் என்பதுதான் அது. தவிரவும் பிரசண்டா, யாமி முதலானவர்களி டம் காணப்பட்ட இந்த மேட்டிமைத்த னங்களை முதலாளிய இதழ்களும் பெரிதுபடுத்திக் காட்டின.

2008 தேர்தலில் அதிக எண்ணிக் கைகளைப் பெற்ற கட்சியாக இருந்த போதும் மாவோயிஸ்டுகளுக்கு அறு திப் பெரும்பான்மை இல்லை. எனினும் அவர்களே தொடர்ச்சி யாகப் பதவியில் இருக்க முயன்ற தான ஒரு கருத்தை மக்கள் மத்தியில் அவர்களின் செயற்பாடுகள் ஏற்படுத் தின. நேபாளக் காங்கிரஸ் அதிகாரத் திற்கு வந்துவிட இயலாது என்பதற் காகவே தலைமை நீதிபதி ரெக்மியை இடைக்கால அரசுக்குத் தலைமை ஏற்க மாவோயிஸ்டுகள் முன்மொழி ந்தனர் என்றும் ஒரு கருத்துண்டு.

இந்தப் பதவிச் சண்டை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நெருக்கடிக ளின் விளைவாகக் கட்சி அணிகளுக் கும் உரிய முக்கியத்துவத்தையும் தலைமை அளிக்கவில்லை என் றொரு குற்றச்சாட்டும் மாவோயிஸ்டு கள் மீது உண்டு. புரட்சிகர இராணு வத்தைச் சேர்ந்த 9 பேரைக் கட்சி அமைப்புகள் பரிந்துரைத்திருந்த போதும் அவர்களில் ஒருவருக்கும் வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப் படவில்லை. தலைமைக் கமான்டர் நந்த கிஷோர் புன்னுக்கு மட்டுமே வாய்ப்பளிக்கப்பட்டது. காத்மண்டு 10 தொகுதியில் பிரசண்டாவை

எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் மாவோயிஸ்ட் கட்சியின் இளைஞர் அமைப்பின் முன்னாள் உறுப்பினரும் ஒருவர்.

எப்படியோ இன்று மாவோயிஸ்டுகள் தோல்வியைத் தழுவியுள்ளனர். இதை அவர்கள் பெருந்தன்மையுடன் ஏற்றுச் செயற்படுவதே அவர்களது எதிர்கால அரசியலுக்கு ஏற்றது. தமது தோல்விக்கான முழுமையான சுய பரிசோதனை ஒன்றை அவர்கள் செய்து கொள்ள வேண்டும். நேபாளக் காங்கிரஸும் நேபாளக் கம்யூனிஸ்டும் சேர்ந்து செயற்படப்போவது உறுதி. எனினும் அப்படியும் கூட மூன்றில் இரு பெரும்பான்மைக்கு மேலும் 30 உறுப்பினர்களின் ஆதரவு அவர்களுக்குத் தேவை. தவிரவும் நேபாள காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே மாவோயிஸ்ட் கட்சிக்கு எதிரான ஒரு ஒற்றுமை இருந்தபோதும் கருத்து மாறுபாடுகளும் உண்டு. எடுத்துக்காட்டாக நேபாள கம்யூனிஸ்ட் கட்சி வேறொரு குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனச் சொல்வது இத்தகைய வேறுபாடுகளில் ஒன்று.

மாவோயிஸ்டுகள் முன்வைத்த கருத்தொருமிப்பு அடிப்படையிலான அரசியல் சட்ட அவை என்கிற கருத்தை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் இன்று அவர்கள் கூறியுள்ளனர். இப்படியான கருத்தொற்றுமை அடிப்படையிலான அரசியல் சட்டமே வலுவுடையதாக இருக்கும். எனினும் மாவோயிஸ்டுகளும் மாதேசிகளும் இன்று படுதோல்வி அடைந்துள்ளதை மனப்பூர்வமாக ஏற்று சில விட்டுக் கொடுத்தல்களுக்கு அவர்கள் தயாராக வேண்டும்.

இந்திய அனுபவம் ஒன்றையும் அவர்கள் கணக்கில் கொள்ளலாம். கருத்தொருமிப்பு உடனடியாகச் சாத்தியமில்லாததன் விளைவாக அரசியல் சட்ட அவை தன் பணியை முடிக்க இயலாத நிலை வந்துவிடலாகாது என்பதற்காக அம்பேத்கர் அவர்களின் கூர்த்த அறிவு முன்வைத்த ஒரு வழிமுறைதான் அரசியல் சட்டத்தை அடிப்படை உரிமைகள் எனவும் வழிகாட்டு நெறிமுறைகள் எனவும் இரண்டாகப் பிரிப்பது. அடிப்படை உரிமைகள் உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும், வழிகாட்டு நெறிமுறைகளில் கண்டுள்ள அம்சங்கள் காலப்போக்கில் கருத்தொற்றுமையின் அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும். மாவோயிஸ்டுகள் இந்த வடிவத்தைக் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

தற்போது மாவோயிஸ்டுகள் அரசியல் சட்ட அவையில் பங்கேற்பதற்கு இணங்கியிருக்கிறார்கள். மாவோயிஸ்டுகளினால் தெரிவிக்கப்பட்ட தேர்தல் முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு ஏனைய கட்சிகள் இணங்கிக் கொண்டதையடுத்தே அவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு வந்ததாக கூறப்படுகிறது.

ஆசியாவிலேயே பொருளாதார வளர்ச்சியிலும், தனிநபர் வருமானத்திலும், வேலை வாய்ப்பிலும் மிகவும் பின்தங்கிய நாடு நேபாளம் என்பதைக் கருத்திற்கொண்டு நேபாள அரசியல் கட்சிகள் ஆளுகைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

இந்தியா தன் அரசியல் தந்திரத்தில் தற்காலிக வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், இப்படி நேபாளத்தைத் தன் மாநிலங்களில் ஒன்று போல நடத்தி மேலாண்மை செய்வதை அது தொடர்ந்தால் இந்திய வெறுப்பு அங்கு அதிகமாகும். சிக்கிம் உதாரணம் அவர்களை ஏற்கனவே அச்சுறுத்திக் கொண்டுள்ளதை இந்தியா கவனம் கொள்ள வேண்டும். நேபாளத்தையும் பகைத்துக்கொள்வது இந்தியாவிற்கு நல்லதல்ல. ■

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தகாத கால நிலைகளிலும் அது பயன்படுத்தக்கூடியது.

மிக்கெயில் கலாஷ்னிகோவின் இந்த தயாரிப்பு கடந்த 6 தசாப்தத்துக்கும் அதிகமான காலமாக இடம் பெற்றிருக்கக்கூடிய போர்கள் அனேகமாக அனைவற்றிலும் பயன்படுத்தப்பட்டது. அந்தளவுக்கு அது பிரபல்யமாகியிருந்தது.

தற்போது பத்துக்கோடிக்கும் கூடுதலான ஏ.கே.47 ரைபிள்கள் உலகில் புழக்கத்தில் இருக்கின்றன. வேறு எந்தவொரு ஆயுதத்தையும்விட ஏ.கே.47 ரைபிள்களினாலேயே கூடுதலான மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. கலாஷ்னிகோவ் தான் உருவாக்கிய ஆயுதத்தினால் விளைவிக்கப்பட்ட மரணங்களில் இருந்து தன்னை எப்போதுமே தூரவிலக்கியே வந்தார். தனது தாய் நாட்டைப் பாதுகாப்பதற்காகவே அந்த ரைபிளை கண்டுபிடித்ததாகவும் மற்றவர்களினால் அது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கு தான் எந்தவகையிலும் பொறுப்பல்ல என்று அவர் கூறியிருக்கிறார்.

காலாஷ்னிகோவின் மரபு மிகவும் ஆழமான சர்ச்சைக்குரியது. அவரை விமர்சிப்பவர்கள் பிரதானமாக, மேற்குலக நாடுகள் ஏ.கே.47 ரைபிளை பயங்கரவாதிகளுக்கு வலுவூட்டும் கொலை இயந்திரம் என்று வர்ணித்தன. ஏ.கே.47 பலரைக்கொன்றிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது அரசுகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான, ஆக்கிரமிப்பு படைகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையேயான இராணுவ ரீதியான அசமத்துவத்தை கணிசமான அளவுக்கு சீர்செய்ததன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை காலனித்துவ ஆட்சியிடமிருந்தும் ஏதேச்சாதிகார ஆட்சியாளர்களிடமிருந்தும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும் விடுவித்துக்கொள்ள வகை செய்தது என்பது வரலாறு.


ஏ.கே.47 இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுக்கு உருக்கொடுத்தது என்றால் மிகையில்லை. மிக்கெயில் கலாஷ்னிகோவின் மரபை இந்தப் பின்புலத்திலேயே மதிப்பீடு செய்ய வேண்டும். ■

# நெல்சன் மண்டேலாவின் மறைவும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் எதிர்காலமும்



வில்லியம் குமடே

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் தற்போதைய தலைமைத்துவம் புதிய தலைமைத்துவத்திற்கு வழி விடக்கூடியதாகவோ அல்லது புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவோ இல்லை



நெல்சன் மண்டேலாவுடன் தபோ எம்பெகியும் ஜாக்கோப் சுமாவும் (2008)

ஆழமாக பிளவுண்டிருக்கும் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸை நெருக்கமாகச் சேர்த்து வைத்திருந்த பசை நெல்சன் மண்டேலா. அவர் மரணமடைவதற்கு முன்னதாக சுகவீனமுற்ற நிலையில் பல வருடங்களாகத் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை என்றாலும் கூட, வெறுமனே அவரது பிரசன்னமே ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் உறுப்பினர்களையும் தொண்டர்களையும் பொறுத்தவரை ஒரு வலிமையான சின்னமாக விளங்கியது. கடந்த காலக் கீர்த்திகளின் குறியீடாக இருந்த மண்டேலா ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதன் ஜனநாயக, ஒத்துணர்வு வேர்களுக்குத் திரும்பிச் செல்லும் என்ற நம்பிக்கையினதும் எதிர்பார்ப்பினதும் அடையாளமாகவும் திகழ்ந்தார்.

மண்டேலா தற்போதைய தலைமைத்துவத்தை அங்கீகரித்தார் அல்லது இறுதிக் காலத்திலும் தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடுகளில்

சம்பந்தப்பட்டிருந்தார் என்றே ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் பல ஆதரவாளர்கள் நம்பினார்கள். இது ஜனாதிபதி சூமாவும் தலைமைத்துவத்தில் உள்ள ஏனையோரும் நலிவுற்றுப் போயிருந்த மண்டேலாவை சக்கர நாற்காலியில் வைத்து பிரசாரக் கூட்டங்களுக்கு தள்ளிக்கொண்டு போனதற்கும் அவருடன் சேர்ந்து படம் எடுத்துக் கொள்வதில் அக்கறை காட்டியதற்குமான காரணங்களில் ஒன்று.

அண்மைய சில வருடங்களாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைமைத்துவம் வறுமையைத் தணிப்பதில் அல்லது தொழில் வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் பயனுறுதியுடைய பொதுச் சேவைகளை வழங்குவதில் உள்ள அதன் இயலாமையின் சுமையின் கீழ் பெரும் நெருக்குதலுக்குள்ளாகி வந்திருக்கிறது. இப்போது மண்டேலா மறைந்துபோன நிலையில், மருட்சி நீங்கிய பல ஆதரவாளர்கள் தற்போதைய ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் அதன் தலைமைத்துவமும் மண்டேலாவின் பண்புகளில் இருந்து விலகிச் சென்றுவிட்டன என்றும் பெயரளவிலேயே தவிர மற்றும்படி அது வேறுவிதமான ஒரு கட்சியாகிவிட்டது என்றும் சுலபமாகவே நினைக்கத் தொடங்கக்கூடும். அதன் விளைவாக, ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் பிளவுபடக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். பல பிரிவுகளாக உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் அதைக் கைவிட்டுச் செல்லக்கூடும்.

அடுத்த வருடத்தைய தேசிய தேர்தல் 1994 ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்த பிறகு இடம்பெறப்போகும் கடுமையான போட்டியுடனான தேர்தலாக அமையக்கூடிய சாத்தியம் இருக்கிறது. மண்டேலாவுக்காக சில வாக்காளர்கள். காங்கிரஸுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பார்கள் என்பதால் அது தேர்தலில் ஒரு திடீர் பாய்ச்சல் வெற்றியைப் பெறக்கூடும். ஆனால், அது தற்காலிகமானதாகவே இருக்கும். கட்சியைப் புதுப்பிப்பதற்குத் தேவையான தரம்வாய்ந்த தலைமைத்துவம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிடம் இல்லை. புதிய தலைமைத்துவ த்திற்கு வழிவிடக் கூடியதாகவோ அல்லது புதிய கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவோ அது இல்லை. கடுமையான கர்வத்தனமுடையதாகவும் ஆக்கபூர்வமான விமர்சனங்களை நிராகரிப்பதாகவும் தலைமைத்துவம் இருக்கிறது. அதனால் காங்கிரஸ் அதன் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த இயலாததாக இருக்கிறது போலத் தோன்றுகிறது.

இது தென்னாபிரிக்காவின் ஜனநாயகத்துக்கு நல்ல செய்தியாக இருக்கக்கூடும். நாட்டின் தற்போதைய அரசியல் கட்சிமுறை ஜனநாயக நோக்கத்துக்குப் பொருத்தமானதாக இல்லை. பழைய கட்சிகள் (ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் எதிரணியில் உள்ள கட்சிகளும்) குழந்தைப் பருவத்தில் உள்ள ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு கருவியாகச் செயற்பட பொருத்தமானவையாக இல்லாத அளவுக்கு இனஒதுக்கலின் முடிவுக்கு முன்னரான அரசியல் கலாசாரத்தில் மூழ்கியிருக்கின்றன.

அண்மையில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸில் இருந்து

# தென்னாபிரிக்காவில் ஓர் இளம் மடிபா



டேவிட் சிமித்



தென்னாபிரிக்காவின் ஈஸ்ட்லண்டன் பகுதியில் அயன்டா எம்பற்யோதி என்ற 37 வயதான நபர் ஒருவர் இருக்கிறார். அவரைக் காண நேர்ந்தால் நீங்கள் ஒரு ஆவியைத்தான் கண்டுவிட்டோமோ என்று ஆச்சரியப்படவும் கூடும். ஏனென்றால் அவரின் தோற்றம் இளவயது நெல்சன் மண்டேலாவைப் போன்று இருக்கிறது.

அயன்டா தென்னாபிரிக்காவில் ஒரு பிரபலத்துக்குரிய அந்தஸ்துடன் வலம் வருகிறார். அவர் மண்டேலா நிகழ்த்திய பிரபலமான உரைகளை நிகழ்த்திக் காட்டுகிறார். அரசியல் கூட்டங்களில் அவர் தோன்றிப் பேசும் போது மக்கள் பெரும் ஆரவாரம் செய்துவரவேற்கிறார்கள். மண்டேலா ஒரு தடவை அயன்டாவைக் கண்ட போது 'நீங்கள் இளம் மடிபா' என்று கூறினாராம். (மண்டேலாவை அவரது குலப்பெயரைப் பயன்படுத்தி மடிபா என்று தென்னாபிரிக்கர்கள் அழைத்துவந்தார்கள்.) மண்டேலாவைப் போலவே ஒப்புமை காட்டி நடக்கவும் பேசவும் அயன்டா பழகிக் கொண்டுள்ளார். மண்டேலாவைப் பெரிதும் மதிக்கும் அவர் தென்னாபிரிக்காவின் கறுப்பின மக்களை இன ஒதுக்கல் கொடுமையில் இருந்து விடுவித்த அந்த மாபெரும் தலைவரின் மரணத்தினால் ஏற்பட்ட மனத்தாக்கத்திலிருந்து விடுபட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

'மண்டேலா உண்மையிலேயே ஒரு மக்கள் நாயகன். அவரது மறைவை என்னால் நம்பமுடியவில்லை. அவர் கறுப்பின மேலாதிக்கத்தையும் வெள்ளையின மேலாதிக்

கத்தையும் எதிர்த்துப் போராடினார். அவர் யேசு கிறிஸ்துவைப் போன்றவர். மூன்று நாட்களுக்குப் பிறகு கடவுள் மண்டேலாவைத் திரும்பக் கொண்டுவரவும் கூடும்' என்று அயன்டா மண்டேலாவின் மறைவுச் செய்தியைக் கேள்விப்பட்ட உடனே கூறினாராம்.


மண்டேலா அவ்வாறு திரும்பி வராவிட்டால், நான் தான் அவரை உருவத்தால் நினைவுபடுத்திக் கொண்டிருப்பேன். இதுதான் மண்டேலா என்று மக்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் காட்டுவார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.


மண்டேலாவுக்கும் அயன்டாவுக்கும் எந்தவிதமான இரத்த உறவும் கிடையாது. ஆனால், மண்டேலாவைப் போன்றே கிழக்கு கேப் மாகாணத்தின் ஷோசா மக்கள் குழுமத்தைச் சேர்ந்தவர் அவர். மண்டேலாவின் தோற்றத்தைக் கொண்டவர் என்பது வெளிப்படையாகத் தெரியவந்ததும் 20 வருடங்களுக்கு முன்னர் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸுக்காக பிரசாரம் செய்ததையும் மண்டேலாவின் உருவப்படங்களைத் தூக்கிக்கொண்டு ஊர்வலயங்களில் சென்றதையும் அயன்டா நினைவு கூருகிறார். மக்கள் தன்னை இடைமறித்து ஏன் நீங்கள் அந்த மனிதரைப் போன்று இருக்கிறீர்கள் என்று கேட்பார்கள் என்கிறார் அவர்.

1996ஆம் ஆண்டு ஜனாதிபதி மண்டேலாவும் அயன்டாவும் முதற் தடவையாக நேருக்கு நேர் சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. 'என்னை அவர் சந்தித்தார். அந்தப் போராற்றல் வாய்ந்த மனிதருடன் நான் கைகுலுக்கினேன். அவரைப் போன்று நடித்துக் காட்டினேன். அப்போது அவர் என்னைப் போன்றே இருக்கிறீர்கள். நீங்கள் தான் இளம் மடிபா' என்று கூறினார்' என்று அயன்டா தெரிவித்தார். அதற்குப் பிறகு இளம் மடிபா என்பது அயன்டாவின் முத்திரையாகிவிட்டது. யங் மடிபா புரொடக்சன்ஸ் என்ற கம்பனியொன்றையும் அவர் தொடங்கினார். விளம்பரத்துறையிலும் அரசாங்கத்துக்கு காகிதாதிகளை விநியோகிப்பதிலும் அக்கம்பனி ஈடுபட்டுவருகிறது. வீதி நாடகங்களில் பங்கேற்றிருக்கும் அயன்டா ஐரோப்பாவில் தொலைக்காட்சி நேரடி நிகழ்ச்சிகளில் தோன்றியுமிருக்கிறார். அத்துடன் தென்னாபிரிக்க நகைச்சுவைத் திரைப்படமொன்றில் நடித்த அனுபவமும் அவருக்கு உண்டு. ஆபிரிக்கத்தேசிய காங்கிரஸின் பேரணிகளில் கலந்துகொள்ளும் போது பெரிய திரையில் அவரது படம் காண்பிக்கப்படுகின்ற வேளைகளில் மக்கள் கூட்டம் உற்சாகமிகுதியில் குதூகலிக்கும்.

மண்டேலா 1964 வழக்கு விசாரணையின் போது குற்றவாளிக் கூண்டில் நின்று நிகழ்த்திய பிரபலமான உரையை 2001 ஆம் ஆண்டில் அவரது 'விடுதலைக்கான நீண்ட பயணம்' (Long walk to freedom) என்ற சுயசரிதையை திரைப்படமாக்கும் முயற்சியின் போது நடிகர் தெரிவு பயிற்சியின் போது பேசிக் காட்டியதாகக் கூறும் அயன்டா, அந்தத் தெரிவில் வெற்றி பெற்றிருந்த போதிலும், இறுதியில் ஒரு தசாப்தத்திற்குப் பிறகு திரைப்படம் தயாரிக்கப்பட்டபோது கதாநாயகன் பாத்திரம் தனக்குப் பதிலாக பிரிட்டனின் இத்ரிஸ் எல்பாவுக்கு சென்றுவிட்டது என்பது இன்னமும் குழப்பமாக இருக்கிறது என்று தெரிவித்தார்.

விடுதலைக்கான நீண்ட பயணம் திரைப்படத்தைப் பார்க்கும் போது ஒரு ஆபிரிக்க நபரே அந்தப் பாத்திரத்தில் நடித்திருக்க வேண்டும் என்பதை உணருவீர்கள். வறுமையோடு வாழ்ந்த ஒருவரே அந்தப் பாத்திரத்துக்குத் தேவை என்கிறார் அயன்டா.





சமூக சேவையிலும் அயன்டா ஈடுபட்டு வருகிறார். அதற்கான ஊக்கத்தைத் தந்தது மண்டேலாவின் வாழ்க்கையே என்று அவர் கூறுகிறார். 'நான் அயன்டாவாகவும் இளம் மடிபாவாகவும் வந்திருக்கிறேன். என்னை மக்கள் மதிப்பதற்கு அவரே காரணம். அவரது அடிச்சுவடுகளை நான் தொடர்ந்து பின்பற்றுவேன். ஒவ்வொரு வருடமும் நான் சமூகத்துக்காக கிறிஸ்மஸ் விருந்துகளை நடத்துகிறேன். அவர்கள் வந்து உணவுப் பொட்டலங்களைப் பெற்றுச் செல்வார்கள். இளம் மடிபா எங்களுக்காக இதைச் செய்கிறார் என்று சொல்வார்கள்' என்று அயன்டா கூறினார். மண்டேலாவின் முன்னாள் மனைவி வின்னி, அவரது மகள் சின்ட்சி, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜாக்கோப் சூமா ஆகியோரை அயன்டா சந்தித்திருக்கிறார்.

அயன்டாவின் மிகப்பெரிய ரசிகர் அவரது முகாமையாளரான ஷோபானி தோலோ தான். மண்டேலா மீது 1960களின் முற்பகுதியில் தேசத்துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது குற்றவாளிக் கூண்டில் நின்று அவர் உரையாற்றியபோது இருந்த தோற்றத்தில் இன்று அயன்டா இருக்கிறார். மண்டேலாவைப் போன்று நடித்துக்காட்ட அவரால் முடியும். அவரைப் போன்று சிரிக்கவும் முடியும். மடிபாவைப் போன்று தோற்றத்தில் மாத்திரம் அயன்டா இருக்கவில்லை. மண்டேலா மீது அவர் வைத்திருக்கும் அன்பும் அபிமானமும் நம்ப முடியாதது. மண்டேலாவுக்காக உயிரையும் விடுவார் என்று ஷோபானி கூறுகிறார்.

விடுதலைக்காக நீண்ட பயணம் திரைப்படத்தின் ஆரம்பக் கட்டங்களில் அயன்டாவைப் பயன்படுத்தியிருந்தால் மிகவும் சிறப்பாக அவர் நடித்திருப்பார். மண்டேலா இப்போது இறந்துவிட்டார். அதனால் பல வாய்ப்புகள் தேடிவரும் என்று அயன்டாவிடம் கூறியிருக்கிறேன் என்கிறார் ஷோபானி. மடிபாவின் மரபு என்றென்றைக்கும் நிலைக்கும். ■

அல்லது எதிரணிக் கட்சிகளில் இருந்து பிரிவடைந்து பல சிறிய கட்சிகள் தோன்றியிருக்கின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை குறைபாடுகளையுடையவையாகவே இருக்கின்றன.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அதிருப்தியுற்ற பெரும்பாலான கறுப்பு ஆதரவாளர்கள் அதன் இடதுசாரிப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற அதேவேளை, சகல எதிர்க்கட்சிகளும் 1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமைக்கப்பட்ட கட்சிகளும் வலதுசாரிகளாக இருக்கின்றன. அதனால் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்களுக்கான புதிய அரசியல் புகலிடமாக இக்கட்சிகளை நாட முடியாது. முன்னாள் கறுப்புணர்வுத் தலைவரான மம்பீலா ரம்பீலினால் ஆரம்பிக்கப்பட்ட ஏகாங் தென்னாபிரிக்கா (Agang south Africa) என்ற கட்சியும் வலதுசாரியாகவே இருக்கிறது. இக்கட்சி பெரும்பான்மையான கறுப்பினத்தவர்களையும் கிராமப்புற வறியவர்களைவிட கூடுதலான அளவுக்கு தென்னாபிரிக்காவும் சிறிய கறுப்பின நடுத்தரவர்க் கப் பிரிவினரே கவர்ந்திழுப்பது சாத்தியம்.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இளைஞர் அணியின் முன்னாள் தலைவர் ஜூலியஸ் மலெமா தென்னாபிரிக்க தேர்தல் அரங்கில் இருக்கக்கூடிய வெற்றிடத்தை நன்கு விவேகத்துடன் புரிந்து கொண்டவராக பொருளாதார விடுதலைப் போராளிகள் (Economic Freedom Fighters) என்ற புதிய கட்சியை ஆரம்பித்தார். இக்கட்சி மக்கள் கவர்ச்சி இடதுசாரி அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டதாகவும் அமைதியிழந்திருக்கும் இளைஞர்களைக் கவரும் நோக்குடனானதாகவும் விளங்குகிறது. ஆனால், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் இடதுசாரிப் பிரிவுக்கு சார்பானதான பிரதான போக்கு தொழிற்சங்க இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியினாலேயே தென்னாபிரிக்காவின் ஜனநாயக முறைமைக்கு சேவை செய்யக்கூடியதாக இருக்கும்.

இது விரைவில் நடந்தேறும். தென்னாபிரிக்க தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (The congress of south African Trade Unions) ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மிகவும் சக்திமிக்க தொழிற்சங்க நேச அணியாகும். அது 2007ஆம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைமைப்பதவிக்கு சூமாவையே ஆதரித்தது. ஜனநாயகத்தை வலுப்படுத்தும் செயன்முறைகளையும் கூடுதலான அளவுக்கு சகல தரப்பினரையும் அரவணைக்கக் கூடியதான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் சூமா முன்னெடுப்பார் என்ற நம்பிக்கையிலேயே அந்த ஆதரவு அளிக்கப்பட்டது. அவ்வாறு செய்தது ஒரு தவறு என்பதை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்துடன் இணைந்த அமைப்புகளும் தலைவர்களும் இப்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். இந்தச் சம்மேளனத்தின் மிகப்பெரிய அங்கத்துவ அமைப்பான தென்னாபிரிக்க உலோக தொழிலாளர் தேசிய சங்கம் சிவில் சமூகத்துடன் இணைந்ததாக தொழிற்சங்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியை ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இது பிரேசிலில் லூலா டி சில்வாவின் சோசலிசக் கட்சியைப் போன்றதாக இருக்கும்.

தாங்கள் எதிர்நோக்குகின்ற அச்சுறுத்தலைப் புரிந்து கொண்டவர்களாக ஆபிரிக்கதேசிய காங்கிரஸ் தலைவர்கள் அண்மையில் கிளர்ந்தெழுகிற தொழிற்சங்கவாதிகளுக்கு சகல வகையான உறுதிமொழிகளையும் வழங்கினார்கள். ஆனால், தொழிற்சங்க இயக்கத்தில் தளத்தைக் கொண்ட புதியதொரு கட்சியின் வரவு செயலற்றுக் கிடக்கின்ற கட்சி அரசியல் முறையொன்றுக்குள் புதிய சக்தியைப் புகுத்தும் என்று நம்பலாம். ■

*த கார்டியன்*

---

*(52ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

### திருத்தியமைக்கப்பட்ட லோக்பால்,லோகாயுக்த சட்டத்தின் பிரதான ஏற்பாடுகள்;

லோகாயுக்த என்பது மாநிலங்களில் உள்ள ஊழலுக்கு எதிரான ஏற்பாடு. 365 நாட்களுக்குள் மாநிலங்கள் லோகாயுக்தகளை சட்ட ரீதியாக அமைக்க வேண்டும். லோகாயுக்த வழங்கக்கூடிய தண்டனையின் வகையைத் தீர்மானிப்பதற்கு மாநிலங்களுக்கு சுதந்திரம் உண்டு.

போலியானதும் விசமத்தனமானதுமான முறைப்பாடுகளைச் செய்ததாக நிரூபிக்கப்பட்டால் ஒருவருட சிறைவாசமும் ஒரு இலட்சம் ரூபாவரையான அபராதமும்.

குற்றவியல் துர்நடத்தைக்கும் ஊழலுக்குத் துணைபோகும் செயற்பாட்டுக்கும் 10 வருடங்கள் வரையானசிறைவாசம்.


**நியாயாதிக்கம்**


லோக்பால் சட்டத்தின் நியாயாதிக்கம் பிரதமர், அமைச்சர்கள் தற்போதைய மற்றும் முன்னாள் எம்.பி.க்கள், சட்டசபை உறுப்பினர்கள், அரசாங்க ஊழியர்கள் மத்திய அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகிற அல்லது கட்டுப்படுத்தப்படுகிற நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கும்.

பொதுப்பணத்தைத் திரட்டுகின்ற சங்கங்கள், நம்பிக்கை நிதியங்கள் வெளிநாட்டு வளமூலங்களில் இருந்து நிதியைத் திரட்டுகிற அமைப்புகளும் உள்ளடங்கும்.

**விசாரணை**

ஆரம்ப விசாரணை 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முழு விசாரணைகளும் 6 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். பிரதமருக்கு எதிராகத் தெரிவிக்கப்படக்கூடிய ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அந்தரங்க விசாரணை களே நடத்தப்பட முடியும். அதுவும் லோக்பால் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் அங்கீகாரத்துடனேயே நடத்தப்பட முடியும். லோக்பால் அதன் வழக்குத் தொடுக்கும் பிரிவின் ஊடாக விசேட நீதிமன்றங்களில் வழக்குகளை தாக்கல் செய்யலாம். வழக்கு விசாரணை இருவருடங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ■





# ஊழலுக்கு எதிராக அரைவாசி வெற்றி

ஊழல் மோசடிகளைப் பொறுத்தவரை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பெருமளவில் வேறுபாடு கிடையாது. ஊழலுக்கு எதிரான அமைப்பான 'ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரர்நஷனல்' அண்மையில் வெளியிட்டிருந்த ஊழல் குறிகாட்டி அணிவரிசையில் (Corruption perception index) இந்தியா 94 ஆவது இடத்தில் இருக்கிற அதேவேளை, இலங்கை 91ஆவது இடத்தில் நிற்கிறது. ஊழல் மட்டங்கள் அதிகரித்துக் கொண்டுவருவது பெரும் கவலை தருகிறது. கடந்த வருடம் இலங்கை 79 ஆவது இடத்தில் இருந்தது. இவ்வருடம் 12 புள்ளிகளால் இலங்கையின் ஊழல் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தியா ஓரளவுக்கு அதிர்ஷ்டமுடையதாக இருக்கிறது. ஏனென்றால், 45 வருடங்கள் காத்திருந்த பிறகு, ஊழல்கள் தொடர்பாக முறைப்பாடுகளைப் பெற்று சுயாதீனமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 'லோக்பால்' என்று அழைக்கப்படுகின்ற குறைகேள் அதிகாரிக்கு அதிகாரமளிக்கும் சட்டமொன்றை இந்தியா பெற்றிருக்கிறது. ஊழல் விவகாரங்களைப் பொறுத்தவரை பிரதமர் பதவி கூட விட்டுவைக்கப்படமாட்டாது. பிரதமருக்கு எதிராகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால் விசாரணைகளை நடத்த முடியும். அண்ணா ஹசாரே, அரவிந்த் கெஜ்ரிவால் போன்றவர்களின் தலைமையில் இரு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டங்களின் விளைவாகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அரசியல் வர்க்கத்தினர் நம்பிக்கையீனத்தை வெளிக்காட்டிய போதிலும், ஊழலுக்கு எதிரான இந்த இயக்கத்துக்கு இந்தியா பூராகவுமிருந்து மக்களின் பேராதரவு கிடைத்தது.

இருவருடங்களுக்கு முன்னர் அண்ணா ஹசாரேயும் அவரது குழுவினரும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியபோது அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தொடரின் போது ஊழலைத் தடுப்






எம்.பி.வித்தியாதரன்

பதற்கான கடுமையான சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்படுமென்ற உறுதிமொழியை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பாராளுமன்றத்துக்கு ஏற்பட்டது. ஆனால், அவ்வாறு சட்டம் கொண்டுவரப்படவில்லை. தங்களுக்கு எதிரான பெரிய தடையாக அது அமையுமென அரசியல்வாதிகள் அஞ்சியதால் அவர்கள் உறுதிமொழியை அலட்சியம் செய்தார்கள். இது விடயத்தில் காங்கிரஸும் பாரதிய ஜனதாவும் அவற்றின் பொறுப்புகளைத் தட்டிக்கழித்தன. அதேவேளை, அண்ணா ஹசாரேயும் அவரது குழுவினரும் நெருக்குதலைத் தீவிரப்படுத்தினர். மும்பையில் அவர்கள் போராட்டத்தை நடத்தினர். ஆனால், டில்லியில் கிடைத்த மக்கள் ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லை. ஊழலுக்கு எதிரான கடுமையான சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மக்கள் மறந்துவிட்டார்கள் என்று அரசியல்வாதிகள் அதை தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால், நான்கு மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் அடைந்த தோல்வியும் டில்லியில் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சிக்கு கிடைத்த அதிர்ச்சிகரமான வெற்றியும் காங்கிரஸை அதன் தந்திரோபாயங்களை மீள்சிந்தனைக்கு உட்படுத்த நிர்ப்பந்தித்தன. அரசியல்வாதிகளின் நடத்தைகள் குறித்து மக்கள் பெரும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்பதையும் மாற்றீடு ஒன்று கிடைத்தால் அதற்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்பதையும் ஆம் ஆத்மி கட்சியின் தேர்தல் செயற்பாடுகள் வெளிக்காட்டின. ஊழலுக்கு எதிரான மக்களின் சீற்றத்தினால் அச்சமடைந்த காங்கிரஸ் கட்சி அதுவரை மறந்திருந்த லோக்பால் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதில் இறங்கியது. முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாதி கட்சியைத் தவிர சகல கட்சிகளும் லோக்பால் சட்டமூலத்தை ஆதரித்தன. முடிவடைந்த குளிர்காலக் கூட்டத் தொடருக்குள் இரு நாட்களில் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் அச்சட்டமூலம் நிறைவேறியது.

இது உண்மையில் ஆம் ஆத்மி கட்சிக்கு பெரியதொரு வெற்றியாகும். கெஜ்ரிவால் கூறியது சரியானது என்பதை மக்கள் நிரூபித்திருக்கிறார்கள். மக்கள் துணிச்சலுடன் கிளர்ந்தெழுந்தால் பலம் பொருந்திய அதிகார பீடங்களும் ஆட்டம் காணும் என்பதை அவர்கள் காண்பித்தார்கள். தற்போது காங்கிரஸ் அரசாங்கம் பல முக்கியமான சட்ட மூலங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றது. பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடரின் போது ஒரு சில முக்கியமான சட்டமூலங்களை அவசர அவசரமாக அரசாங்கம் நிறைவேற்றுவதைக் காணக்கூடியதாக இருக்கும். பொதுமக்களுக்கு நல்லதே.

லோக்பால் சட்டத்தில் சக்திவாய்ந்த பல ஏற்பாடுகள் இருக்கின்றபோதிலும், அதை பூரணத்துவம் வாய்ந்த ஒன்று என்று கூறிவிட முடியாது. முக்கியமான பிரச்சினை லோக்பாலுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் (அது இன்னமும் அரசியல்வாதிகளின் கைகளிலேயே இருக்கிறது) முறைப்பாடுகளை விசாரணை செய்யும் மத்திய புலனாய்வுப் பணியகத்தின் (சி.பி.ஐ.) மீது அரசாங்கத்துக்கு இருக்கும் கட்டுப்பாடு, குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் நிரூபிக்கத்தவறும் எந்தவொரு முறைப்பாட்டுக்காரருக்கும் ஒருவருட சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதிக்க வகை செய்யும் ஏற்பாடு போன்றவற்றிலேயே இருக்கிறது. இவை 45 வருடங்களாக மக்கள் காத்திருந்த பிற்பாடு கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயன்முறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய குறைபாடுகளாகும். 1960களின் மொரார்ஜி தேசாய் ஊழலுக்கு எதிரான குறைகேள் அதிகாரியை நியமிப்பதற்கான பிரேரணையை முன்வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

லோக்பால் சட்ட மூலம் இந்திய பாராளுமன்றத்தின் வரலாற்றில் மிக நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட சட்டமூலங்களில் ஒன்றாகும். அது முதன் முதலாக 1968 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு 8 தடவைகள் அதைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பயனளிக்கவில்லை. 2011ஆம் ஆண்டில் அண்ணா ஹசாரே தலைமையில் ஊழலுக்கு எதிரான மாபெரும் மக்கள் இயக்கம் முன்னெடுக்கப்பட்டதையடுத்தே லோக்பால் சட்டமூலம் தொடர்பில் அக்கறைகாட்ட வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

2011 ஆம் ஆண்டிலும் கூட, அரசாங்கம் தானாக வரைந்த லோக்பால் சட்டமூலத்தை நிறைவேற்றுவதிலேயே (அந்த ஆகஸ்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது) குறி

**ஆட்சி முறையில் மாற்றத்தைக்கொண்டு வருவதற்கு அதற்குள் பிரவேசிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்த கெஜ்ரிவாலுடன் ஏற்பட்ட கடுமையான வேறுபாடுகள் காரணமாக அண்ணா ஹசாரேயும் லோக்பால் சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு நெருக்குதலைக் கொடுத்ததில் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியின் பங்களிப்பை சிறுமைப்படுத்தும் காங்கிரஸின் தந்திரோபாயத்திற்கு எடுபட்டுவிட்டார் போலத்தோன்றுகிறது**

யாக இருந்தது. ஆனால், டில்லி ராம் லீலா மைதானத்தில் 13 நாட்களாக அண்ணா ஹசாரே மேற்கொண்ட உண்ணாவிரதத்தையடுத்தே அவரின் குழுவின் கருத்துகளையும் உள்வாங் கிக்கொள்ள அரசாங்கம் இணங்கிக் கொண்டது.

எவ்வாறெனினும், அண்ணா ஹசா ரேயின் இயக்கத்தின் தாக்கம் தணி யத் தொடங்கியதும் மூன்று மாதங் கள் கழித்து அரசாங்கம் மீண்டும் தனது லோக்பால் சட்டமூலத்தை லோக்சபாவில் நிறைவேற்றுவதற் கான முயற்சிகளில் இறங்கியது. அதில் வெற்றியையும் காணக்கூடிய தாக இருந்தது. ஆனால், ராஜ்யசபா வில் அச்சட்டமூலத்தை நிறைவேற்று வதில் அரசாங்கம் தோல்விகண்டது. அதையடுத்து 2011 டிசம்பர் 29ஆம் திகதி நள்ளிரவு பாராளுமன்றக் கூட் டத்தொடரை ஒத்திவைக்க அரசாங் கம் தீர்மானித்தது. நாடு அதிர்ச்சியில் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், இப்போது லோக்பால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதற் (உண்ணாவிரதமிருந்த நிலையில்) அண்ணா ஹசாரேயும் ராகுல் காந்தி யும் ஒருவரையொருவர் பாராட்டி முழுப்பெருமையையும் தங்களுக்கே உரித்தாக முயற்சித்தார்கள். ஆனால், டில்லியில் ஆம் ஆத்மி கட்சி கண்ட வெற்றியும் காங்கிரஸ் முதலமைச்சர் ஷீலா தீக்ஷித் 25 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாச த்தில் கெஜ்ரிவாலிடம் தனது தொகு தியிலேயே கண்ட படுதோல்வியுமே லோக்பால் சட்டத்தை நிறைவேற்றுவ தற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது என்பதைச் சகலரும் அறிவார்கள்.

லோக்பால் சட்டமூலம் நல்லதோர் ஆரம்பமென்ற போதிலும அது இர வோடிரவாக ஊழலை ஒழித்துக்கட் டக்கூடிய ஒரு மந்திரக்கோல் அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண் டியது முக்கியமானதாகும். சட்டம் பயனுறுதியுடையதாக அமைவதற்கு அது சமாந்தரமான பல செயன்முறை களின் ஒரு அங்கமாக இருக்க வேண் டியது அவசியமானதாகும். அவ்வா றானால் தான் அது ஊழலுக்கு எதிரான செயலுரமிக்க கட்டமைப் பாக அமைய முடியும்.

அது வேறு நான்கு படிகளை உள்ள டக்கியதாக இருக்க வேண்டும். ஒன்று, அரசியல் கட்சிகளுக்காக நிதி திரட்டும் செயன்முறைகளிலும் நிதி விவகாரங்களில் பொறுப்புக் கூறும் கடப்பாட்டுடன் தொடர்புடைய விவ காரங்களிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இரண்டு, சாதாரண மக்கள் அரசாங் கத்துடனான அலுவல்களைக் கையா ளுகின்ற விடயத்தில் சாத்தியமானள வுக்கு தொழில்நுட்பத்தின் நடுநிலை யான தலையீடு திட்டமிட்ட முறை யில் அதிகரிக்கப்பட வேண்டும். மூன்று, தேசிய வளங்கள் கையகப்ப டுத்துவதிலும் அரசாங்கத்தின் கொள் வனவு செயன்முறைகளிலும் வெளிப் படைத் தன்மையை உறுதிப்படுத்தக் கூடிய சட்ட ஏற்பாடுகள் இருக்க வேண்டும். நான்கு, சகலவகையான ஊழல்களுக்கும் எதிராக குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் நடவ டிக்கை எடுக்கக்கூடியதாக நீதித்துறை யில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட வேண்டும்.

அரசியல்வாதிகள் மற்றும் அரசி யல் கட்சிகளுக்கும் கணக்குக் காட் டப்படாத பணத்துக்கும் இடையே யான தொடர்புதான் ஊழலின் விதை. இந்தக் குறைபாட்டை கையா ளுவதற்கு முதலில் செய்ய வேண்டி யது 20 ஆயிரம் ரூபாவுக்கும் குறை வான பணத்தை அன்பளிப்புச் செய் பவர்களை அரசியல் கட்சிகள் அடை யாளம் காட்டாதிருப்பதற்கு அனும திக்கும் தற்போதைய நடைமுறையை இல்லாமற் செய்வதேயாகும். பிரகட னப்படுத்தாமல் பெருமளவு பண த்தை அரசியல் கட்சிகள் சேர்த்துக் கொள்வதற்கு உதவும் பிரதான மார்க் கம் இதுவேயாகும். அரசியல் கட்சி களுக்கு வழங்கப்படுகின்ற ஒவ் வொரு சதமும், அரசியல் கட்சிகளி னால் செலவிடப்படுகின்ற ஒவ் வொரு சதமும் கணக்குக் காட்டப்பட வேண்டும். அத்துடன் அந்தப் பணம் கணக்குப் பரிசோதனை செய்யப்பட் டதும் ஒளிவு மறைவற்றதுமான வங் கிக் கணக்குகளின் ஊடாக கொடுக் கல் வாங்கல் செய்யப்பட வேண்டும். சகல அரசியல் கட்சிகளும் அவற்றின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை வருடாந்தம் கட் டாயம் பகிரங்கப்படுத்த வேண்டும். 2004ஆம் ஆண்டே தேர்தல் ஆணை யகம் இதைச் சிபாரிசு செய்திருந்தது.

**லோக்பால் சட்டமூலம் நல்லதோர் ஆரம்பம் என்ற போதிலும் அது இரவோடு இரவாக ஊழலை ஒழித்துக்கட்டக்கூடிய ஒரு மந்திரக்கோல் அல்ல. சட்டம் பயனுறுதியுடையதாக அமைவதற்கு அது சமாந்திரமான பல செயன்முறை களின் அங்கமாக இருக்க வேண்டியது அவசியமாகும்**

கான நற்பெயரை காங்கிரஸும் அதன் உபதலைவர் ராகுல் காந்தியும் தமதாக்கிக்கொள்ள முயற்சிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆட்சி முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அதற்குள் பிரவேசிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்த கெஜ்ரிவாலுடனான கடுமையான வேறுபாடுகள் காரணமாக அண்ணா ஹசாரேயும் லோக்பால் சட்டமூல த்தை அரசாங்கம் நிறைவேற்றுவ தற்கு நெருக்குதலைக் கொடுத்ததில் கெஜ்ரிவாலின் கட்சியின் பங்களிப் பைச் சிறுமைப்படுத்தும் காங்கிர ஸின் தந்திரோபாயத்திற்கு இடறிவீழ் ந்து விட்டார் போல் தோன்றுகிறது. சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பிறகு

(49ஆம் பக்கம் பார்க்க...)

# அரங்கேறப்போகும் கூட்டணிக்காட்சிகள்

சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்



''நரேந்திரமோடி நல்ல மனிதர். மாநில வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். குஜராத் மாநிலத்தில் சிறந்த நிர்வாகி என்று தன்னுடைய திறமைகளின் மூலம் நிரூபித்திருக்கிறார்''- இந்தப் பாராட்டுகள் எல்லாம் சாட்ஷாத் கலைஞர் கருணாநிதியிடமிருந்து பீறிட்டுக்கொண்டு வந்து கொட்டியிருக்கும் பாராட்டு மழை. பரபரப்பான திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு முடிந்தவுடன் ஒரு ஆங்கிலப் பத்திரிகைக்கு (டைம்ஸ் ஒப் இந்தியா) கொடுத்துள்ள பேட்டியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி இவ்வாறு மோடியைப் பற்றி ரொம்பவும் சிலாகித்துப் பேசியிருக்கிறார். மோடிக்கு வழங்கப்பட்ட இந்தப் பாராட்டுப் பத்திரம் தமிழக அரசியல் கட்சிகளை திக்கு முக்காட வைத்திருக்கிறது. வருகின்ற பாராளுமன்றத் தேர்தல் கூட்டணிகள் எந்தத்திசையில் போய் எந்தக் கட்சியுடன் சங்கமிக்கப் போகின்றன என்ற ஹேஸ்யங்கள் துள்ளிக் குதித்துப் பறக்கத் தொடங்கி விட்டன.



மோடியைப் பாராட்ட வேண்டிய நிர்ப்பந்தம் தி.மு.க. தலைமைக்கு ஏன் ஏற்பட்டது. அதுதான் சற்று சுவாரஸ்யமான விடயம். தி.மு.க.வின் பொதுக்குழு டிசம்பர் 15ஆம் திகதி நடைபெற்றது. அதில் 23 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அன்று காலை தொடங்கிய பொதுக்குழுவில் பேசிய அனைவருமே காங்கிரஸ் எதிர்ப்பில் குறியாக இருந்தார்கள். முன்னாள் எம்.பி. திருச்சி சிவா, ''காங்கிரஸுடன் கூட்டணி வைக்கக்கூடாது'' என்ற அனல் பறக்கும் விவாதத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அதை அப்படியே முன்னெடுத்துச் சென்றவர்கள் டி.ஆர்.பாலு மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் போன்றவர்கள். டி.ஆர். பாலு தன் பேச்சில், ''நான் ராகுல் காந்தியிடம் ஒரே யொரு கேள்வியைக் கேட்டேன். நீங்கள் நான்கு முறை சென்னை வந்தீர்கள். கலைஞர் கூட்டணிக் கட்சியின் தலைவர். அவரை ஒரு முறையாவது சந்தித்தீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் அளிக்கவில்லை. மீண்டும் நான், 'என் கேள்விக்கு என்ன பதில்?' என்று கேட்டேன். பிறகு, 'ஐ ஆம் ஸாரி' என்று கூறிவிட்டு தலையைக் குனிந்து கொண்டு விட்டார்.'' என்று ராகுல் காந்தியைச் சாடினார்.

### மோடியை நல்ல மனிதர் என்று பாராட்டி மகிழும் கலைஞர் கருணாநிதி

தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், ''நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்களை எல்லாம் சந்திக்கிறேன் (உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்று

அன்றுதான் பொதுக்குழுவிற்கு வந்திருந்தார்). உங்கள் 'தாமரை' போன்ற மலர்ந்த முகத்தைப் பார்க்க சந்தோஷமாக இருக்கிறது'' என்று கூறியதும், பொதுக்குழு உறுப்பினர்கள் கைதட்டினார்கள். (தாமரை என்பது பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் சின்னம்) உடனே சுதாரித்துக் கொண்ட அன்பழகன், ''நான் நீங்கள் நினைக்கின்ற எண்ணத்தில் கூறவில்லை. உங்கள்



முகத்தைப் பார்த்தேன். சொன்னேன்'' என்று கூறினாலும், காங்கிரஸ் எதிர்ப்பும், பா.ஜ.க. பாசமும் தி.மு.க. பொதுக்குழுவில் கரைபுரண்டு ஓடும் நதி போல் பாய்ந்தது. இப்படி காங்கிரஸ் எதிர்ப்பு கடுமையாக இருப்பதைப் பார்த்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''இன்றைய தினமே காங்கிரஸ் பற்றி ஒரு முடிவை எடுத்து விட வேண்டும்'' என்ற தீர்மானத்திற்கு வந்தார். அதனால் காலையில் நிறைவேற்றப்பட்ட 23 தீர்மானங்கள் தவிர மாலை பொதுக்குழுவிற்குப் பிறகு ஒரு சிறப்புத் தீர்மானத்தை அவசரமாகக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானம்தான் அரசியல் தீர்மானம்!

மாலை பொதுக்குழுவில் பேசிய கருணாநிதி, 'இலங்கையில் போர் நடைபெற்ற போது நான் உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது போர் நின்றுவிட்டது என்று மத்திய அரசு பொய் சொன்னது' என்றும், '2-ஜி அலைக்கற்றை விவகாரத்தை முன் வைத்து ஒட்டுமொத்த தி.மு.க.வே ஊழல் கட்சி என்று சித்தரிக்க காங்கிரஸ் கட்சி முயன்றது' என்றும் பொதுக்குழுவில் சரமாரியாக காங்கிரஸ் மீது குற்றம் சாட்டிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, 'காங்கிரஸின் துரோகத்தை மறக்கமாட்டோம்' என்று அனல் கக்கும் விதத்தில் ஆணித்தரமாகக் கூறினார். அதே வேகத்தில் காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என்றும் 'டிக்ளேர்' செய்தார். அந்த அறிவிப்பின் பேரில் தனியாக சிறப்பு அரசியல் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதுதான் 'கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தனிக்குழு அமைக்கும் தீர்மானம்' என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என்றதும் பொதுக்குழு அரங்கமே கைதட்டலில் அதிர்ந்து போனது. தி.மு.க. பொதுக்குழுவில் ஏதாவது ஒரு விடயத்திற்காக இவ்வளவு பெரிய கைதட்டல் கிடைத்தது என்றால் அது காங்கிரஸுடன் கூட்டணி இல்லை என்ற அறிவிப்புக்காகவேதான் இருக்கும் என்பது கூட்டத்தில் பங்கேற்றோரின் கூற்று.

'ஒரு கதவு மூடினால், இன்னொரு கதவு திறக்கும்' என்ற பழமொழிக்கு ஏற்றவாறு, காங்கிரஸ் கதவை மூடிய கலைஞர் கருணாநிதி, அதே பொதுக்குழுவில் பா.ஜ.க.வின் கதவை மெல்லத் திறந்து வைத்தார் என்றே சொல்ல வேண்டும். தி.மு.க. பொதுக்குழுவில் சில உறுப்பினர்கள் 'பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும்' என்று வாதிட்டார்கள். அப்போது 2000இற்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களில் சுமார் 30 முதல் 40 சதவீதம் பேர் கைதட்டினார்கள். அந்தக் கைதட்டலுக்கு பதிலளிக்கும் வகையில் 'பா.ஜ.க.வுடன் நாம் ஒன்றும் கூட்டணி வைக்காத கட்சியல்ல. நாமும் 1999இல் கூட்டணி வைத்தோம். ஆனால் அப்போது இருந்தது பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய். அவர் உயர்ந்த தலைவர். உண்மையானவர். நேர்மையானவர். நாம் சொல்வதைக் கேட்டவர். தமிழர்கள் மீது பாசமுள்ளவர்' என்று பெருமிதம் கொண்டாலும், 'இன்றைய சூழலில் பா.ஜ.க.வுடன் நம்மால் கூட்டணி வைக்க முடியாது' என்றார். அதாவது நாம் கூட்டணி வைப்பதற்கு பா.ஜ.க. சில கொள்கைகளில் (ராமர் கோயில், பொது சிவில் சட்டம், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்கும் அரசியல் சட்டப் பிரிவு 370 நீக்கம்) சமரசம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதே கலைஞர் கருணாநிதி பேச்சின் பிரதிபலிப்பு.

'காங்கிரஸுடன் கூட்டணி இல்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க முடியவில்லை' என்ற அளவில் வெளிவந்த இந்த அறிவிப்பு தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதன் எதிரொலிதான் இப்போது நரேந்திரமோடியைப் பாராட்டி டைம்ஸ் ஒப் இந்தியா ஆங்கிலப் பத்திரிகையில் டிசம்பர் 20ஆம் திகதி வெளியான கலைஞர் கருணாநிதியின் பேட்டி. இது இவர் எடுத்த இன்றைய நிலைப்பாடு அல்ல. கடந்த சில மாதங்களாகவே நரேந்திரமோடிக்கு எதிராக எந்தக் கருத்தையும் சொல்லாமல் அமைதிகாத்த கருணாநிதி, மோடி சமீபத்தில் திருச்சிக்கு வந்து மகாநாடு போட்டுப் பேசிவிட்டுச் சென்றதையே வக்காலத்து வாங்கிப் பேசினார். தி.மு.க. தலைவரின் இப்போதைய அதிரடிப் பாராட்டு அகில இந்திய அளவில் மதச்சார்பற்ற கட்சிகள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் மந்திர சக்திமிக்கது என்றால்

**லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் அதிக தொகுதிகளில் போட்டியிடப்போகும் கட்சி என்ற இமேஜை அண்ணா தி.மு.க.வுக்கு ஏற்படுத்தியிருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா.**

மிகையாகாது. ஏனென்றால் 'வெற்றிக் கூட்டணிக்கான' விதை மத்தியில் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு கடந்த 1989இல் இருந்தே தமிழகம்தான் விதைத்திருக்கிறது. இந்நிலையில் மோடியைப் பாராட்டியது பற்றி கருத்துச் சொல்லியிருக்கும் அகில இந்திய பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான வெங்கய்யா நாயுடு, 'திரு. கருணாநிதி மூத்த தலைவர். அனுபவமிக்க தலைவர். அவர் மக்களின் இதய ஓட்டத்தைப் புரிந்து கொண்டிருப்பார்' என்று புகழ்ந்துள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணியை விட்டு 2004 தேர்தலுக்காக தி.மு.க. விலகிய பிறகு அநேகமாக 9 வருடங்கள் கழித்து இப்போதுதான் பா.ஜ.க.வின் மூத்த தலைவர் ஒருவர், 'கருணாநிதி மூத்த தலைவர். அனுபவமிக்கவர்' என்று வெளிப்படையாக கருத்துச் சொல்லியிருக்கிறார். அதேநேரத்தில் கோயம்புத்தூரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பா.ஜ.க.வின் தமிழக விவகாரங்களைக் கவனிக்கும் அகில இந்திய செயலாளர்களில் ஒருவரான முரளிதரராவ், '20 அல்லது 50 எம்.பி.க்களை வைத்துக் கொண்டு பிரதமர் பதவிக்கு ஆசைப்பட முடியாது' என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். மோடியை கருணாநிதி பாராட்டியிருக்கின்ற நேரத்தில், தமிழகத்தில் அ.தி.மு.க.வின் சார்பில் 'எங்கள் பிரதமர் வேட்பாளர் ஜெயலலிதா' என்று முன்வைக்கப்பட்ட கோஷத்திற்கு பா.ஜ.க. கொடுத்துள்ள பதிலடி என்றே இதைப் பார்க்க வேண்டும்.

இதைவிட முக்கியமாக, மோடியை கலைஞர் கருணாநிதி பாராட்டியது தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியவுடன் அவர் ஒரு பதில றிக்கை விட்டார். அதாவது பேட்டியும் கொடுத்தார். அதில், 'நான் சொன்ன தகவல்களை திரித்து வெளியிட்டு விட்டது பத்திரிகை' என்றார். ஆனால் இதில் கோடிட்டுக் காட்ட வேண்டிய விடயம் என்னவென்றால், 'மோடி நல்ல மனிதர். திறமையானவர்' என்ற தன் வார்த்தைகளை கலைஞர் கருணாநிதி விடுத்த மறுப்பறிக்கையில் திரும்பப் பெறவில்லை.



தலைமைப் பண்பு' குறித்து கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர் அளித்த பதிலில், 'ராஜீவ் காந்தியுடன் பழகியது போல் ராகுல் காந்தியுடன் நான் நெருங்கிப் பழகவில்லை. அதனால் அதைப்பற்றி என்னால் சொல்ல முடியாது' என்று கூறியிருந்ததாக வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பேட்டி தமிழாக்கம் செய்து முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள பதிலில், 'ராகுல் தலைமைப் பண்பு உள்ளவரா இல்லையா என்பதை அலசி ஆராய்ந்து முடிவு கூறுகின்ற அளவிற்கு, இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைப் போல, என்னோடு ராகுல் காந்தி பழகியவர்

**இலங்கைத்தமிழர் பிரச்சினையால் காங்கிரஸுடன் கைகோர்ப்பது தடங்கலாகிவிடக்கூடாது என்பதை விட, கூட்டணி என்று வந்தால் காங்கிரஸைக்காட்டி தி.மு.க.விடம் அதிக தொகுதிகளை வாங்க வேண்டும் என்பதே விஜயகாந்தின் வியூகம்**

அதைவிட டிசம்பர் 21ஆம் திகதியன்று வெளிவந்த முரசொலியில் டைம்ஸ் ஒப் இந்தியாவிற்கு கருணாநிதி கொடுத்த பேட்டி அப்படியே தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பேட்டியில் சில புதிய கேள்விகளும், அதற்குப் பதில்களும் இருக்கின்றன. ஆனால் மோடி பற்றி ஏற்கனவே பாராட்டிக் கூறிய கருத்துகள் அடங்கிய பதில்கள் அனைத்தும் அச்சரம் பிசகாமல் அப்படியே தமிழாக்கம் செய்யப்பட்டு முரசொலியில் (தி.மு.க.வின் அதிகாரபூர்வ நாளேடு) வெளிவந்துள்ளது. பிறகு 'பேட்டி திரித்து வெளியிடப்பட்டது' என்று எதைச் சொல்கிறார் கலைஞர் கருணாநிதி என்பது அனைவருக்குமே புரியாமல் இருக்கிறது. நாம் அந்தப் பதில் முழுவதும் படித்துப் பார்த்தோம். அப்படி திரித்து வெளியிடப்பட்டுள்ள பதில் ஒன்றே ஒன்றுதான். அது ராகுல் காந்தி பற்றியது!

ராகுல் காந்தி பற்றி அப்படி என்ன பேட்டியில் சொல்லியிருக்கிறார் கருணாநிதி? 'ராகுல் காந்தியின் தலைமைப் பண்பு' ...

கிடையாது' என்று சொல்லியிருக்கிறார். சென்னைக்கு நான்கு முறை வந்தபோதும் தன்னைச் சந்திக்காத ராகுல்காந்தி பற்றி எப்படி நான் அறிந்திருக்க முடியும் என்ற மனக்குமுறலைக் கொட்டித் தீர்த்திருக்கிறார் கலைஞர் கருணாநிதி என்றே சொல்ல வேண்டும். ஆகவே, 'நான் ராகுலுடன் நெருங்கிப் பழகவில்லை' என்பது போன்று வந்திருந்த பேட்டி தவறு. 'அவர் என்னுடன் நெருங்கிப் பழகவில்லை' என்பது மட்டுமே உண்மை என்பதை முரசொலியில் வந்த 'தமிழாக்கப் பேட்டி' வெளிக்காட்டியுள்ளது. ராகுல் காந்தி பற்றி கலைஞர் கருணாநிதி சொன்னதுதான் தி.மு.க. தலைவர் பாணியில் திரித்து வெளியிடப்பட்டதே தவிர, மோடி பற்றிக் கூறிய வார்த்தைகள் அல்ல!

பா.ஜ.க. மோடியைப் பாராட்டியதோடு, தி.மு.க. பொதுக்குழுவின் வியூகம் விடைபெற்று விடவில்லை. பா.ஜ.க. வந்தால் சரி. அப்படியில்லாவிட்டால் மேலும் சில கட்சிகள் வந்தாலும் சேர்த்துக் கொள்வோம் என்று இன்னொரு 'அர்த்தமுள்ள' வியூக

மும் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் தி.மு.க.விற்கு முதலில் விஜயகாந்த் மீதும், பிறகு மோடி மீதும் ஏற்பட்டுள்ள மோகத்தின் அடையாளம் தான்! அ.தி.மு.க. தனித்துப் போட்டி என்று அறிவித்துள்ள நிலையில், தி.மு.க.வுக்கு விஜயகாந்த் மட்டும் இருந்தால் கூட போதும் என்பதே கலைஞர் கருணாநிதியின் எண்ணம். அதற்காகவே சில தினங்களுக்கு முன்பு அளித்த பேட்டி ஒன்றில், 'விஜயகாந்தின் வெள்ளை மனம் எனக்குப் பிடிக்கும்' என்று புகழ்ந்தார். ஆனால் காங்கிரஸின் பிடியில் இருக்கும் விஜயகாந்த் அதற்கு வேறு விதமாகப் பதில் சொன்னார். தன் மகனின் பட பூஜை விழாவில் பேசியபோது , 'கல்யாண மண்டபத்தை இடித்தவர்கள் தி.மு.க.வினர்' என்று விஜயகாந்த் கோபப்பட்டார். அவரைப் பொறுத்த மட்டில் காங்கிரஸைக் காட்டி தி.மு.க.விடம் அதிக சீட்டுகளைப் பெற வேண்டும் என்பதற்காகவே தி.மு.க. மீது கோபமாக இருப்பது போல் பேசினார். அதற்காகவே காங்கிரஸுக்கு வெற்றி வாய்ப்பை பெற்றுத்தர உதவியாக, டில்லி சட்டமன்றத் தேர்தலில் கூட தனித்துப் போட்டியிட்டார். அதிக தொகுதி வாங்க வேண்டும் என்பதே விஜயகாந்தின் இந்தக்கருத்துகளில் ஒளிந்து கிடந்த வியூகம்.

அந்த வியூகத்திற்குத்தான் இப்போது 'அங்குசம்' போட்டிருக்கிறது தி.மு.க. பொதுக்குழு. 'காங்கிரஸையோ, பா.ஜ.க.வையோ சேர்த்துக் கொண்டு என்னிடம் தொகுதிப் பேரம் பேச வராதே' என்பதும், 'மற்ற கட்சிகளைக் காட்டி என்னிடம் பேரம் பேச வேண்டாம். கூட்டணி வேண்டும் என்றால் என்னிடம் நேரடியாக வரலாம்' என்பது விஜயகாந்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பொதுக்குழுவின் மூலம் விடுத்துள்ள 'க்ளியர் மெசேஜ்'. அதனால்தான் மோடியைப் பாராட்டிய அதேபேட்டியில், 'விஜயகாந்த் தொடர்ந்து தன் கல்யாண மண்டபம் இடிக்கப்பட்டது குறித்துப் பேசி வருகிறார். அதற்காக அவர் 8 கோடி ரூபாய் நஷ்ட ஈடு அரசாங்கத்திடமிருந்து வாங்கியிருக்கிறார்' என்பதை கலைஞர் கருணாநிதி ஞாபகப்படுத்தியிருக்கிறார். கல்யாண மண்டப இடிப்பை தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் இன்றைக்கு காங்கிரஸ் போன்றே தி.மு.க.விடமிருந்து தே.மு.தி.க.வும் விலகி நிற்க நேரிடும் என்பதே இதன்

**பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வைக்கும் நம்பிக்கையில் இருக்கிறார் வைகோ. லோக்சபா தேர்தலுக்காக 10 தொகுதிகளுக்கான பட்டியலை பாரதிய ஜனதா தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் டில்லியில் கொடுத்து விட்டு வந்திருப்பதாகக் கூறுகிறார் அவர்**

அதைவிட ஒரு படி மேல் போய், 'தமிழர்களுக்கு காங்கிரஸ் என்ன துரோகம் செய்தது' என்று கூட கேள்வி எழுப்பினார். ஏன், 'என் தலைவன் பிரபாகரனே இறந்து விட்டான். இனி கொமன்வெல்த் மகாநாட்டில் இந்தியா கலந்து கொண்டால் என்ன? கலந்து கொள்ளாவிட்டால் என்ன?' என்று விதண்டாவாதம் செய்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினையால் காங்கிரஸுடன் கை கோர்ப்பது தடங்கலாகி விடக்கூடாது என்பதை விட, கூட்டணி என்று வந்தால், காங்கிரஸைக் காட்டி தி.மு.க.விடம் மூலம் விடுக்கப்பட்ட எச்சரிக்கை. அதேசமயத்தில், 'கம்யூனிஸ்டுகள் பற்றி நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை' என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார் கருணாநிதி. இன்றைய சூழ்நிலையில், தி.மு.க.வின் மனம் முதலில் 'தி.மு.க, பா.ஜ.க., தே.மு.தி.க.' கூட்டணிக்காக ஆளவட்டம் போடுகிறது. அப்படியில்லை யென்றால், 'தி.மு.க., தே.மு.தி.க.' கூட்டணி வந்தாலும் போதும் என்று கருதுகிறது. இந்த இரண்டுமே நடக்கவில்லையென்றாலும், தி.மு.க.வும் தற்போதுள்ள கூட்டணிக் கட்சிகளும் சேர்ந்து தேர்தலைச் சந்திப்பது- அதாவது கிட்டத்தட்ட தனித்துப் போட்டி! இந்த மூன்று வியூகங்களுக்கும் 'ஜன்னல்' வைத்து நிறைவுபெற்றுள்ளது தி.மு.க. பொதுக்குழு! இப்போதைக்கு கடைசி வியூகத்தைப் பலப்படுத்தும் வகையில் விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் டிசம்பர் 21ஆம் திகதி கருணாநிதியைச் சந்தித்து 'எங்கள் கட்சி உங்கள் கூட்டணியில் தொடரும்' என்று அறிவித்துவிட்டு வந்திருக்கிறார்.



## ஜனவரியில் புதிய கூட்டணி அறிவிப்பு- வைகோ!

அதே டிசம்பர் 15ஆம் திகதி சென்னைக்கு வெளியில் இருக்கும் ஈரோட்டில் (தந்தை பெரியார் பிறந்த மண்) மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர்நிலை செயற்திட்டக் குழுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு முதல் நாள்தான் அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ, டில்லி சென்று திரும்பினார். நேராக ஈரோட்டிற்குச் சென்று அக்கூட்டத்தில் பங்கேற்ற அவர், 'வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி. நான் அக்கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்கிடம் பேசிவிட்டு வந்து விட்டேன். பத்து தொகுதிகளுக்கான பட்டியலைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். ஜனவரி மாதத்தில் நல்ல

நாள் பார்த்து தேர்தல் கூட்டணி பற்றிய அறிவிப்பை பா.ஜ.க. வெளியிடும். மற்றவற்றை பெப்ரவரியில் கூட்டப்படும் பொதுக்குழுவில் பேசி முடிவு எடுப்போம்' என்று தன் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கு நம்பிக்கையூட்டியிருக்கிறார். ஆனால் வைகோவின் இந்தக் கூட்டம் நடைபெற்ற உடனேயே 'பா.ஜ.க. - ம.தி.மு.க.' கூட்டணி என்று பேச்சு எழுந்தது. பத்திரிகைகளில் செய்தியாகவும் வந்தது. அதைப் பார்த்த பா.ஜ.க. ஒரு வேலை செய்தது. தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்ற மறுநாள் சென்னையில் உள்ள பா.ஜ.க. அலுவலகத்தில் டில்லியில் உள்ள செய்தித் தொடர்பாளர் நிர்மலா சீத்தாராமன் பேசினார். 'நாங்கள் யாருடனும் கூட்டணியை முடிவு செய்யவில்லை. தி.மு.க.விடமிருந்து அழைப்பு வந்தால் பரிசீலிப்போம்' என்றார். அதே நாளில் டில்லியில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் சென்னையில் உள்ள இல.கணேசன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது 'அ.தி.மு.க.வுடன் எங்களுக்கு கூட்டணி இல்லை. காங்கிரஸை விட்டு தி.மு.க. வெளியே வந்தது மகிழ்ச்சி. ம.தி.மு.க.வுடன் சில நல்ல நண்பர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் அதிகாரபூர்வமாக எந்த பேச்சுவார்த்தையும் கூட்டணி பற்றி ம.தி.மு.க.வுடன் நடத்தவில்லை' என்றார்.

டில்லி செய்தித் தொடர்பாளர் சென்னையிலும், சென்னை பா.ஜ.க. தலைவர் டில்லியிலும் கொடுத்த இந்தப் பேட்டிகளுக்குப் பிறகுதான் மோடி பற்றிய பாராட்டுப் பேட்டியைக் கொடுத்தார் கலைஞர் கருணாநிதி. 'அ.தி.மு.க.- தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கவில்லை என்றால் நான் உங்களுடன் சேருகிறேன்' என்று பா.ஜ.க. விற்கு வைகோ சொன்ன சேதி இப்போது சங்கடத்தில் நெளிந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் 'பா.ஜ.க.- தி.மு.க. கூட்டணி' அமைந்தாலும் சரி, 'தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க. கூட்டணி' அமைந்தாலும் சரி, அதில் வைகோ சேருவது சிக்கலாகிவிடும். அதனால் மோடியை தி.மு.க. பாராட்டியதில் வைகோவும் டென்ஷனாகிப் போய் இருக்கிறார். இந்தச் சூழ்நிலையில், ஈரோடு ம.தி.மு.க.வின் உயர் நிலை செயற்திட்டக் குழுக் கூட்டத்தில் வைகோ சொன்னது அப்படியே நிலைத்து நிற்குமா அல்லது அதில் மாற்றம் வருமா என்பதை அக்கட்சியின் பெப்ரவரி பொதுக்குழுக் கூட்டத்தில்தான் பார்க்க வேண்டும்.

## 'காங்கிரஸும், தி.மு.க.வும் இணைபிரியாத தோழர்கள்' – அ.தி.மு.க. பொதுக்குழு!

தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் தங்கள் கூட்டங்களை நடத்தி முடித்த பிறகு, டிசம்பர் 19ஆம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்னிலையில் பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள். அவர்களில் பொதுப் பணித்துறை அமைச்சரான ஓ.பன்னீர்செல்வம், 'தமிழகத்தில் ஒரு காமடியன் இருக்கிறார். அதை விட பெரிய காமடியன் ஒருவரும் இருக்கிறார்.' என்று எதிர்க்கட்சி வரிசையில் உள்ள தலைவர்களைச் சாடினார். அதேபோல் இன்னொரு அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், 'எங்கள் டாஸ்மாக் கடைக்கு (மதுபானக்கடை) ரெகுலர் கஸ்டமர் ஒருவர் கிடைத்துள்ளார்' என்று கூறி முன்னாள் கூட்டணிக் கட்சித் தலைவர் ஒருவரை கடுமையாக விமர்சித்தார். அடுத்துப் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் 'இணைபிரியாத தோழர்கள்' பற்றிய அண்ணாவின் கதை ஒன்றை விளக்கிச் சொல்லி, 'காங்கிரஸும், தி.மு.க.வும் 2-ஜி அலைக்கற்றை ஊழலில் இணைபிரியாத தோழர்களாக இருந்தார்கள். இப்போது ஒருவருக்கொருவர் வெளியே வந்து உண்மைகளைச் சொல்ல ஆரம்பித்துள்ளார்கள்' என்று கூறி, இரு கட்சிகளையுமே வெளுத்து வாங்கினார். இப்படி தி.மு.க. மீதும், தே.மு.தி.க. மீதும் தாக்குதலை அ.தி.மு.க. பொதுக்குழு தொடுத்தாலும், இன்னொரு பக்கம் அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை விளக்கிப் பேசினார்கள். அதைவிட முக்கியமாக 'அம்மா (ஜெயலலிதா) பிரதமராக வேண்டும்' என்பதை பேச்சாளர்கள் அனைவரும் வலியுறுத்தத் தவறவில்லை. பொதுக்குழுவிற்குச் செல்லும் வழியெங்குமே 'பிரதமர்' என்று வாசகமிட்ட திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் குமாரின் டிஜிட்டல் பேனர்களைப் பார்க்க முடிந்தது. கட்அவுட்கள் அனைத்துமே 'ஜெயலலிதா பிரதமர்' என்பதை விளக்கும் வாசகங்கள் தாங்கியதாகவே அமைக்கப்பட்டிருந்தன. ஏறக்குறைய இரண்டரை வருடங்களாக 'ஜெயலலிதா பிரதமர்' என்ற கோஷம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவிக்கிடக்கிறது என்று சொன்னால் மிகவும் பொருத்தமாகவே இருக்கும்.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலை 'தி.மு.க. எதிர்ப்பு' என்பதை விட, 'காங்கிரஸ் எதிர்ப்பு' அதாவது மத்திய அரசு எதிர்ப்பு என்ற அடிப்படையில் சந்திக்க அ.தி.மு.க. விரும்புகிறது என்பதுதான் பொதுக்குழுவின் வெளிப்பாடு. ஏனென்றால் அந்த அளவிற்கு தமிழகத்தில் காங்கிரஸ் எதிர்ப்பு அலை வீசுகிறது. தி.மு.க.வை மையமாக வைத்து பிரசாரத்தில் இறங்கினால், அந்தக் கட்சி அ.தி.மு.க. ஆட்சி பற்றிய குறைகளை பட்டியலிட்டு பிரசாரம் செய்யும். அதைத் தவிர்த்து, 'மத்திய அரசு தமிழகத்திற்கு துரோகம் செய்கிறது. அதைப் போக்க எங்கள் அம்மாவை பிரதமராக்க வாக்களியுங்கள்' என்பதுதான் அ.தி.மு.க.வினரின் பிரசார வியூகம். அதைத்தான் அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும் தன் பேச்சில் முன் மொழிந்திருக்கிறார். அவர், 'தமிழகத்தை மத்திய அரசு வஞ்சிக்கிறது. நாம் வழி நடத்தும் ஆட்சி மத்தியில் இருந்தால் தான் தமிழகத்தின் நலன் காப்பாற்றப்படும். தமிழகத்திற்கு நல்லது நடக்க வேண்டும் என்றால் இப்போதுள்ள மத்திய அரசை தூக்கியெறிய வேண்டும். அதனால் 40க்கு 40 இடங்களில்

அ.தி.மு.க. வெற்றிபெற பாடுபடுங்கள்' என்று அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்களுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். இதற்கிடையில் ஏறக்குறைய 35க்கும் மேற்பட்ட பாராளுமன்றத் தொகுதிகளில் ஜெயலலிதா போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை வைத்து அ.தி.மு.க. வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்!

அ.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் அக்கட்சியின் சார்பில் ஜெயலலிதா பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போகிறாரா அல்லது '40 தொகுதியிலும் என் கட்சிக்கு வாக்களியுங்கள். நான் சொல்லும் ஆட்சி மத்தியில் அமையும்' என்று கூறப் போகிறாரா என்பது தேர்தல் பந்தயத்தின் இறுதிக் கட்டத்தில்தான் தெரியும். தானே பிரதமர் வேட்பாளர் என்று கூறி, பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவே போட்டியிட்டால், தமிழக அரசியல் களம் 'பிரதமர் வேட்பாளரை' மையப்படுத்தி பிரசாரம் சூடுபிடிக்கும். அப்படியில்லாமல், 'அ.தி.மு.க. விற்கு அதிக இடங்களைக் கொடுங்கள்' என்று பிரசாரம் செய்தால், அ.தி.மு.க.ஆட்சிக்கு எதிரான விஷயங்களை தி.மு.க. கையிலெடுக்கும். இதெல்லாம் ஒரு புறமிருக்க, பொதுக்குழு முடிவுகள் அ.தி.மு.க. தனிப் பெருங்கட்சியாக நிற்கவே விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறது. ஆகவே 40 தொகுதிகளில் 35 தொகுதிகளிலாவது அ.தி.மு.க. போட்டியிட வேண்டும் என்ற விருப்பம் அக்கட்சியின் தலைமையிடம் மேலோங்கி நிற்கிறது. ஏற்கனவே 2004 பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சி 33 இடங்க ளில் போட்டியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் கட்சியின் நலன் கருதி கூட்டணி அமைக் கும் முடிவை எடுக்க பொதுச் செயலா ளருக்கு (ஜெயலலிதாவுக்கு) அதிகாரமும் வழங்கியிருக்கிறது அ.தி. மு.க. பொதுக்குழு. அந்த அதிகாரத்தை கம்யூனிஸ்டுகளைத் தக்க வைத்துக் கொள்ள மட்டும் ஜெயலலிதா பயன்படுத்தப் போகிறாரா அல்லது வேறு கட்சிகளை (பா.ஜ.க, தே.மு.தி.க) எடுக்கவும் பயன்படுத்துவாரா என்பது இனிமேல் ஜெட் வேகத்தில் நகரப்போகும் கூட்டணிக் காட்சிகளைப் பொறுத்து அமையும். ஆனால் அதிக தொகுதிகளில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் தி.மு.க. விற்கு இல்லையென்பதால், அக்கட்சியிடம் கூட்டணிக்குப் பிரித்துக் கொடு க்க 20க்கும் மேற்பட்ட தொகுதிகள் கைவசம் இருக்கின்றன. அதேசமயத்தில் அ.தி.மு.க. இந்த இரண்டரை ஆண்டுகளாக செய்து வரும் பிரசாரத்தின் விளைவாக, 'அதிக இடங்களில் போட்டியிடப்போகும் கட்சி' என்ற இமேஜ் உருவாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில், அக்கட்சியிடம் கூட்டணிக் கட்சிகளுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டிய தொகுதிகள் குறைவாகவே இருக்கும். எல்லாக் கட்சிகளிலுமே இனி தேர்தல் கொண்டாட்டம்தான். இறுதியில் 'திண்டாட்டம்' தி.மு.க.வுக்கா, அ.தி.மு.க.வுக்கா என்பது கூட்டணிக் காட்சிகள் அரங்கேறி முடிந்த பிறகுதான் அம்பலத்திற்கு வரும்! ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

காணப்படுகின்றது. பாலின் அளவையும் குறைக்கின்றது. வளியில் $CO_2$ அளவை அதிகரிக்கின்றது. விவசாய நிலங்களில் பீடைகளாக எமக்குத் தேவையான பயிருடன் போட்டி போட்டு வளருவதால் விளைச்சலின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தி பொருளாதாரப் பிரச்சினைக்குக் காரணமாக அமைகின்றது.

பீடைகள் என்பது குறித்த பிரதேசத்தில் தேவையற்ற முறையில் அளவுக்கு அதிகமாக பெருகிக் காணப்படும் உயிரினம் ஆகும். இப்பீடைகளைக் கட்டுப்படுத்த பௌதீக கட்டுப்பாடு, இரசாயன கட்டுப்பாடு, உயிரியல் கட்டுப்பாடு முறைகளைப் பயன்படுத்துவார்கள். இதனுள் சிறந்தது பக்க விளைவு அற்றது, செலவு குறைந்த முறை, சூழலை மாசடையச் செய்வதில்லை எனப்பார்த்தால் அது உயிரியல் கட்டுப்பாட்டு முறையே ஆகும். மல்லிக்கிழங்குப் புல் எனப்படும் இத் தாவரம் 1.5 மீற்றர் வரை வளரக் கூடியது ஆகும்.

பௌதீக கட்டுப்பாட்டு முறையில் இப்பீடையைக் கட்டுப்படுத்துவதற்கு, இச்செடியைப் வேருடன் பிடுங்கி மண்ணினுள் புதைக்க வேண்டும். இதனால் இது இளந்தளிர் பசளையாக மாறி தாவரங்களுக்கு பயன்படுகின்றது. இச்செடியை பூப்பதற்கு முன்பே வேருடன் பிடுங்க வேண்டும். விவசாய நடவடிக்கையின் போது நிலத்தை நன்கு உழுது களைகள் இல்லாமல் பண்படுத்தும் போதும் பார்த்தீனியம் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.


இரசாயனக் கட்டுப்பாட்டு முறை சூழலுக்கு உகந்தது அல்ல. எனினும், வினைத்திறன் மிகுந்த முறையாகும். கறியுப்பு ஒரு கிலோவுடன் சவர்க்கார எண்ணெய் ஒரு லீற்றரையும் பத்துலீற்றர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மூன்று தினங்களில் செடி கருகி அழிந்து விடும்.

கமக்கின் என்னும் சர்வ களைநாசினியை 2L - 600L நீரில் கலந்து தெளிக்க வேண்டும். உயிரியல் கட்டுப்பாடு என்பது ஒரு உயிரினத்தைக் வளர்த்து அதன் மூலம் மற்ற உயிரினத்தை கட்டுப்படுத்துவதாகும். கேசியா என்னும் தாவரத்தை வளர்த்தல், அழடில்லான் இரண்டிகம் என்னும் செடியை வளர்த்தல், மெக்சிகன் வண்டை பரவவிடுதல், பூஞ்சான் நூற்புழுக்களை பரவ விடுதல் போன்ற செயற்பாடுகளால் இக்கொடிய செடியினைப் பரவவிடாமல் கட்டுப்படுத்தலாம்.

இலங்கையில் வடகிழக்கு பகுதியில் இச்செடி வேகமாகப் பரவி வருவதால் வடமாகாண சபையின் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் இக்கொடிய செடியைப் பரவாது தடுப்பதற்கு பல செயற்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். சூழலைப் பற்றிய நற்சிந்தனை கொண்ட இச்சூழலியலாளர் முயற்சி வெற்றியடைய வேண்டும். பார்த்தினியம் இப்பாரைவிட்டு அகல வேண்டும். ■

நினைவுப் பரவல்

## கண் மூடிய ஊதாப்பூ



ச.இராகவன்

# புஷ்பா தங்கதுரை (1931-2013)

மர்ம நாவல்களை வாசிப்பதில் தீராத மோகங்கொண்டவர்களால் என்றென்றைக்கும் மறக்க முடியாதவர் புஷ்பாதங்கதுரை. சாதாரண மர்ம நாவல்களைக் கூட ஒருவிதமான கிறக்கந்தரும் மொழிநடையில் கலைத்துவம் குன்றாமல் எழுதிய ஒரேயொரு வெகுசன எழுத்தாளர் இவர் மட்டுந்தான். சுஜாதாவின் மர்ம நாவல்களில் கூட இல்லாத வசீகரம் புஷ்பாதங்கதுரையின் மர்மநாவல்களில் விரவிக்கிடக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இவரோடு சமகாலத்தில் எழுதிக் கொண்டிருந்த ராஜேந்திரகுமார், சுஜாதா, தமிழ்வாணன் இன்றும் எழுதிக் கொண்டிருக்கும் ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், சுபா, தேவிபாலா ஆகிய மர்மக்கதை எழுத்தாளர்களின் கதைகளோடு ஒப்பிடும்போது இவரது கதைகள் நளினமும் இயல்பும் கொண்டவை. கடைசிவரைக்கும் வாசகனால் ஊகிக்கமுடியாத மர்மத்தை எதிர்பாரா திருப்பங்களுடன் துலங்க வைப்பதில் புஷ்பாதங்கதுரையின் கதைப்பாணி வெகு தனித்துவமானதென்றுதான் சொல்லவேண்டும்.

இவர் ஸ்ரீவேணுகோபாலன் என்ற தனது இயற்பெயரில் ஒரு தீவிரமான இலக்கியவாதியாகவே அறிமுகமானார். சிற்றிதழ்களின் மூலமாகவே இவர் தனது படைப்பாக்க முயற்சியைத் தொடங்கினார். எம்.வி.வெங்கட்ராம், ந.சிதம்பர சுப்ரமணியன், லா.சரா, மௌனி, புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கு.ப.ராஜகோபாலன் போன்ற படைப்பு மேதாவிகள் எழுதிக் கொண்டிருந்த 'மணிக்கொடி' இதழில் தான் இவரும் எழுதத் தொடங்கினார். அதுவரை அஞ்சல்துறையில் ஆற்றிவந்த பணியைத் துறந்துவிட்ட நிலையில் தான் புஷ்பாதங்கதுரை என்ற முழுநேர வணிகமயமான இலக்கியவாதியாக மாறினார். எழுத்தின் மூலமாக மட்டுமே பணம் சம்பாதித்தாகவேண்டுமென்ற நிலையில் இதைத்தவிர அவருக்கு வேறு வழியேதுமிருக்கவில்லை.

தமிழில் 'வெட்டுப்புலி', 'ஆண்பால் பெண்பால்' போன்ற புதினங்களை எழுதிக் கவனிப்புக்குள்ளான தமிழ்மகன் புஷ்பாதங்கதுரையைப் பற்றி 'ஒரு ஊதாப்பூ கண்மூடியது' என்ற தலைப்பில் எழுதிய அஞ்சலிக் குறிப்பில், 'சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் புஷ்பாதங்கதுரை, முன்னர் எழுதிய சிறுகதையில் ஒரு காட்சி. கடையில் ஒருவர் சோடா குடித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தார், அவருடைய நீண்டநாள் நண்பர் நின்றுகொண்டிருப்பார். 'அட!' என ஆச்சரியமடைந்து இருவரும் பேச ஆரம்பிப்பார்கள். பாதிப்பேச்சின் நடுவே, 'ஏவ்' என்று எழுதியிருப்பார் புஷ்பா தங்க துரை. கதைவிவரிப்பில் இப்படிச் சின்னச் சின்னக்கவனங்கள் இருக்கும். அது அவருடைய கடைசி எழுத்துவரை இருந்தது. 'கமலி நான் உன்னைக் ...', 'ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது' போன்ற புதுமையான தலைப்புப் பிரயோகங்கள் அன்றைய இளைஞர்களுக்கு ஈர்ப்பாக இருந்தன. அவருடைய சில கதைகள் சினிமாவாகின; பல கதைகளின் காட்சிகள் அனுமதி இல்லாமலேயே சினிமாவில் பயன்படுத்தப்பட்டன. அவர் எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சிவபெருமானா, சிவப்பு விளக்குச் சிங்காரியா என அவர் கவலைப்பட்டது இல்லை. 'பத்திரிகையில் எதைப்பற்றி எழுதச்

சொன்னாலும் எழுதித்தரவேண்டியது தன்கடமை' என்றே இருந்தார். நிறைய ஆலயங்களைப்பற்றி எழுதினார். புஷ்பாதங்கதுரையின் படைப்புகளில் 'திருவரங்கன் உலா' என்ற சரித்திரப் புனைவு மிகவும் சுவாரஸ்யமானது. 14ஆம் நூற்றாண்டின் இஸ்லாமிய மன்னர்கள் கோயிலில் புகுந்து ஆபரணங்களைக் கொள்ளையடிக்க எத்தனித்தபோது, வைணவர்கள் திருவரங்கத்தின் உற்சுவர் விக்கிரகத்தைப் பாதுகாக்கப் போராடுகிறார்கள். பல்வேறு வைணவத்தலங்களுக்கு மதுரை, நெல்லை... என ஊர் ஊராகத் தூக்கிக்கொண்டு சென்று பாதுகாக்கிறார்கள். திருப்பதியிலும் சில காலம் அந்த விக்கிரகம் பாதுகாக்கப்படுகிறது. நெருக்கடி முடிந்து சிலை கோயிலுக்கு வந்து சேர்வது தான் அந்தச் சரித்திர நாவலின் பின்னணி. வீட்டில் பல இலட்சம் புத்தகங்களைச்சேகரித்து வைத்திருந்த அவர், சிங்கப்பூரிலுள்ள பொதுநூலகத்தை தன் 80ஆவது வயதில் கூட போய்ப் பார்த்துவிட்டு வந்தார்'' என தமிழ் மகன் எழுதிச் செல்கிறார்.

புஷ்பாதங்கதுரை ஸ்ரீவேணுகோபாலன் என்ற தனது சொந்தப் பெயரில் எழுதிய 'திருவரங்கன் உலா' அவரது படைப்புகளிலேயே உச்சமானது எனலாம். இப்புதினத்தை எழுதியமைக்காக இவரைச் ஸ்ரீரங்கம் கோயிலுக்கு அழைத்து யானையிலேற்றி ஊர்வலமாகக் கொண்டு சென்று ஆலய நிர்வாகத்தினர் கௌரவப்படுத்தியிருந்தனர். 'திருவரங்கன் உலா'வைத் தவிர இவரது 'சுவர்ண முகி', 'மோகினி திருக்கோலம்', 'மதுரா விஜயம்' எனும் வரலாற்றுப் புதினங்களும் தீவிர இலக்கியவாசகர்கள் மத்தியில் பரவலான கவனிப்பைப் பெற்றுள்ளன.

எழுத்தாளர் ஜெயகாந்தன் புதுச்செருப்புக்கடிக்கும் என்றொரு படத்தை எடுத்தார். ஆனால், அதுவெளிவரவில்லை. அத்திரைப்படத்திற்காக சரணமே இல்லாமல் 'சித்திரப்பூச்சேலை' எனத்தொடங்கும் பாடலொன்றையும் ஜெயகாந்தன் எழுதினார். எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் குரலில் வெளிவந்த அத்திரையிசைப் பாடல் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. ஜெயகாந்தனைப் போலவே புஷ்பாதங்கதுரையும் தனது 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது' எனும் சமூக நாவல் திரைப்படமாக எடுக்கப்பட்ட போது அத்திரைப்படத்திற்காக இருபாடல்களை எழுதினார். அதிலொன்றுதான் 'நல்லமனம் வாழ்க, நாடுபோற்ற வாழ்க' என்றபாடல். மற்றொன்று 'ஆண்டவனில்லா உலகமெது' என்ற பாடல். கமல்ஹாசன் - சுஜாதா ஆகியோர் இணைந்து நடித்திருந்த இத்திரைப்படத்தில் இவர் எழுதிய பாடல்கள் இரண்டுமே கே.ஜே. ஜேசுதாஸ் குரலில் வெளிவந்து பெரு வெற்றி பெற்றன. இதைத்தவிர அந்த ஜூன் 16 ஆம் நாள் என்ற தமது கதை திரைப்படமாக்கப்பட்ட போது அவரே அதற்கான கதைவசனத்தையும் திரைக்கதையையும் எழுதியிருந்தார். மேலும் நந்தா என் நிலா என்ற இவரது கதையும் திரைப்படமாக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 'பெண் ஒரு ஜீவநதி', 'நான் குடும்பத்து ஸ்ரார்', 'ஊரார்' ஆகிய இவரது கதைகள் தொலைக்காட்சித் தொடர்களாகவும் வந்து கவனிப்பைப் பெற்றிருந்தன.

மாத நாவல்களுக்கான கலாசாரம் மேலோங்கியிருந்த காலப்பகுதியில் புஷ்பாதங்கதுரை 'ஊதாப்பூ' எனும் மாதநாவலுக்கான இதழைச் சொந்தமாக வெளியிட ஆரம்பித்தார். மாதமொன்றிற்கு இவ்விதழில் 50000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின. அக்காலப்பகுதியில் ஏற்பட்ட நியூஸ் பிரிண்ட் தட்டுப்பாட்டினாலும் நிர்வகிப்பதற்குப் பொருத்தமான உதவியாளர் கிடைக்காமையாலும் 15 மாதங்களில் 'ஊதாப்பூ' நின்று விட்டது.

ஒரு தீவிரமான வாசகராகவும், நூல்சேகரிப்பாளராகவும் புஷ்பாதங்கதுரை இறுதிவரை திகழ்ந்திருந்தார். தமிழ், ஆங்கில நூல்கள் மட்டுமன்றி சமஸ்கிருத, பிரெஞ்ச் நூல்களும் இவரது சேகரிப்பிலிருந்தன. இதைத்தவிர ஆன்மீக நூல்களும், மாவட்டத்தகவல் களஞ்சியங்களும் (Gazetteer) கூட சேகரிப்பிலிருந்தன. தனது சேகரிப்பிலிருந்த எல்லா நூல்களையும் இவர் முறைப்படி பட்டியலிட்டுப் பேணும் பழக்கமுள்ளவராக இருந்தார்.

'மோகமுள்', 'பார்த்தால் பசி ஏறும்', 'மோகினி டி.வி.', 'காலையில் மாலா மாலையில் நீலா', 'அனிதா ஐந்தாவது', 'மேலே வானம் கீழே வசந்தி', 'நாளை இரவு நடக்கும்', 'வனிதா வா நீ', 'நீலா நீலா ஓடிவா', 'சுவைத்தால் சொர்க்கம்', 'ஒருவலை ஒரு மான் ஒருசிலை', 'இரவுப்பறவைகள்', 'பத்துக்கு முன்னால் ஆ...', 'நீ - நான்-நிலா', 'ஒரு ஊதாப்பூ கண்சிமிட்டுகிறது'; 'கடலுக்குள் ஜூலி', 'சிவப்பு விளக்கு எரிகிறது', 'அமைதியில்லா என்மனமே', 'துள்ளுவதோ இளமை', 'சரிதா 10 சரிதா', 'தென்மேற்குப் பருவம்', 'என்பெயர் கமலா', போன்றவை புஷ்பாதங்கதுரையின் பரவலான கவனிப்பைப்பெற்ற சில துப்பறியும் நாவல்களாகும். சுஜாதாவின் துப்பறியும் நாவல்களில் கணேஷ்-வசந் வருவதைப் போல புஷ்பாதங்கதுரையின் துப்பறியும் கதைகளில் துப்பறியும் துளசிங்கம் வந்து துப்புத்துலக்குவார். அவர் விசாரணை மேற்கொள்ளும் பாணி தனித்துவமாகவும் வெகு இயல்பாகவும் தர்க்கரீதியாகவும் அமைந்திருக்கும்.

எழுத்தாளரும் திரைக்கலை ஆர்வலருமான விட்டல்ராவ் மூன்று தொகுதிகளாகத் தொகுத்த இந்த நூற்றாண்டு சிறுகதைகள் தொகுப்பில் இவரது 'ஒரு பயணத்தின் முடிவு' எனும் சிறுகதையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

10.11.2013 ஞாயிற்றுக்கிழமை மாரடைப்பால் காலமான புஷ்பாதங்கதுரைக்கு வயது 82. இறுதிவரை திருமணம் செய்துகொள்ளாமல் ஒரு பிரமச்சாரியாகவே வாழ்ந்திருந்தார். தனது வசீகரமான, இளமைதுள்ளும் படைப்புகளால் இருவேறு தலைமுறைகளைப் பாதித்து வந்திருந்த இந்த ஊதாப்பூ இனிக்கண்சிமிட்டாது. ■

நினைவுப் பரவல்



# உரைப்பயணி பெரியார்தாசன்

முர்.ஜீவானந்தம்

தமிழ்ச் சூழலில் ஒவ்வொரு காலத்திலும் வித்தியாசமான ஆளுமை மனிதர்கள் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். இந்த மரபுத் தொடர்ச்சியில் பேராசிரியராகவும் உளசீர்மைப்படுத்துனராகவும், கலைஞராகவும், மேடைப்பேச்சாளராகவும் பன்முக அடையாளங்களுடன் இயங்கி வந்தவர் பெரியார்தாசன். இவர் திராவிட இயக்க மரபில் தளமாற்றம் பெற்ற முக்கியமான ஆளுமைகளுள் தனித்துவமானவர். இவர் தனது 63ஆவது வயதில் அண்மையில் சென்னையில் காலமானார்.


பெரியார்தாசன் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 38 ஆண்டுகள் தத்துவவியல் துறையில் உளவியல் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கௌரவ பேராசிரியராகவும் பணியாற்றியவர். தற்கொலை செய்யும் எண்ணம் கொண்ட 1000 பேருக்கு மேற்பட்டோரை உளச்சீர்மைப்படுத்தல் மூலமாக அதில் இருந்து மாற்றியவர். இதற்காக அமெரிக்காவின் நியூயோர்க்கில் 'சைக்கோ மெட்ரிக்' விருதுபெற்றவர்.

பெரியார்தாசன் பேராசிரியர் பதவி நிலைக்கு அப்பால் தமிழகம் முழுக்க பகுத்தறிவுப் பிரசாரம், நாத்திக பிரசாரம், சாதி எதிர்ப்புப் பிரசாரம் ஆகியவற்றை தொடர்ச்சியாக மேற்கொண்டவர். இவர் எந்த நிறுவனங்களுக்குள்ளும் கட்சிகளுக்குள்ளும் இலகுவாக அகப்படமாட்டார். ஆனால், பெரியார் சிந்தனை வழிநின்று இயங்கும் ஆற்றலால் அனைவரையும் ஒன்றிணைத்து வந்தார். இதுவே இவரது பலமான அம்சமாகவும் அமைந்திருந்தது. இவரது மேடைப்பேச்சுக்கு பரவலான வெகுஜன ஆதரவும், வரவேற்பும் இருந்து வந்தது. இவர் மணிக்கணக்கில் சமூகப் பிரச்சினைகளை வெவ்வேறு விதமாக, அறிவு பூர்வமாக, தர்க்க ரீதியாக அலசிப்பேசுவதில் கெட்டிக்காரன்.

பெரியார்தாசனின் குரல் வழமையான திராவிட இயக்க மேடைப்பாணியில் இருந்து விலகிய எளிமையான 'சென்னைத் தமிழ்'ப் பேச்சாக இருக்கும். அது முழுவதும் நகைச்சுவையும் கலந்து வெளிப்படும். ஒரு சாதாரண பாமரரின் குரலைப் போலவே இவரது குரல் அமைந்திருக்கும். இதனால் மேடைப்பேச்சில் பெரியார்தாசன் குரல் எப்போதும் தனித்துவமாகவும் வித்தியாசமானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் விளங்கும். சிந்தனைகளைக் கிளறி மனவெழுச்சிகளை, சுயபரிசீலனைகளை ஏற்படுத்துவதில் இவர் அற்புதமான ஆளுமையாகவே இருந்துள் ளார். இவரது மேடைப்பேச்சு - உரைகள் தனித்துவமான சிந்தனை வீச்சு என்றுதான் கூறலாம்.

காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி கைது செய்யப்பட்டதையொட்டி நடைபெற்ற கூட்டங்கள், சேது சமுத்திரத் திட்டங்களுக்கு எதிராக வேதாந்தி கலைஞர் கருணாநிதியின் தலைக்கு விலை வைத்ததைக் கண்டித்து நடந்த கூட்டங்கள் என மக்கள் கலை, இலக்கிய மேடைகளில் பெரியார்தாசனின் பேச்சுக்கு மக்களிடையே பரவலான எதிர்பார்ப்பு இருந்தது. இதைவிட ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டங்களிலும் கலந்துகொண்டு சிறப்புரைகள் நிகழ்த்தி வந்துள்ளார். ஈழத்தமிழர் இயக்கங்கள் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்த காலத்தில் பல்வேறு இயக்க உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழகி ஆதரவு கொடுத்து வந்துள்ளார். மேலும் அரசியல் தத்துவ வகுப்புகளும் எடுத்துவந்துள்ளார். ஈழத்தமிழர்களின் உணர்வுகளுடன் தன்னை எப்போதும் ஐக்கியப்படுத்தி வந்தவர்.

தமிழின் பக்தி இயக்கங்கள் தொடங்கி சுப்ரபாதம் வரை பாடிக்காட்டி



விமர்சனம் செய்வார். வெறுமனே தொழில்முறைப்பேச்சாளர் என்றில்லாமல் பெரியார், அம்பேத்கர் குறித்து ஆழமாக, விசாலமான படிப்புக் கொண்டவர். இதனால் தமிழ் நாட்டில் சமூக அசைவியக்கத்தை இவர்களது சிந்தனை வழிநின்று விளக்கி வந்தவர்.சுயமான சமூகப்பார்வையை உருவாக்க முயற்சிசெய்தவர். பகுத்தறிவுப்பிரசாரம், நாத்திகப் பிரசாரம், சாதி எதிர்ப்புப்போராட்டம், ஈழத் தமிழ்த்தேசியப் போராட்டம் முதலானவற்றில் கலந்து கொண்டு வெளிப்படுத்திய இவரது சிந்தனைகள் கருத்தியல் போராட்டத்திற்கான ஆயுதங்களாக வெளிப்பட்டுள்ளன.

பெரியார்தாசன் பௌத்தம் குறித்து விரிவான தேடலும் வாசிப்பும் கொண்டவர். அம்பேத்கரின் 'பௌத்தமும் தர்மமும்' என்னும் நூலை தமிழில் மொழி பெயர்த்தவர். இதைவிட பௌத்தம் குறித்தும் அம்பேத்கர் குறித்தும் பல்வேறு தலித் இயக்க மேடைகளில் கலந்துகொண்டு கருத்துப் பரப்புரை செய்த பெருமையும் இவருக்குண்டு. இந்து மதத்தின் தத்துவம் என்று முன்வைக்கப்படும், 'சார்வாகம்' போன்ற பொருள் முதல்வாத கருத்தியல்களில் இருந்து எப்படி உருவாக்கப்பட்டது என்பது குறித்த இவரது பேச்சு மிக முக்கியமானது. இது பின்னர் சிறு வெளியீடாகவும் வெளி வந்துள்ளது.

பெரியார் இயக்கக் கூட்டங்களில், முற்போக்கு இடதுசாரிக் கூட்டங்களில் சிறந்த பேச்சாளராக அறிமுகமான பெரியார்தாசனை தமிழகம் முழுவதும் அடையாளப்படுத்திக் கொண்டு சேர்த்தது இயக்குநர் பாரதிராஜாவின் 'கருத்தம்மா' எனும் படம். இந்தப் படத்தில் இவர் அறிமுகமாகி சிறந்த நடிகராகவும் கொண்டாடப்பட்டார். பின்னர் இவருக்கான அடையாளமாக கருத்தம்மா புகழ் பெரியார்தாசன் என்ற அறிமுகமும் கிடைத்தது. இது இவரை தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் கொண்டு சேர்த்தது. இவர் தொடர்ந்து ஆனந்தம், ஐயா, காதல் தினம் முதலான பல தமிழ்ப் படங்களிலும் நடித்துவந்துள்ளார்.

பெரியார்தாசனின் இயற்பெயர் சேஷாசலம் என்பதாகும். இதுபின்னர் சித்தார்த்தன், அப்துல்லா போன்ற பெயர்களையும் தாங்கியுள்ளது. இவர் பௌத்தவாதியாகவும் குறிப்பிட்ட காலம் வாழ்ந்துள்ளார். இறுதியில் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியுள்ளார். இவரது ஆளுமை என்பது பல்வேறு மதவியல் சிந்தனை வழங்களின் தாக்கத்துக்குட்பட்டதாக அமைந்துள்ளது. பெரியாரியம், நாத்திகம், அம்பேத்கரியம், பௌத்தம், இஸ்லாம் முதலானவற்றின் இணைவில் தான் பெரியார் வைத்து நாம் புரிந்துகொள்ளவேண்டும். இதைவிட பல்வேறு முரண்கள், நலன்கள் மோது கையின் விசைப்படுத்தலுக்கும் உள்ளாகி வந்துள்ளார். இதனால் பல்வேறு விமர்சனங்களுக்கும் தாக்குதல்களுக்கும் உட்பட்டுள்ளார். இவை தனியாக ஆராயப்பட வேண்டும்.

இவர் சித்தார்த்தன், அப்துல்லா என்று தனது அடையாளங்களை மாற்றிக்கொண்டாலும் பெரியார்தாசன் என்கிற அடையாளமே இறுதி வரை இவருக்கு நிலைத்து வந்தது. பெரியார்தாசன் என்பவர் யார்? என்று அறிய விரும்பும் எவரும் இன்று இணையத்தில் இவரது பெயரை வைத்து தேடினால் நூற்றுக் கணக்கான உரைகள் - பேச்சுகள் கொட்டும். காலம் முழுவதும் உரைகளோடு பயணித்த ஒருவரின் அடையாளம் என்பது அவரது உரைகள் தானே. இந்த உரைகள் பெரியார் தாசனை தொடர்ந்து நமக்கு அடையாளம் காட்டிக்கொண்டிருக்கும். ■

# தொக்கிய விளைவுகளற்ற மதுபானம்



அறிவியல் களரி

தலையைப் பொத்திக்கொண்டு வருவார்கள். ''தலை விண் விண் என்று கிடக்கு'' என்பார்கள். ''நிறைய வேலைகள் கிடக்கு ஒண்டும் செய்ய முடியவில்லை. தலையிடியும் அம்மலும் பொறுக்க முடியாது'' எனவும் சொல்வார்கள்.

அதைத் தடுக்க ஆலோசனை கூறினால், 'நாளை முதல் குடிக்கமாட்டேன். இது சத்தியமடி தங்கம்..' எனத் தலைமேல் கை வைக்காத குறையாகச் சொல்வார்கள். ஆனால் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி கதைதான்.

பிரச்சினை ஏற்படும் போது தலையில் கை வைத்து கம்மென்றிருப்பார்கள். போத்தலைக் கண்டுவிட்டால் ''குடித்து குடலழுகி ரெண்டு நாளில்


செத்துப் போவாய் என்று சொன்ன மருத்துவன்

நேற்றே இறந்து போனான்

சாவுக்கு பயமில்லை, சாத்திரங்கள் ஏதுமில்லை

இன்றிருப்போர் நாளையில்லை என்றே குடிக்கிறோம்''

என்று ஒரு கவிஞர் இணையத்தில் சொன்னது போலப் பாடி, நல்லது சொன்னவனையே கிண்டலடிப்பார்கள். மறுநாள் மீண்டும் தலைப்பாரம், தலையிடிப் பிரச்சினைதான்.



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

### மதுவின் தொக்கிய விளைவுகள்

ஆனால், மதுபானத்தின் இந்தத் தொக்கிய விளைவுப் பிரச்சினையானது முடாக் குடியர்களுக்கானது மட்டுமல்ல. நண்பர்களின் ஒன்றுகூடல், பிறந்தநாள் விழா, கிறிஸ்மஸ் கொண்டாட்டம் போன்றவற்றில் மது அருந்தியவர்களுக்கும் ஏற்படுவதுண்டு.

போதையில் மிதந்ததற்கு மறுநாள் ஏற்படும் இத்தகைய வேண்டாத விளைவுகள் ஆளுக்காள் மாறுபடும். பொதுவாக களைப்பு, தாகம், தலையிடி, தசைப்பிடிப்பு, ஓங்காளம், வாந்தி, வயிற்று வலி, தலைப்பாரம், தலைச்சுற்று போன்றவையாகலாம். அல்லது வெளிச்சம், சத்தம் ஆகியவற்றைப் பார்க்கும்போதும் கேட்கும்போதும் எரிச்சலுறலாம். இருதயம் வேகமாகத் துடிப்பது, கண் சிவத்தல், தடுமாற்றம், மனதை ஒருமுகப்படுத்துதலில் சிரமம் போன்ற அறிகுறிகளாகவும் இருக்கலாம். இவற்றால் மனப் பதற்றம், எரிச்சலுறுதல், சினம் போன்றவை தோன்றும்.

தொக்கிய விளைவுகள் ஏன் ஏற்படுகின்றன? பல காரணங்கள் உள்ளன. மது சேதனமுறும்போது உடலில் தோன்றும் acetaldehyde என்ற நச்சுப்பொருள் ஒரு காரணமாகும். நோயெதிர்ப்புத் தொகுதியில் ஏற்படும் மாற்றங்கள், குளுக்கோஸ் சேதனமடைவதில் பிரச்சினை, உடலில் நீர் வரட்சி, புரஸ்ரோகிளன்டின் தொகுக்கப்படுவதில் சிக்கல், இருதயத்தின் அதிகரித்த செயற்பாடு, தூக்கக் குழப்பங்கள், குருதிக் குழாய்கள் விரிவடைதல், ஊட்டச்சத்துக் குறைபாடு எனப் பலவாகும்.

இவ் அறிகுறிகள் போதை தணியும் போதே வெளிப்படும். பொதுவாக

அதிக மது அருந்தி போதையில் மிதந்ததற்கு மறுநாள் காலையில் தோன்றும்.

மதுபானத்தின் தொக்கிய விளைவுகளானவை பாதிப்புற்றவருக்கு எரிச்சல் அளிப்பதாக இருந்தாலும், பார்த்திருப்பவர்களுக்கு கிண்டலடிப்பதற்கும் நகைத்து மகிழ்வதற்கும் ஏற்ற சுவாரஸ்யமான சம்பவங்களையும் கொண்டிருக்கும். Hang over என்ற ஆங்கிலப்படம் மிகவும் விரும்பிப் பார்க்கப்பட்டதனால் Hang over 1, Hang over 2 என குட்டிகளை ஈன்று கொண்டிருக்கிறது.

தமிழில் மதுபானக் கடை வந்தது. அது தொக்கிய விளைவைவிட மது பானக் கடையில் நித்தம் நடக்கும் சம்பவங்களையே சொன்னது.

மதுபானம் அதை அருந்திப் பழகியவர்களுக்கு இனியது, சுகம் கொடுப்பது, கவலைகளை மறக்கச் செய்து தடையற்ற மனவெளியில் சிறகடிக்கச் செய்வதாக இருக்கிறது. முக்கிய பிரச்சினையாக இருப்பது அதைத் தொடரும் இத்தகைய தொக்கிய விளைவுகள்தாம். அவ்வாறான தொக்கிய விளைவற்ற மதுபானம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டால் அது குடியர்களுக்கு கண்கண்ட தெய்வமாகிவிடும். அதிலேயே பூரண சரணாகதி அடையவும் கூடும். முக்தி விரைவில் சாத்தியமாகும். புகையற்ற ஈ சிகரெட் கதை ஞாபகம்தானே.

## மதுவின் பின்விளைவுகள்

மதுபானம் என்பது ஒரு பானமாக இருந்தபோதும் அது ஒரு மருந்து (drug) எனலாம். சற்று மனதைத் தளரச் செய்யும் ஆற்றலும் இருப்பதால் போதை மருந்து என்றே சொல்ல வேண்டும். மதுவானது பல்வேறு ஆபத்தான பின்விளைவுகளைக் கொடுப்பதை அறிவீர்கள். வருடாந்தம் 2.5 மில்லியன் இறப்புகளுக்கு மதுப்பாவனை காரணமாக இருக்கிறது.


மதுவானது காலாதிகாலமாக உபயோகிக்கப்பட்டு வருகின்ற பொருளாக இருக்கிறது. அதன் காரணமாகவே இன்றும் பழக்கத்தில் இருக்க முடிகிறது. இதுவே இன்று புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மருந்தாக இருந்தால் எந்த அரசும் இதற்கு அங்கீகாரம் அளித்திருக்கவே மாட்டாது. அந்தளவிற்கு ஈரல், மூளை, இருதயம் என உடலின் ஒவ்வொரு உறுப்புகளையும் சிதைத்து பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

ஆனால், மிகப் பாரிய பிரச்சினை மதுவை உபயோகிக்க ஆரம்பிப்பவர்களில் 10 சதவிகிதமானவர்கள் அதற்கு ஆட்படுவதுதான். குடியில் மூழ்கிவிட்டால் அதை விட்டொழிப்பது கஷ்டமாகும், புகைத்தல் போதைப் பொருட்கள் மற்றும் மதுவானது காதலை விட நெருக்கமானது. விட்டுப்பிரிய இடம் அளிக்காது. தன்னோடு ஒட்டி இணைத்துவிடும்.

ஆனால், முடிவு கோரமானது. அழிக்கவே செய்யும். மதுவின் மற்றொரு பிரச்சினை போதையில் கிளம்பும் வன்முறைதான். பறக்கும் விமானத்தின் கதவைத் திறக்க முயலும் அளவிற்கு அப்பன் -பிள்ளை என்று தொடரும் பரம்பரைப் போதையாளர்களும் உண்டு.

மதுப் பாவனையைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு வழி என்ன?

குடிக்க ஆரம்பிக்காமல் தவிர்ப்பதும், ஏற்கனவே ஆரம்பித்துவிட்டால் அதைக் கைவிடுவதும்தான். மஹாத்மா காந்தி மது ஒழிப்புப் பிரசாரங்கள் செய்தார். ஆனால் அவர் வழிகாட்டிய காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்தபோதும் அதை ஒழிக்க முடியவில்லை. மதுப்பாவனையைக் குறைப்பதற்கு ஏதாவது செய்கிறோம் எனச் சொல்லும் அரசுகள் யாவும் கஜானாப் பைகளை நிரப்பிக்கொண்டு பரமயோக்கியர் போன்று வெளிப்பாவனையைக் காட்டுகின்றன.



## எனவே போதைப் பிரியர்களுக்கான மாற்று வழி என்ன?

பாதுகாப்பான மதுபான வகை ஒன்றைக் கண்டுபிடிப்பதுதான்.

மதுவின் தாக்கமானது நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துவதாகும். நரம்புக் கலங்கள் தமக்கிடையே செய்திகளை அனுப்புவதற்கும் தொடர்பாடலுக்குமாக நரம்பியல் கடத்திகளைப் (neurotransmitter) பயன்படுத்துகின்றன. பலவித நரம்பியல் கடத்திகள் உடலில் உள்ளன.

இவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை அமைதிப்படுத்தும் சரியான மருந்துகளைப் பயன்படுத்துவதன் மூலம் மனிதனுக்கு மது கொடுக்கக்கூடிய அமைதியையும், சந்தோசத்தையும் கொடுக்கலாம். அவ்வாறு அமைதிப்படுத்தும் ஒரு இரசாயனம் Gamma amino butyric acid (Gaba) என்பதாகும். இது மூளை

யில் உற்பத்தியாகிறது. மருந்தாகவும் கிடைக்கிறது.இவ்வாறான இரசாயனங்களின் கலவைகளை மதுவிற்குப் பதிலாக உபயோகிக்கலாம். இவற்றில் மதுவின் தொக்கிய விளைவு இருக்காது என்கிறார் David Nutt என்பவர். மற்றவர்களுடன் மனம் விட்டுப் பேசி நல்லுறவை வளர்க்க முடியும். மதுவினால் ஏற்படும் வன்முறை போன்ற பின்விளைவுகளும் இருக்காது என்று மேலும் சொல்கிறார்.

தான் அவ்வாறான ஐந்து பொருட்களை இனம் கண்டுள்ளதாகவும் அவற்றை சரியான அளவுகளில் கலந்து பரீட்சித்திருப்பதாக எதச்னுஞீடிச்ண இல் எழுதிய ஒரு கட்டுரையில் தெரிவித்தார். அதை மது போன்ற திரவ வடிவில் தயாரிக்க வேண்டும். பாவனையாளர்களின் தேர்வுகளுக்கும் ஏற்ப பல்வேறு நிறங்களிலும் சுவைகளிலும் கொடுக்க வேண்டும் என்பதே தன் முன்னுள்ள சவால் என்கிறார்.

சரி இதற்கான ஆதாரங்கள் என்ன? எங்கே பரீட்சித்துப் பார்த்திருக்கிறார்.

தானே தனக்குப் பரீட்சித்துப் பார்த்ததாகக் கூறினார். தான் அதை உட்கொண்டபோது தனக்கு பதற்றங்கள் ஏதுமின்றி மனம் ஆறுதலாக இருந்ததாகவும், சுகமான தூக்கம் வந்ததாகவும் சொல்கிறார். பின்னர் அதற்கான மாற்று மருந்தைச் சாப்பிட்டதும் சில நிமிடங்களில் சகஜமான நிலைக்கு வந்துவிட்டதாகவும், ஒரு விரிவுரையையும் நடத்த முடிந்ததாகவும் சொல்கிறார்.

இந்த ஆய்வு பற்றி சில மதுபானத் தயாரிப்பாளர்களிடம் வினவிய போது அவர்களுக்கும் இதில் இத்தகைய தொக்கிய விளைவற்ற மதுவைத் தயாரிப்பதில் ஆர்வம் இருப்பதாகத் தெரிகிறது. பணம் கொட்டும் இடத்தைத் தம் கையினுள் அடக்குவதில் அவர்கள் கில்லாடிகள் அல்லவா?

## பாதுகாப்பானதுதானா?

கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது, போதை கொடுக்கும் மதுபோன்ற பானம். ஆனால் மது போன்ற பக்கவிளைவுகள் அற்றது. அதிலிருந்து உடனடியாக விடுபட்டு வேறு வேலைகளில் ஈடுபட வேண்டுமாயின் அதன் தாக்கத்திலிருந்து உடனடியாக மீள்வதற்கு மாற்று மருந்துகளும் உண்டு.

## ஆகா அற்புதமான ஐடியா

பார்க்கில், பார்ட்டியில் அல்லது வேறு எங்காவது அதை மசுக்கிடாமல் அடித்து சந்தோசமாக இருக்கலாம், வீடு போக முன்னர் மாற்று மருந்தை வாயில் போட்டுவிட்டு மனைவி முன் ஒன்றும் தெரியாத அப்பாவியாக பாவனை காட்டலாம்.

பள்ளிக்குப் போக முன் ஒரு டோஸ் அடித்துவிட்டு பள்ளி போகலாம். ஆசிரியர் வருவதற்கு முன்னர் மாற்று மருந்து அடித்துவிட்டு நல் மாணவனாக கலர் காட்டலாம்.

மொத்தத்தில் எல்லாமே ஏமாற்றுக் காரியங்கள்தாம். இவை எதுவுமே மனித மனதில் உண்மையான மகிழ்ச்சியை வளர்ப்பதற்கானவை அல்ல. அவற்றை மறக்கச் செய்து போலியான ஆனந்தத்தில் மூழ்க வைப்பவைதான். ஏற்கனவே இதை ஒத்த மருந்துகள் பாவனையில் இருக்கவே செய்கின்றன.

Benzodiazepine வகை மருந்துகள் அத்தகையன. இவை மனப்பதற்றத்தைத் தவிர்த்து அமைதிப்படுத்தக் கூடியவை. வழமையாக வலிப்பு, மதுவில் இருந்து விடுபடுவதற்காகத சைப்பிடிப்பு, தூக்கத்திற்கு என்று பல காரணங்களுக்காக உபயோகிக்கப் படுகின்றன. Diazepam, Chlordi-azepoxide போன்ற பலவற்றை உதாரணமாகச் சொல்லலாம். வலியம், லிபிரியம் போன்ற பெயர்கள் பலருக்கும் பரிச்சயமானவை. இவை போன்ற மருந்துகள் பல உள்ளன.

ஆனால் தன்விருப்பின் பேரில் வாங்கும் சுய பாவிப்பானவை அல்ல மருத்துவர்கள் நோயாளிகளுக்கு தமது கண்காணிப்பின் கீழ் மட்டுமே இத்தகைய மருந்துகளை உபயோகிக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட அளவுகளில் கட்டுப்பாடுகளுடன் மட்டும். ஏனெனில் அவற்றிக்கும் ஆட்பட்டு விடுபட முடியாத (addiction) நிலை ஏற்படும். அதனால்தான் பிரிஸ்கிரிப்சன் இன்றி வாங்க முடியாது.

இப்பொழுது தொக்கற்ற மது என்ற பெயரில் அவற்றை அல்லது அதை ஒத்தவைகளை வர்த்தக மயமாக்கப் பார்க்கிறார்கள். திறந்த பொருளாதாரம் போல திறந்த போதைப் பாவனை. ஒரு குழியிலிருந்து எடுத்து மற்றொரு படுகுழியில் வீழ்த்தும் விளையாட்டுதான். மற்றொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். மதுவிற்கு மாற்றாகத் தான் தேர்ந்தெடுத்த மருந்துகள் எவை என்பது பற்றி அவர் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. அது மட்டுமல்ல, அவை பரந்த மட்டத்தில் ஆய்வு செய்யப்படவும் இல்லை. சுய அனுபவம் பற்றியே பேசியிருக்கிறார். எனவே ''நம்பத் தகுந்தது அல்ல. கவலைக்கு உதவாது'' என்று தட்டிக் கழித்துவிடலாமா?

மனித மனங்களில் கவலையும் அதிருப்தியும் தன்னம்பிக்கையின்மையும் இல்லாது ஒழியும் வரை மாய உலகில் தன்னை மூழ்க வைத்து தற்காலிக சுகம் தேடும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

''யேசு வந்தார் பின்பு காந்தி வந்தார். மனிதன் மாறவில்லை.'' எனப் பாடினார்கள்.

அவன் மாறப் போவதுமில்லை. மது மருந்து மாத்திரைகள் என மனித மனதை மாய உலகில் பறக்க வைப்பதற்கான முயற்சிகள் தொடரவே செய்யும்.

''எம்மையும் எம் சந்ததிகளையும் நாம்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.'' எஸ்.ஜே.வி. ஞாபகம் வந்தால் நான் அதற்குப் பொறுப்பில்லை. ■

## கடைசிப் பக்கம்

# பாரை விட்டு அகற்ற வேண்டும் பார்த்தீனியத்தை...

Parthenium Hysterophorous என்னும் தாவரவியல் பெயரைக்கொண்ட இத்தாவரத்தை இன்று உலகில் பயங்கரவாதச் செடியாக மக்கள் பார்க்கின்றனர். தமிழ் நாட்டில் பார்ப்பானிய கொள்கைக்கு இத்தாவரத்தை ஒப்பிடுகின்றனர். இலங்கையில் வடபகுதி தமிழர் இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஒப்பானதாக இத்தாவரத்தைக் கருதுகின்றனர். இதுவும் அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்ட ஒரு செடிவகைத் தாவரமாகும். மனிதனுக்கு மட்டுமல்ல, கால் நடைகளுக்கும் இது ஒரு மரணச் செடியாகக் காணப்படுகின்றது.

உலகம் முழுவதும் பரவிய இச்செடி இன்று இலங்கையிலும், ஆழ வேரூன்றத் தொடங்கியுள்ளது. இலங்கையில் இந்திய ஆமியின் வருகையோடு இச்செடி இங்கு பரவி இருக்கலாம் எனக்கருதப்படுகின்றது. இதேபோன்று இலங்கையில் பரவியுள்ள சல்வீனியா என்னும் பீடையும் இரண்டாம் உலக யுத்தத்துடன் ஜப்பானால் இலங்கையில் பரவ விடப்பட்டதாகக் கருதப்படுகின்றது. தற்போது வட கிழக்கில் பரவியுள்ள இச்செடி மிக விரைவில் இலங்கை முழுவதும் பரவக்கூடிய வாய்ப்பு உண்டு. அவ்வாறு பரவ முன்னர் இதைக் கட்டுப்படுத்தி பூண்டோடு அழிக்க வேண்டியது சூழலை நேசிக்கும் எமது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



க.க.உதயகுமார்

இச்செடியின் சில விசேட தன்மையினால், இது வேகமாக பரவக்கூடிய தன்மையினைக்கொண்டுள்ளது. கீரை விதையிலும் பார்க்க சிறிய இதன் விதை காற்றினால் வேகமாக பரவக்கூடியதாகவுள்ளது. வரண்ட பிரதேசம், ஈரலிப்பான பிரதேசம் என எந்தச்சூழலிலும் தாக்குப் பிடித்து வளரக்கூடிய ஆற்றல் கொண்ட செடி. தரிசு நிலம், காடு, கரையோரங்கள் என எல்லா இடங்களிலும் எந்த வித இடையூறும் இன்றி வேரூன்றி வளரக் கூடியதாக இருப்பது இச்செடியைக் கட்டுப்படுத்துவதில் காணப்படும் இடர்பாடு ஆகும்.

பார்த்தீனியம் ஆண்டு முழுவதும் செழித்து வளரக்கூடியது. எல்லாச் சூழ்நிலைகளையும் தாங்கி வளரக் கூடியது. வாழ்க்கை வட்டம் முழுவதும் பூத்துக்காய்க்கும் தன்மை கொண்டது. இதனால் இது அதிக அளவில் விதைகளை உற்பத்தி செய்கின்றது. ஒரு செடி மட்டுமே ஒரு இலட்சம் விதைகளை உற்பத்தி செய்யக் கூடியது.

அதுசரி, ஏன் இந்தச்செடிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து எதிர்க்க வேண்டும். இச்செடியினால் ஏதும் நன்மைகள் இல்லையா? நன்மைகள் சில உண்டு. எனினும் தீமைகளே மிக அதிகமாகக்காணப்படுகின்றது. அவுஸ்திரேலிய அரசாங்கம் தனது வரவு-செலவுத்திட்டத்தில் வருடந்தோறும் பெருந்தொகையை இச்செடியை அழிக்க ஒதுக்குகின்றது. இலங்கையிலும் சல்வீனியா எனப்படும் ஜெட்வேகத் தாவரத்தை (ஆகாயத்தாமரை) கட்டுப்படுத்த பெருந்தொகையை வருடந்தோறும் இல ங்கை அரசு செலவிடுவது போன்று இதற்கும் செலவிட வேண்டிய நிலை தோன்றலாம். அப்படி இந்த செடியினால் என்ன நன்மையுண்டு, இச்செடி மனித உடலின் குருதியில் காணப்படும் வெண்குருதிக் கலங்களை அழிப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, விஞ்ஞானிகள் இதனை குரங்கில் செலுத்தி ஆய்வு செய்தபோது அதே அவதானம் முடிவாகக் கிடைத்ததால் கான்சர் நோய்க்கான மருந்து அல்லது நோய்த் தாக்கத்தைக் குறைக்கக் கூடிய மருந்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்கின்றன. எனினும் இதனால் ஏற்படும் தீமைகள் மனித குலத்திற்கே ஆபத்து என்பதனால் இச்செடியைப் பூண்டோடு அழிக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை. முதலில், இந்தப் பூவில் இருந்து காற்றில் பரவும் மகரந்த மணிகள், குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும், ஆஸ்துமா நோயை ஏற்படுத்துகின்றது. பெரும்பாலானோருக்கு இச்செடி ஒவ்வாமையை உண்டு பண்ணுகின்றது. உடலில் அரிப்பையும், தோல் நோயையும் ஏற்படுத்துகின்றது. கண்களில் எரிச்சலை ஏற்படுத்தி பார்வைக் குறைபாட்டிற்கு காரணமாகின்றது. சுவாசக்குறைபாட்டு நோயும் ஏற்படுகிறது.

கால்நடைகள் இதனை உட்கொள்ளும் போது அவற்றின் நிறை குறைகின்றது. அவற்றில் இருந்து பெறப்படும் பால் கசப்பு சுவையுடன்

(58ஆம் பக்கம் பார்க்க...)

Naanayam தமிழில் வெளிவரும் முதல்தர வர்த்தக, வாணிப இதழ்

# நாணயம்

Your Weekly Financial Digest




இலங்கை பத்திரிகை வரலாற்றில்

முதன்முறையாக வணிகச்செய்திகளை

முற்றுமுழுதாக சுமந்து

வெளிவரும் ஒரே பத்திரிகை




மேலும்

வணிகவியல்

பொருளியல்

மாணவர்களுக்கும்

ஆசிரியர்களுக்குமான

புதிய தகவல்கள்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் வெளியீடு

# பிள்ளைப் பேறு இன்றி வாழ்க்கையை கண்ணீருக்கு மத்தியிலும் வேதனைக்கு மத்தியிலும் கடந்து வந்த உங்களுக்கு இது ஒரு திவ்யமான அமிர்தம்.

இந்த அவுடதத்தின் பிரதான குணாதிசயங்கள்.

- ஆண் பெண் இரு பாலாரினதும் இனப்பெருக்க சக்தியைத் தூண்டி வளர்ச்சியடையச் செய்து பிள்ளைப் பேறுகளை உருவாக்கும்.
- இரசாயன மற்றும் பாலுறவைத் தூண்டும்
- உடல் உள சக்தியை மேம்படுத்தும்
- இளமையிலேயே முதிர்ச்சியை உருவாக்கும் நிலைமையை கட்டுப்படுத்தி இளமையைப் பெற்றுத் தரும்.
- ஆண்களின் சக்தியை வளர்ச்சியடையச் செய்யும்.
- பெண்களுக்கு பாலுறவின் மேல் இருக்கும் உதாசீனத்தைத் தவிர்க்கும்.
- பெண்களின் மாதவிடாய் வட்டத்தை சீராக்கும்.
- மானசீக பலவீனத்தை தவிர்த்து மன மகிழ்ச்சியை உருவாக்கும்.
- மூளை வளர்ச்சியை மேம்படுத்தி ஞாபக சக்தியை வளர்ச்சியடையச் செய்யும்.




## DIVYAMRITHAM

## දිව්‍යමෘතම්

## திவ்யாமிருதம்

மகிழ்ச்சியான தாம்பத்ய வாழ்க்கைக்கான ஆசீர்வாதம்.

**IMPORTED & DISTRIBUTED BY**

**GEETHREE PHARMACEUTICALS**

*Importers of Ayurvedic Western Drugs*

No. 756A, Station Road, Pannipitiya, Sri Lanka.

Tel: 071 1826667, 071 9338173

email: geethreepharma@gmail.com

Reg. No. 03/01/AG/12/357

**Our Dealers எமது விநியோகத்தர்கள் : 077 3655123, 0711 826667, 071 9338173**

♦காலி, மாத்தறை 077 3655123 ♦கடுவெலை 077 6354520, 0112 548178 ♦கடுவெலை எல்.ஜீ.என்டர்பிரைசஸ் ♦ஹோமாகம, பன்னிபிடிய- சுவஹச ஃபாமசி ♦கொட்டாவை நியூ சிடிபாமசி ♦மஹரகம- சிட்டி பாமசி ♦நுகேகொடை- சேம்ஸ் பாமசி ♦பிலியங்கல- ரோயல் பாமசி ♦கிருலப்பனை- மெட்ரோ பாமசி ♦ராஜகிரிய- லங்கா பாமசி ♦புறக்கோட்டை- மதநாயக்க பாமசி ♦மருதானை- சிரா்ரா பாமசி ♦தெஹிவளை- சேப்வே பாமசி, மாஸ்டர்ஸ் பாமசி ♦கல்கிசை- த மவுண்ட பாமசி ♦ ராவதாவத்தை- விஜய பாமசி ♦பாணந்துறை- டொன் பாமசி, செத்மா பாமசி ♦பத்தரமுல்லை- தினித் பாமசி ♦கலல்கொட, பன்னிப்பிடிய- ஷானி மெடிகல் ♦மாலபை- செனாரா பாமசி, அனுஷ பாமசி ♦உடுபில- கே பாமசி ♦வெலிவேரியை- ரோயல் பாமசி ♦ தெல்கொட- ரகால் பாமசி ♦கம்பஹா- ஒசில் பாமசி (மிரிஸ்வத்தை) கம்பஹா மெடிகல்ஸ், அனுர பாமசி, கயான் ஏஜென்சிஸ், மெட்ரோ பாமசி ♦கடவத்தை- கடவத்தை ஒசுசல ♦மஹர- லங்கா பாமசி ♦கிரிபத்கொடை- சரசி பாமசி ♦ அவிசாவளை- எஸ்.ஓ.எஸ். அநுர பாமசி ♦கெலியகொட- சுவதெச பாமசி, துசித்த பாமசி ♦ரட்னபுர- யூகே. பாமசி, லங்கா மெடிகல்ஸ் ♦அம்பலாங்கொடை- யூனியன் டிரக்ஸ் ♦அளுத்கம- ராஜபக்ஷ மெடிக்கல்ஸ் ♦வாத்துவ- நதிஷா பாமசி, கல்யாணி பாமசி, ரந்திமா பாமசி 33) கண்டி- ராஜ் பாமசி, நியூ லீ மெடிகல்ஸ், ஹீரசகல ரோயல் பாமசி ♦ கடுகஸ்தோட்டை- ரோயல் பாமசி லங்கா பிரைவேட், ரொசல் பாமசி லங்கா பிரைவேட் 52/குட்வில் ♦ மடவல ரோட் கடுகஸ்தோட்டை ரோயல் பாமசி லங்கா (பிரைவட்) ♦ அக்குரனை - த ஹெல்த் பஸ்ட் ♦ அலவத்துகொட- மல்டிபாமசி ♦ மாத்தளை- சிட்டி பாமசி, மல்வன்ன பாமசி ♦ ரோச வீதி மாத்தளை- ரோயல் பாமசி கொங்காவெல பாமசி ♦ தம்புள்ளை- ரங்கிரி ஒசுசல, ஆஷா பாமசி, சக்தி பாமசி ♦ பிடிபன்னை- சுதசிங்க பாமசி ♦ நீர்கொழும்பு- சுவசரன ஒசுசல, கிறிஸ்டல் பாமசி, லங்கா பாமசி ♦ பரகஹதெனிய - ஒன்ஸ்பொட் பாமசி ♦ மஹவத்தகம- நியூ சிட்டி பாமசி ♦ மல்லவபிடிய- சென்ரல் பாமசி, நியூமெடிகல்ஸ் ♦ குருநாகலை- நியூ பாமசி, நியூ மெடிகல்ஸ்

இந்த அவுடதத்தை உபயோகிப்பதால் இடைத்தாக்கங்கள் எதுவும் ஏற்படாது என்பதையும் பாலுறவைத் தூண்டும் ஹோமோன்கள் மற்றும் மேலைத்தேய அவுடதங்கள் எதுவும் உள்ளடக்கப்பட வில்லை என்பதையும் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் அத்தாட்சிப் படுத்தியுள்ளது.


Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.